# தேர்ந்த கட்டுரைகள்



உங்கக் கடமையை....
ஓராண்டு நினைவாக
16-01-1994

வெளியீடு
22



...bha's
...king
...வின்
...ந்தனை



அழிக்கப்பட்ட T-55 டாங்கி

JPL
C3290

தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டு வாரியம்
தமிழீழம் - 15-12-1998.

PUBLIC LIBRARY
JAFFNA.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# தேர்ந்த

# கட்டுரைகள்

நூலகம்
மாநகராட்சி மன்று
29-9-1994
யாழ்ப்பாணம்

KOHA
JPL

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

**வெளியீடு - 22**

102037

PUBLIC LIBRARY
JAFFNA

---

**தமிழீழ விடுதலைப் புலிகள்,**
**வெளியீட்டு வாரியம்,**
**தமிழீழம்.**

**15-12-1993**

## உள்ளே...

322.42/2

விடயம் பக்கம்


1. பொஸ்னியாவிற்கு சமாதானத்தைக் கொண்டுவர மிகுந்த சிரமப்பட வேண்டியுள்ளது. 1 — 5

2. பாலூட்டும் அன்னையரை ஆதரிப்பதற்காக அன்னையர் சிநேகபூர்வமான வேலைத்தலங்களை உருவாக்குதல். 6 — 12

3. இலங்கையின் மனித உரிமை மீறல்கள். 13 — 15

4. ஈழத்திற்கு ஆதரவு தேடுபவர்கள் தரும் தவறான தகவல். 16 — 21

5. கொலம்பியாவின் மயக்கமுடியாத கெரில்லாப் போர் வீரர்கள். 22 — 25

6. மனித நலனுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்களைப் பின்பற்ற ஊக்கமளித்தல். 26 — 29

7. சிறிய எஸ்ரோனியா ரஷ்யாவின் கால் விரல்களில் மிதிக்கவில்லையா? 30 — 34

8. விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தைக் காப்பாற்றித் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதையே தமது முதலாவது குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். 35 — 41

9. பிள்ளைகள்: உலகத்தின் ஒளி. 42 — 46

KOHA JPL


| | | |
|---|---|---|
| 10. | யாழ்தேவி நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாக இராணுவத் தளபதி கூறுகின்றார். | 47 — 51 |
| 11. | என்ன தவறு நடந்தது? பூநகரியில்! | 52 — 62 |
| 12. | விடுதலைப்புலிகள் பெரும் வெற்றியை ஈட்டியுள்ளனர். | 63 — 72 |
| 13. | பூநகரி:- பிரபாவின் போர்த்திறச் சிந்தனை. | 73 — 80 |
| 14. | சிங்கள இராணுவச் சிப்பாய்களின் பூநகரி யுத்த அனுபவங்கள். | 81 — 87 |
| 15. | கேணல் கிட்டு அவர்கள் உட்பட பத்து வேங்கைகளின் ஓராண்டு (16.01.199[illegible]) நினைவாக. | 88 — 89 |
| 16. | இந்தியா புரிந்த கொலையும் ஐரோப்பாவின் மௌனமும். | 90 — 100 |
| 17. | ஒரு ஜனநாயகவாதியின் சர்வாதிகாரம்! | 101 — 104 |
| 18. | நகரமயமாக்கல் - மனித இனத்திற்கு அருட்கொடையா அல்லது அழிவா? | 105 — 108 |
| 19. | கணனிகள் எப்படி உரையாடுகின்றன! | 109 — 112 |
| 20. | இருட்டில் ஒரு குருட்டு யுத்தம். | 113 — 117 |
| 21. | உதிரி உறுப்புக்கள்: விரைந்து பரவும் நோய். | 118 — 120 |

[stamp]

# எப்படி எம் மண்ணைப் பிரிந்து வாழமுடியும்

எப்போது எமது மண்ணிலே கால்வைப்பேன் என்று ஒவ்வொரு கணமும் ஏங்கிக் கொண்டிருக்கிறேன். எனது தாயகத்திலே எங்காவது ஒரு மூலையிலேனும் என்னவேலையாவது செய்து கொண்டிருந்தாலே, அது மனதுக்கு முழு அமைதியைக் கொடுக்கக்கூடியது.

எமக்கென்று ஒரு சுதந்திர நாடு அமையும்போது தான் ஒவ்வொரு தமிழனும் தலை நிமிர்ந்து வாழமுடியும். என்னால் வெளிநாடுகளில் வாழமுடியவில்லை: எனது சுபாவம் அப்படி. இப்போதுதான் புரிகிறது, நாம் எம் மக்களையும் மண்ணையும் எவ்வளவு தூரம் நேசிக்கின்றோம் என்பது. இன்னும் எத்தனை பிறவி எடுத்தாலும் எனது மக்களுக்கும் மண்ணுக்கும் சேவை செய்யும் பேறு எனக்குக் கிடைக்கவேண்டும். நாம் எமது மண்ணில் ஒவ்வொரு அடி நிலத்துக்கும் போரிட்டவர்கள். ஒவ்வொரு வீட்டைப்பிடிப்பதற்கும் போரிட்டவர்கள் எப்படி எம் மண்ணைப் பிரிந்து வாழமுடியும்?

கேணல் கிட்டு

---

கிட்டு, ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக்கொண்டது

கிட்டு நீ சாகவில்லை.

ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்.

*தமிழீழ தேசியத் தலைவர்*

**வே. பிரபாகரன் அவர்கள்**

# பொஸ்னியாவுக்கு சமாதானத்தைக் கொண்டுவர மிகுந்த சிரமப்பட வேண்டியுள்ளது

(டெயிலி நியூஸ் — 7.9.1993)

வின் ஒக்கேர்ஸ்

*எங்கெல்லாம் இனங்களுக்கிடையிலான போர் நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் சமுதாய அழிப்பு, நிலங்கள் பலாத்காரமாக கைப்பற்றப்படுதல், மக்கள் இடம் பெயர்தல், பட்டினிச்சாவு, தொற்றுநோய் பரவுதல் போன்ற துன்பகரமான நிகழ்வுகள் இடம்பெறுவது இயல்பாகிவிட்டது.*

எங்கெல்லாம் இனங்களுக்கிடையிலான போர் நடைபெறுகின்றதோ, அங்கெல்லாம் சமுதாய அழிப்பு, நிலங்கள் பலாத்காரமாகக் கைப்பற்றப்படுதல், மக்கள் இடம் பெயர்தல், பட்டினிச்சாவு, தொற்றுநோய் பரவுதல் போன்ற ஒரே தன்மையான துன்பகரமான நிகழ்வுகள் இடம்பெறுவது இயல்பாகிவிட்டது.

அழிவை ஏற்படுத்தும் உள்நாட்டுப்போர்கள் தென்னாசியாவில் எப்படி நடைபெறுகின்றனவோ, அதைப்போல் அழியும் நிலையிலுள்ள பொஸ்னிய ஹெர்செகோவினாவிலும் நடைபெறுகின்றது. பொஸ்னியாவின் நிலப்பரப்பைக் கைப்பற்றிக் கொள்வதற்காக இனத்தைத் தூய்மைப்படுத்தல் என்ற போர்வையில் சேர்பியர்கள், குரோசியர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய மூன்று இனத்தவர்களுக்கிடையில் நடைபெறும் மும்முனைச் சச்சரவின் அபாயத்தைக்கண்டு மேற்குலக நாடுகள் விழிப்படைந்துள்ளன.

சீர்குலைந்திருந்த யூகோசிலோவியாவிலிருந்து பிரிந்து செல்லும் தீர்மானத்தை முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பொஸ்னியா அரசாங்கம் ஒன்றரை ஆண்டுகளுக்குமுன் வைத்திருந்தது. அன்றிலிருந்து முஸ்லிம்களும்,

குரோசியர்களும் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் நிலப்பரப்பைக் கைப்பற்ற சேர்பியர்கள் பயங்கரமான நடவடிக்கையை மேற் கொண்டு வருகின்றனர். தொடர்ந்தும் இரத்தம்சிந்த வைத்துக் கொண்டிருக்கும் இந்தப் பூசலுக்கு அரசியல் தீர்வைக் காண் பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற் கென ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தவேளையில், முஸ்லிம்கள் வாழும் நிலப்பரப்பைக் கைப்பற்றுவதற்காக சேர் பியர்களும், குரோசியர்களும் முஸ்லிம்களுக்கெதிராகப் போராடு கின்றார்கள்'

பொஸ்னியாவில் வாழ்ந்துவரும் முஸ்லிம் மக்களைக் குறைப் பதை முக்கிய நோக்காகக் கொண்டே சேர்பியர்களின் இராணு வம் அவர்களுக்கு எதிராக கடும் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளது. இதன் காரணமாக இன்னும் கூடுதலான நிலங்கள் சேர்பியர் களினதும், குரோசியர்களினதும் கட்டுப்பாட்டில் வந்துவிடும் எனக்கருதப்படுகின்றது. ''இனத்தைத் தூய்மைப்படுத்தல்'' என்று கூறுவதன் அர்த்தம் இதுதான். இந்தியாவின் வடமேல் மாநில மான பஞ்சாப்பிலுள்ள சிறுபான்மையினரான இந்துக்களுக்கு எதிராக சீக்கியத் தீவிரவாதிகள் கட்டவிழ்த்துவிட்டுள்ள பயங் கரமான நடவடிக்கையிலுள்ள தந்திரோபாயம், மற்றும் குறிக் கோள் ஆகியவற்றுக்கும் இதற்கும் வித்தியாசமில்லை. இலங் கையின் கிழக்குப்பகுதியில் விடுதலைப்புலிகளின் விட்டுக்கொடுக் காத போர்க்கிற்கும் இதற்கும் ஒற்றுமை இருப்பதைக் காணக் கூடியதாகவிருக்கின்றது.

பொஸ்னியாவில் தளநிலைமையில் தற்போது சிறப்பான அம்சங்கள் பின்வருமாறு நாட்டின் சனத்தொகையில் 40 விகிதத் தினரான முஸ்லிம் மக்கள் அதன் 10 விகிதமான நிலப்பரப்பி லேயே தற்பொழுது வாழ்கின்றார்கள். அங்கொன்றும் இங்கொன் றுமாக வாழும் இம்மக்கள், எதிர்க்கும் ஆற்றல் இல்லாதிருக் கின்றார்கள். இதற்கு நேர்மாறாக நாட்டின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குச் சற்றுக் கூடுதலான எண்ணிக்கையைக் கொண்ட சேர்பிய மக்கள் நாட்டின் நிலப்பரப்பின் 70 விகிதத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்கள்.

ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளும், ஐக்கிய நாடு கள் சபையும் ஜெனிவாவில் ஆரம்பித்த சமாதான முயற்சிகள் நிலப்பரப்பைக் கைப்பற்றுவதற்கான போட்டியைத் தூண்டிவிட உதவியுள்ளதைப்போலத் தோற்றுகின்றது. ஜனவரித் திங்களில் முன்வைக்கப்பட்ட வான்ஸ் ஓவன் (VANCE-OWEN) சமா

தானத்திட்டம் பொஸ்னியாவில் பல இன மக்களைக்கொண்ட ஓர் அரசை உருவாக்குவதற்கான முக்கிய நோக்கைக் கொண்டிருந்தது. இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படாததால் சண்டை பரவலாக ஆரம்பித்தது. அண்மையில் முன்வைக்கப்பட்ட ஓவன்-ஸ்ரொல்ரென் பேர்க் (OWEN - STOLTENBERG) சமாதானத் திட்டத்தை சேர்பியர்களும், குரோசியர்களும், முஸ்லிம் தலைவர்களும் வரவேற்றபோதிலும் தொடர்ந்தும் சண்டை நடைபெறுகின்றது. சேர்பியர்களும், குரோசியர்களும் நிலத்தைக் கைப்பற்றுவதன்மூலம் தாங்கள் பெற்ற வெற்றியை நிலைநாட்டி பேரம் பேசுவதற்கான தங்கள் வாய்ப்பை வலுப்படுத்துவதாகத் தோன்றுகின்றது.

தற்போது முன்வைக்கப்பட்ட சமாதானத்திட்டம் முன்னையதைவிட முற்றிலும் வேறுபட்டதாகவிருக்கின்றது. பல இன மக்களைக் கொண்ட ஒற்றை ஆட்சிக்குப் பதிலாக மூன்று இன மக்களைக்கொண்ட குடியரசுகளின் கட்டமைப்பு ஒன்று உருவாகுவதையே இது நோக்கமாகக் கொண்டுள்ளது. சேர்பியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், குரோசியர்களுக்குமான இந்த மூன்று குடியரசுகளும் சுதந்திரமாக இயங்கும். இவர்கள் தங்களுக்கெனத் தனித்தனி சட்டமன்றங்களையும், நீதி பரிபாலன சேவைகளையும், நிர்வாக முறைகளையும் கொண்டிருப்பதுடன் சொந்த அரசியல் யாப்பையும் கொண்டிருப்பர்.

வெளிநாடுகளுக்கிடையிலான உறவுகள் சம்பந்தமாக இவர்கள் சிறிய பங்களிப்பை ஆற்றலாம் எனினும் வெளிநாடுகளுடனான ஒப்பந்தத்தை மட்டுப்படுத்தப்பட்ட சில விடயங்களுக்காக மாத்திரம் செய்துகொள்ளலாம். இருப்பினும் வெளிநாட்டு விவகாரம், பல்தேசிய வர்த்தகம், அரசியல் யாப்பிற்கான நீதிமன்றம் போன்ற அரசாங்க நிறுவனங்கள் நடுவன் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும். உருவாக்க முன்வைக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டிணைப்பு பொஸ்னியா ஹெர்செகோவினா மக்கள் ஐக்கிய குடியரசு என அழைக்கப்படும்.

சேர்பியர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக அமெரிக்கா அச்சுறுத்திய வேளையிலும் முப்பிரிவினருக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்ட தற்போதைய பேச்சுவார்த்தையில், மற்றைய முக்கியமான விடயங்களிலும் உடன்பாடு காணக்கூடியதாகவிருந்தது. உதாரணமாக நாட்டின் நிலப்பரப்பின் 30 40 விகிதத்தை முஸ்லிம் மக்கள் கொண்டிருக்கலாம் என உடன்பாடு காணப்பட்டது. இருப்பினும் இந்த

102037

நிலப்பரப்பு இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. இது கடினமான பணியாகவிருக்கும் எனக் கருதப்படுகின்றது.

தற்போது; கிழக்குப் பொஸ்னியா முழுவதும் சேர்பியர்களின் கைகளிலேயே உள்ளது. இந்தப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது. முஸ்லிம்களின் வாழும் பட்டணங்களுமான புரோகோ, (BROKO) சூர்ணிக் (ZOORNIK), விலாசெனிக்கா (VIASCENICA), பிரற்றுநொக் (BRATUNOC), விசெகிரெட் (VISEGRAD) போக்கா (FOCA) ஆகியவற்றை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு சேர்பியர்கள் விரும்புவார்கள். ஆனால் இந்தப் பட்டணங்களைக் கைவிடுவதற்கு முஸ்லிம்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

இருப்பினும், பொஸ்னியாவின் தலைநகரான சரஜெவோவின் எதிர்காலத்த நநிலைபற்றி உடன்பாடு எட்டப்பட்டதென்பது சச்சரவில் ஈடுபட்டிருப்பவர்கள் இணங்கிப்போவார்கள் என்பதற்குச் சான்றாகவிருக்கின்றது. இந்த உடன்பாட்டின்படி சரஜெவோ ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அதன் நிர்வாகம் ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் சபையினால் நடாத்தப்படும்.

இந்தச் சமாதானத்திட்டம் விரைவில் செயல்வடிவம் பெற வேண்டுமாயின் அதற்கு பல்தேசிய சமூகம் தனது உறுதியான பங்களிப்பை வழங்கவேண்டும். சேர்பியர்களுக்கான எதிராக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுமுன் ஐக்கிய நாட்டுச் சபையின் சமாதானத்தைப் பெறுவதற்கு அமெரிக்காவின் தலைமையிலான வடஅத்திலாந்திக் ஒப்பந்தக் கூட்டமைப்பு (NATO) இணங்கியுள்ளது.

இது ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாக இருந்த போதிலும், ஐக்கிய நாடுகள் சபை தன் பங்களிப்பை வழங்குவதன்மூலம் சட்டத்தை நிலைநிறுத்தி சேர்பியர்களை அடிபணியச் செய்யும்வரை சமாதானப் சேச்சுவார்த்தைகளில் எந்தவிதமான முன்னேற்றத்தையும் காணமுடியாது.

உலகத்திலுள்ள முஸ்லிம் மக்கள் நிதிகோரி முறையிடுகின்றனர். ஐக்கிய நாடுகள்சபைமூலம் முஸ்லிம்களுக்கு என எடுத்துச் செல்லப்படும் மனிதநேய உதவிகள் ஒன்றில் சேர்பியர்களால் அல்லது குரோசியர்களால் தடுக்கப்படுகின்றன. உதவி பெறும் மக்களுக்கு உதவிகள் தாமதமாகவே சென்றடைகின்றன. இதைப் போன்ற சச்சரவுகள் நிலவும் இடங்களில் தனது பங்கு எப்படிப்

பட்டதாக இருக்கவேண்டும் என மறுபரிசீலனைசெய்ய இது ஐக்கிய நாடுகள் சபையைக் கட்டாயப்படுத்துவதுடன், இப்படியான சிக்கல்களை எப்படி எதிர்கொள்ளவேண்டும் என்பதையும் மதிப்பீடுசெய்ய உதவுகின்றது.

உலகத்திலேயுள்ள "திருத்தமுடியாதவர்கள்" எனக் கருதப்படுபவர்களுடன் அமெரிக்கா தனது உறவு சம்பந்தமாக இரட்டைப்போக்கைக் கடைப்பிடிப்பதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. சோமாலியாவின் தலைவரான திரு. அயிதீட் (AIDEED) அவர்களையும், ஈராக்கிய தலைவரான திரு. சதாம் குசைன் (SADAM HUSSEIN) அவர்களையும் அடிபணிய வைத்திருக்கும் அமெரிக்கா பொஸ்னியாவிலுள்ள சேர்பியர்கள் தாங்கள் நினைத்ததைச்செய்ய அனுமதித்துள்ளது.

அமெரிக்கா அகில உலகிலுமுள்ள சட்டத்தையும், நீதியையும் மதிப்பதை நிரூபித்துக்காட்டவேண்டியுள்ளது. பல்தேசிய சட்டத்தையும், பண்பையும் மீறுபவர்களுக்கு எதிராக தன்னால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளமுடியும் என்பதையும் அது நிரூபித்துக்காட்டவேண்டும்.

அமெரிக்கா இதைச் செய்யும்வரை இணங்கிப்போகாததும், இலகுவில் ஆத்திரமூட்டும் போக்கைக் கொண்டதுமான நாடுகளே உலகத்தில் இருப்பதை அதனால் காணமுடியும்.

## அதன் எதிர் எப்படி?

பேர்னாட் ஷா தனது பணியில் உச்சநிலையிலிருந்த பொழுது ஒரு புகழ்பெற்ற நடிகை அவரை அணுகி தான் அவரை திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறினார். ஷா நித்திய பிரமச்சாரி என்பது உங்களுக்குத் தெரியும். அவள் கூறினாள், திரு. ஷா அவர்களே உங்களது மூளையும் எனது பெரும் அழகும் ஒன்றுசேர்ந்து ஒரு திறமான குழந்தைபிறந்தால் எப்படியிருக்கும் என்று எண்ணிப்பாருங்கள் என்றார்.

பேர்னாட் ஷா சில வினாடிகள் சிந்தித்துவிட்டு கூறியவை அந்த நடிகையைத் தலைகுனியச்செய்தது. அவர் கூறினார், "அம்மணி, அக்குழந்தை எனது அழகையும், உங்கள் மூளையையும் பெற்றால் எவ்வாறு இருக்குமென்ற நிலையைச் சிந்தித்துப்பாருங்கள்."

# "பாலூட்டும் அன்னையரை ஆதரிப்பதற்காக அன்னையர் - சிநேகபூர்வமான வேலைத்தலங்களை உருவாக்குதல்"

## "வேலை கொடுப்பவர் எவ்வளவு தூரம் உதவ விரும்புகிறார்?"

(சண்டே ஒப்சேவர் — 22.08.1993)

ஆக்கம்: சுரோல் அலோசியஸ்.

*ஒரு தாயானவள் எவ்வளவு கூடுதலான காலத்திற்குத் தன் குழந்தைக்கு பாலூட்டுகின்றாளோ, அக் குழந்தையும் மிக ஆரோக்கியமாக இருக்கும். இது ஒரு பொதுவான அபிப்பிராயமாகும். தாய்ப்பால் குடிக்கும் குழந்தையானது தொற்று நோய்கள் தாக்க முடியாத உறுதியான உடல் அமைப்பைக் கொண்டிருக்கும். ஆண்டொன்றுக்கு ஆயிரக்கணக்கான குழந்தைகள் இறப்பதற்கு காரணமான வாந்திபேதி நோயும் இவர்களைப் பாதிக்காது என்றும் பல ஆய்வுகளின்பின் தெரிய வந்துள்ளது. அத்துடன் பாலூட்டுவதானது தாய் – சேய் உறவை பலப்படுத்துகின்றது என்றும் அறிய வந்துள்ளது. வேலைக்குப் போகும் பெண்களை அவர்களின் தொழிலானது பிள்ளைகளிடமிருந்து அவர்களைப் பிரிப்பதனால் பாலூட்டல் மிக முக்கியமாகக் கருதப்படுகிறது.*

"தற்போது தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவிப்பதற்காக உலகளாவியரீதியில் பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால் வேலைக்குப் போகும் அன்னையருக்கு இதைச் செய்வதற்கு வசதிகள் குறைவாக கரணப்படுகின்றது. இந்நேரத்தில் மிகவும் முக்கியமானதொன்று, வேலைபார்க்கும் அன்னையருக்கு சிறந்த வாய்ப்புகள் அளிப்பதாகும். பிற நாடுகளில் உள்ளதுபோல் வேலைசெய்யும் இடத்தில் ஒரு பிள்ளை பராமரிக்கும் நிலையம் (CRECHES) அமைப்பதன்மூலமோ, அல்லது ஒரு நடமாடும் பிள்ளை பராமரிப்பு நிலையம் அமைப்பதன்மூலமோ உதவலாம்.

இலங்கையில் இவ்வாறான வசதிகள் இல்லாமலிருப்பது மிக வருந்தத்தக்க விடயமாகும். பெரும்பாலானோர் இதற்காக குரல் எழுப்பினாலும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு தயங்குகின்றனர். இவ்வழியில் பிறநாடுகளை பின்பற்றுவதற்கான நேரம் வந்துவிட்டது.''

மொசம்பிக் நகரிலுள்ள மரமுந்திரி பதனிடும் தொழிற்சாலை ஒன்றில் வேலைசெய்யும் இளம் அன்னையர்க்கென தொழிற்சாலைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள பிள்ளை பராமரிப்பு நிலையத்திலுள்ள தமது பிள்ளைகளுக்கு பாலூட்டுவதற்காகத் தினமும் இருதடவைகள் செல்கின்றார்கள். இவர்கள் இருவராக இணைந்து வேலைசெய்து ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கின்றனர். புட்டிப்பாலூட்டும் அன்னையரின் குழந்தைகளிலும் பார்க்க இவர்களின் குழந்தை மிக ஆரோக்கியமாக இருப்பதாக இத்தொழிற்சாலையின் அதிபர் மிகப்பெருமையாகக் கூறுகிறார்.

தாய்லாந்து, இந்தியா போன்ற நாடுகளில் கட்டப்பட்டிருமான தலங்களில் வேலைசெய்யும் பெண்களின் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு ஏதுவாக நடமாடும் பிள்ளை பராமரிப்பு நிலையங்கள் அக்கட்டட தலங்களைச்சுற்றி இயங்குகின்றன.

பிலிப்பைன்ஸ் நாட்டில் வேலைபார்க்கும் பெண்களுக்காக ''அருகான்'' (ARUGAAN) என்றழைக்கப்படும் ஒரு மாற்று பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் தமது குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கான நேரத்தை செலவிடமுடியாத பெண்களுக்காக ''வெட் நர்ஸ்'' (WET NURSE), பிறர் பிள்ளைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்களின் உதவி அளிக்கப்படுகின்றது. இக் குழந்தை பராமரிப்பு நிலையத்தை நிர்வகிக்கும் பாலூட்டும் அன்னையர் தமது குழந்தைகளுக்கு பாலூட்டுவதுடன் தம்முடன் வேலைசெய்யும் சக பெண் ஊழியர்களின் குழந்தைகளுக்கும் பாலூட்டுவதுண்டு.

வேலைபார்க்கும் அன்னையர் குழந்தை பராமரிப்புடன் வேலைபார்க்கும் பொறுப்புகளை சமநிலை ஆக்குவதற்கு போராடும்போது மேற்கூறிய சில உதாரணங்கள் அவர்களின் போராட்டத்தை இலகுவாக்க உதவுகிறது. அதிகமான தொழில் அதிபர்கள் தாய்க்கும், பிள்ளைக்கும் பாலூட்டுவதின் முக்கியத்துவத்தை உணர்ந்தமையே இதற்குக் காரணம்.

இவ்வுணர்வு தோன்றுவதற்கான காரணம் ''உலக பாலூட்டும் நடவடிக்கை கழகத்தினால் (WORLD ALLIANCE FOR

BREAST - FEEDING ACTION "WABA") தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்ட புதிய நடவடிக்கையாகும்.

கடந்த ஆண்டு இக்கழகமானது "குழந்தைகளுக்கான சிநேகபூர்வ வைத்தியசாலையின் ஆரம்பம்" என்ற தலைப்பில் "உலக பாலூட்டும் வாரம்" (WORLD BREAST - FEEDING WEEK "WFB") ஒன்றை நடைமுறைப்படுத்தியது. இதன் விளைவாக 70 நாடுகள் பாலூட்டுவதின் முக்கியத்துவத்தை அங்கீகரித்ததுடன் அநேகமானோர் குழந்தை சிநேகபூர்வமான வைத்தியசாலைகள் அமைப்பதிலும் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாண்டுக்கான தலைப்பு அன்னையர் - சிநேகபூர்வமான வேலைத்தலங்கள் என்பதாகும். குறிப்பாக தொழில் அதிபர்களின் இல்லங்களுக்கு அப்பால் வேலை சம்பந்தமான சூழலில் இருக்கும் தாய்ப்பாலூட்டும் பெண் ஊழியர்களுக்கு, உதவுவது ஒரு சவாலாக அமைந்துள்ளது.

இந்த கழகமானது தனது துண்டுப்பிரசுரம் ஒன்றில், பெண்கள் தங்களது மகப்பேறு விடுமுறை முடிந்து வேலைக்குத் திரும்பியபின் பாலூட்டுவதை எதற்காகத் தொடர்ந்து செய்தல் வேண்டும்; அத்துடன் அவர்களுக்கு இதைச் செய்வதற்கான வசதிகலையும் நேரத்தையும் தொழில் அதிபர்கள் அளிப்பதனால் அவர்களுக்கு ஏற்படும் நன்மைகளைப்பற்றியும் விளக்கமாகக் கூறியுள்ளனர்.

ஒரு தாயானவள் எவ்வளவு கூடுதலான காலத்திற்குத் தன் குழந்தைக்கு பாலூட்டுகிறாளோ, அக்குழந்தையும் மிக ஆரோக்கியமாக இருக்கும். இது ஒரு பொதுவான அபிப்பிராயமாகும். தாய்ப்பால் குடிக்கும் குழந்தையானது தொற்று நோய்கள் தாக்கமுடியாத உறுதியான உடல் அமைப்பைக் கொண்டிருக்கும். ஆண்டொன்றுக்கு ஆயிரக்கணக்கான குழந்தைகள் இறப்பதற்கு காரணமான வாந்திபேதி நோயும் இவர்களைப் பாதிக்காது என்றும் பல ஆய்வுகளின்பின் தெரியவந்துள்ளது. அத்துடன் பாலூட்டுவதானது தாய் - சேய் உறவை பலப்படுத்துகின்றது என்றும் அறிய வந்துள்ளது. வேலைக்குப்போகும் பெண்களை அவர்களின் தொழிலானது பிள்ளைகளிடமிருந்து அவர்களைப் பிரிப்பதனால் பாலூட்டல் மிக முக்கியமாகக் கருதப்படுகிறது.

பாலூட்டுவதால் ஒரு தாய்க்கு ஏற்படும் நன்மைகள் அதிகமாகும். அவள் பாலூட்டும் காலத்தில் மீண்டும் தாய்மை அடை

வது குறைவாக இருப்பதுடன், மார்பு, கருப்பை என்பனவற்றில் புற்றுநோய் ஏற்படுவது தடுக்கப்படுவதுடன், வாழ்க்கையின் பிற் பகுதியில் ஒஸ்ரியோ பெர்றோசிஸ் (OSTEO POROSIS) வருவதற் கான சாத்தியக் கூறுகளும் மிகக்குறைவாகவே இருக்கின்றன.

தொழில் அதிபர்களின் ஊழியர்கள் தமது குழந்தைகளைக் கவனிப்பதற்கும், வேலையைப் பொறுப்பாகச் செய்வதற்கும் அன்னையர் - சிநேகபூர்வமான வேலைத் தலங்களை அமைத்துக் கொடுத்தல்வேண்டும். இதன்மூலம் வேலைத்தலங்களில் ஊழியர் களின் வரவு குறையாமல் இருப்பதுடன் உற்பத்தித் திறனில் முன்னேற்றமும் அடையலாம்.

உ. பா. ந. க. (WABA) கூற்றின்படி, தாய்ப்பால் குடிக்கும் பிள்ளைகள் ஆரோக்கியமாக இருப்பதால், ஊழியர்கள் விடுமுறை எடுப்பது குறைவாக இருக்கின்றது. பாலூட்டுதலை ஆதரிக்கும் சில தொழில் அதிபர்கள், அன்னையர் - சிநேகபூர்வமான வேலைத்தலங்கள் அமைப்பதற்கு செலவிட்ட பணத்திலும் பார்க்க இரண்டு மடங்கான ஆதாயம் பெற்றுள்ளனர். மேலும் அன்னையர் - சிநேகபூர்வ வேலைத்தலங்களை அமைக்கும் நிறு வனங்கள், குடும்பங்களுக்கு ஆதரவு நல்கும் ஒரு சிறந்த முன் னேற்றகரமான தொழில் அதிபர்களாக கணிக்கப்படுகிறார்கள்.

ஆகவே ஒரு தொழில் அதிபர் பாலூட்டும் அன்னையருக்குத் தனது நிறுவனத்தை ஒரு சிநேகபூர்வமான இடமாக எவ்வாறு மாற்றி அமைக்கப்போகிறார்?

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் நாம் சில உதாரணங்களை மேற்கோள்காட்டியுள்ளோம். உ. பா. ந. க (W A B A) துண் டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ள மேலும் சில உதாரணங்கள், இலங்கைத் தொழில் அதிபர்களின் கவனத்திற்காக தரப்பட்டுள் ளது. வெளிநாடுகளில் உள்ள சில பெரிய கூட்டுத்தாபனங்கள் தங்களது நன்கு பயிற்றப்பட்ட 'பயனுள்ள பெண் ஊழியர்களை சேவையில் வைத்திருப்பதற்காக அவர்களுக்கு தாராளமான மகப் பேற்று உதவிகளைச் செய்கின்றனர்.

உள்ளூர்த் தொழில் அதிபர்கள் தமது திறமையான காரிய தரசிகள் தாய்மை அடைந்ததும், வேலையை விட்டுச்செல்வதால் தங்களை கைவிட்டுச் செல்வதாக நினைக்கின்றார்கள். ஆனால் அவர்கள் ஏன் தாய்மை அடைந்ததும் வேலையை இராஜினாமா செய்கின்றனர் என்று அறிய முயற்சிப்பதில்லை. ஒரு இளம் தாய் என்னிடம் கூறினார் "நான் இரண்டாவது தாய்மைப்பேற்றை

அடைந்திருந்தபோது, எனது எஜமானிடம் எனது சம்பளத்தை உயர்த்தி தரும்படி கேட்டேன். ஏனென்றால் எனது கணவனின் வருமானமும் எனது வருமானமும் இரண்டாவது பிள்ளையைப் பராமரிக்க போதுமானதாக இருக்கவில்லை. ஆனால் எனது எஜமான் எனது திறமையைப்பற்றி எப்போதும் கூறினாரே தவிர எனது கோரிக்கையைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் நான் இவ்வேலையை விட்டு வேறு ஒரு நிறுவனத்தில் சிறந்த ஊதியத்துடன் சேர்ந்தேன்''

இன்னுமொரு வேலை பார்க்கும் தாய் என்னிடம் கூறினாள் ''தான் மூன்றாவது குழந்தை கிடைக்க இருக்கும்போது தனது முன்னைய வேலையை விட்டதாகவும், தான் வேலைபார்த்த இடம் தான் ஒரு பாலூட்டும் தாய் என்பதையும் குழந்தைக்குப் பாலூட்டுவதற்காக நேரத்துடன் வீட்டுக்குப் போகவேண்டிய அவசியத்தையும் அவர்கள் உணரத்தவறியமையே இதற்கு காரணம்'' என்றார். ''நான் கேட்டதெல்லாம் மதியபோசன வேளையில் எனக்கு ஒரு மணித்தியாலத்திற்குப் பதிலாக இரண்டு மணித்தியாலங்கள் தரும்படி, ஆனால் எனது எஜமானர் அதற்கு அனுமதியளிக்க மறுத்ததுடன் எனது குழந்தைக்கு புட்டிப்பால் கொடுத்துப் பழக்கும்படி சுருக்கமாகக் கூறினார்.''

இன்னுமொரு இளம்தாய் கூறினார். ''வேலைக்காரி கொண்டு வரும் எனது குழந்தைக்கு வேலைத்தலத்தில் உள்ள பெண்கள் அறையில் வைத்து, பாலூட்டும் நேரங்களில் பாலூட்ட முடியுமா என்று எனது எஜமானிடம் கேட்டேன். ஆனால் எனக்கு உதவி செய்வதற்குப் பதிலாக அவர் அதிர்ச்சியடைந்தவராக காணப்பட்டு வேலை நேரங்களில் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டுமென்றால், வேலையை இராஜினாமா செய்வதற்கு கடுமையாகச் சிந்திக்கும்படி கூறினார். நானும் ஒரு புதிய புரிந்துணர்வுள்ள எஜமானரிடம் வேலை எடுப்பதற்கு முயற்சிக்கிறேன். ஆனால் இதுவரைகாலமும் அது வெற்றியளிக்கவில்லை" என்று சோர்வுடன் கூறினார்.

உள்ளூர் தொழில் அதிபர்கள், தங்கள் நிறுவனங்களில் வேலை செய்யும் பெண் ஊழியர்கள் மகப்பேறு முடிந்து வேலைக்கு திரும்பிய பின்னர் தொடர்ந்தும் குழந்தைகளுக்குப் பாலூட்டுதலை ஆதரிக்க தயக்கம் காட்டுகின்றனர். என்ற கூற்று நாம் மேற்குறிப்பிட்ட கருத்துக்களை ஆமோதிக்கின்றது.

இவ்வாறான தொழில் அதிபர்களுக்கு மேற்கூறிய உதாரணங்கள் ஒரு விழிப்புணர்ச்சியாக இருக்கவேண்டும்.

சில நாடுகளில் உள்ள தொழில் அதிபர்கள் தமது நிறுவனங்களில் வேலைசெய்யும் பெண் ஊழியர்கள் தமது குழந்தைகளுக்கு பாலூட்டுவதைத் தொடர்ந்து செய்வதற்காக, குழந்தை பராமரிப்பு நிலையங்களை அமைத்துக்கொடுக்கின்றனர். பாங்கொங் நகரிலுள்ள சீராஜ் வைத்தியசாலை (BANGKOK, SHIRAJ) யில் கடமையாற்றும் தாதிகள், மற்றும் பெண் ஊழியர்கள், தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு வசதியாக ஒரு குழந்தை பராபரிப்பு நிலையம் ஒன்று உள்ளதாக அறிந்தேன்.

எந்த ஒரு தொழில் அதிபரையும், தனது நிறுவனத்தில் பாலூட்டும் அன்னையருக்காக ஒரு சினேகபூர்வமான இடமொன்றை ஒதுக்குமாறு நிர்ப்பந்திக்க முடியாது இருப்பதனால், அரசாங்கம் இந்தப் பிரச்சாரத்தில் மத்தியஸ்தம் வகித்து, அவர்களை தூண்டமுடியும்.

ஏற்கனவே பல்வகை நிறுவனங்களுடன், குழந்தை பால்மா சம்பந்தமான பொருட்களை மருத்துவமனைகளில் விளம்பரப் படுத்தக்கூடாது என்ற ஒரு ஒப்பந்தத்தில் சுகாதார, மகளிர் விவகார அமைச்சு கைச்சாத்திட்டுள்ளது. அடுத்த நடவடிக்கை என்னவென்றால், பாலூட்டும் வழக்கம் கையாள தொடங்கிய பின், அன்னையர்கள் வேலை பார்க்க திரும்பியவுடன் அதை திடீரென நிறுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். நான் கூறியதுபோல் அரசாங்கம் இதில் மிக முக்கிய பங்கை வகிக்கலாம், அரசாங்கக் காரியாலயங்களில் சேவை செய்யும் அன்னையருக்கு, வேலை செய்யும்போது தமது குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு ஏற்ற ஓர் இடத்தை அளிப்பதன் மூலம் ஆரம்பிக்கலாம். அல்லது உருகுவே (URUGUAY) நாட்டில் உள்ள அரசாங்க நிறுவனங்களில் வேலைசெய்யும் அன்னையருக்கு, குழந்தையின் முதல் ஆறுமாதத்திற்கு பாலூட்டுவதற்கு வசதியாக, அரை நாள் விடுமுறை அளிக்கப்படுவதுபோல் ஏதும் மாற்று உதவிகளைச் செய்யலாம். உருகுவே (URUGUAY) நாட்டில் உள்ள அன்னையர் இவ்வுரிமை வழங்கப்பட்டதன் விளைவாக தங்களுடைய சம்பளத்தில் நூற்று வீதத்தைப் பெறுகிறார்கள்.

இதற்கு குறைந்த வருமானம் பெறும் வீட்டுப் பணிப்பெண்கள் மட்டும் விதிவிலக்கல்ல. மத்திய மெக்சிகோ (MEXICO) நகரில் "மாரியா லிபரேசயன்" (MARIA LIBERATION) என்ற ஒரு குழு, வீட்டுப்பணிப் பெண்கள் தாய்மை அடைந்திருக்கும் போதும், அதற்குப் பின்னும், தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு ஏதுவான ஒரு சிறந்த ஒழுங்கு முறையை நடைமுறைப்படுத்துவதற்காக நடைபெறும் பேச்சு வார்த்தைக்கு ஆதரவு அளித்துள்ளது.

சில நிறுவனங்கள் பாலூட்டும் அன்னையர்க்கு உதவுவதில் இதற்கும் ஒருபடி மேலாக சென்றுள்ளன. லோஸ் ஏன்ஜல்ஸ் (LOS ANGELES) சில் உள்ள எரிபொருள் நீர் விநியோக காரியாலயத்தில் வேலை பார்க்கும் அன்னையருக்கு வேலை நேரத்தில் தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கான வசதிகள் அளித்ததுடன் நில்லாது, இவ் விடயத்தில் அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது.

கடந்த மூன்று ஆண்டுகளாக அரசாங்கங்கள், ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் மூலம் குழந்தைகளுக்கு, அன்னையர்களுக்கு சமூகத்திற்கு பாலூட்டுவதன் முக்கியத்துவமும், அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. அத்துடன் குழந்தைகளுக்கும், அன்னையருக்கும் பாலூட்டுவதில் உள்ள உரிமைகளை அங்கீகரித்ததுடன் அன்னையர் தாம் விரும்பிய காலம் வரை பாலூட்டுவதனை தொடர்ந்தும் செய்வதற்கான உரிமையையும் வலியுறுத்தியுள்ளது.

அதிகளவு அரசியல் நிர்ப்பந்தங்களினால், வேலை பார்க்கும் பெண்களின் கனவு நனவாக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

எங்களின் பெண்கள் அமைப்புகளும், வேலை பார்க்கும் பெண்கள் தமது குழந்தைகளைப் பேணுவதற்காக, அன்னையர் சிநேகபூர்வமான வேலைத்தலங்களை உருவாக்க முடியும். உ. பா. ந.க (WABA) யின் ஆலோசனைப்படி பெண் தொழிற்சங்கங்கள் குறிப்பாக பாலூட்டும் அன்னையருக்கு, வேலை பார்க்கும் சூழலின் சுத்தம், தொழில் சம்பந்தமான ஆபத்துகளில் (இரசாயணம், கதிர்வீச்சு, தூசு) இருந்து பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளை சமர்ப்பிக்கலாம்.

அவர்கள் தங்களுடைய வேலைத்தலங்களில் கூட்டுறவு குழந்தை நலன்காக்கும் நிகழ்ச்சிகளை விரிவுபடுத்துவதுடன், குழந்தை நலன் காக்கும் பிரிவில் கடமையாற்றும் ஊழியர்கள் பாலூட்டுதலுக்கு ஆதரவாகவும் அதைப்பற்றி நன்கு தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

எங்களுடைய பெண் ஊழியர்கள் இதைப்பற்றி என்ன கூற நினைக்கிறார்கள், அல்லது இந்த விடயத்தைப் பற்றி பெண் ஊழியர்களின் எஜமானர்களின் கருத்தை அறிவது இன்னும் சிறந்ததாகும்.

இவ்விடயம் உங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின்
# மனித உரிமை மீறல்கள்

(த ஐலண்ட் — 21.9.93)

> அரசாங்க ஆதரவுடன் தமிழ் மக்களின் பாரம்பரியமான தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள மக்களின் குடியேற்றம், வடக்கிலும் கிழக்கிலுமுள்ள மக்களின் விகிதாசாரத்தையே மாற்றியுள்ளது. 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட "சிங்களம் மட்டும்" என்ற சட்டம் அரசாங்க சேவையில் இருந்த அனைத்து தமிழ் மக்களையும் வெளியேற்றி இனத் தூய்மை செய்ய உதவியது. 1971 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறை தமிழ் இளைஞர்கள் பல்கலைக் கழக அனுமதி பெறுவதை குறைப்பதற்கு வழிவகுத்தது.

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் பற்றிய செய்திகள் நாளேடுகளில் வெளியிடப்படும் ஒவ்வொரு வேளையிலும், அசோகா வீரசிங்கா அவர்கள் தனது இருக்கையில் துள்ளிக்குதிப்பது விளங்கக்கூடிய ஒன்றாக இருக்கின்றது.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகப் பல மனித உரிமை அமைப்புக்களால் தெரிவிக்கப்பட்டதும், என்னால் குறிப்பிடப்பட்டதுமான மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களில் இருந்து இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றும் நோக்கில் வீரசிங்கா அவர்கள் பதில் அளிப்பதில்லை, என்பதை "ஸ்ரார் இந்தியா" என்ற செய்தித்தாளின் வாசகர்கள் கவனித்திருப்பார்கள்.

இதற்குப் பதிலாக இவர் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சேற்றைப்பூசி இழிவுபடுத்தி வருகின்றார். விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறுவது, இலங்கை அரசு மனித உரிமையை மீறுகின்றது என்ற குற்றச்சாட்டிற்குப் பதிலாக அமையாது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராகவே இலங்கை அரசாங்கம் போரை நடாத்துவதாகவும், தமிழ்மக்களுக்கு எதிராக அல்ல, என்றும் திரு. வீரசிங்கா அவர்கள் முன்னர் கூறியிருந்தார்.

அப்படியாயின் அதிக சனத்தொகையைக் கொண்ட யாழ்ப் பாணத்தின் மீது ''சுப்பர்சொனிக்'' போர் விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி அங்குள்ள அப்பாவிமக்களைக் கொல்லுவதில் நியாயம் எதுவும் உண்டா? பொருளாதாரத் தடையைவிதித்து, பட்டினியைப்போரின் ஆயுதமாக உபயோகிப்பது நியாயமாகுமா? ஆயிரக்கணக்கான மக்களைக் கைதுசெய்து விசாரணை எதுவு மின்றித் தடுத்துவைப்பது நியாயமாகுமா? உயிர்வாழ்வதற்கான உரிமை, சொத்துக்களை வைத்துக்கொள்வதற்கான உரிமை, ஒருதலைப்பட்சமாக கைதுசெய்யப்படுவது, சுதந்திரமாக நடமாடும் உரிமை ஆகியவற்றின் மூலம் தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன.

27.000 சிங்கள மக்களை யாழ்ப்பாணத்திலிருந்து வெளி யேற்றி இனத்தூய்மை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ''இரக்கமற்ற பயங்கரவாதக் குழுவான விடுதலைப்புலிகளுக்கு'' எதிராக இலங் கையின் பாதுகாப்புப் படையினர் போர் புரிவதாக வீரசிங்கா அவர்கள் கூறுகின்றார்கள்.

''மனித உரிமைகள் மீறலைத் தடுப்பதற்குத் தன்னால் முன் வைக்கப்பட்ட 32 சிபார்சுகளில் பெரும்பாலானவற்றை இலங்கை அரசாங்கம் அமுல்செய்யவில்லை'' என அனைத்துலக மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது. மனித உரிமைகளை மதிப்பதற்கு நீதிப்படியும், சட்டப்படியும் இலங்கை கடமைப்பட்டுள்ளது என ''அல் ஏசியா'' செய்தித்தாளின் பிரதம ஆசிரியர் எலிசபெத் நிசான் அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

''உள்நாட்டுப்போர் நடைபெறும் வேளையிலும்கூட மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்காக அவசரகாலச்சட்டத் தைப் பயன்படுத்தக்கூடாது'' என அவர் மேலும் கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு எதிராக 1956, 1958, 1977, 1981 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் கட்டவிழ்த்து விடப்பட்ட திட்டமிட்ட

வன்செயல்கள் காரணமாக ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் துரத்தியடிக்கப்பட்டது மாத்திரமன்றி, கொழும்பிலும், தெற்கிலுள்ள மற்றைய சிங்களப் பிரதேசங்களிலும் கொல்லப்பட்டனர்.

காணி, மொழி, வேலைவாய்ப்பு, உயர்கல்வி மூலாதாரங்கள் ஆகிய விடயங்களிலும் தமிழ்மக்களுக்கு எதிராகப் பாகுபாடுகாட்டப்பட்டது.

அரசாங்க ஆதரவுடன் தமிழ்மக்களின் பாரம்பரியமான தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள மக்களின் குடியேற்றம் வடக்கிலும், கிழக்கிலுமுள்ள மக்களின் விகிதாசாரத்தை மாற்றியுள்ளது. 1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட "சிங்களம் மட்டும்" என்ற சட்டம் அரசாங்க சேவையிலிருந்த அனைத்துத் தமிழ்மக்களையும் வெளியேற்றி இனத்தூய்மை செய்ய உதவியது. 1971ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறை பல்கலைக்கழகங்களுக்கு தமிழ் இளைஞர்கள் அனுமதி பெறுவதைக் குறைப்பதற்கு வழிவகுத்தது.

இலங்கை ஒரு சனநாயகநாடு என வீரசிங்கா அவர்கள் கூறுகின்றார்; சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளை மதித்து நடப்பது முற்போக்கான சனநாயகத்தின் பிரதானமான அம்சங்களில் ஒன்றாகும். சிங்கள மக்களைப் பெரும்பான்மையினராகக்கொண்ட தேர்தல் தொகுதி ஒன்றிலிருந்து தமிழ் மகன் ஒருவன் தேர்ந்தெடுக்கப்படாதது போல், தமிழ்மக்களைப் பெரும்பான்மையினராகக்கொண்ட தேர்தல் தொகுதிகளிலிருந்து சிங்களமகன் ஒருவன் தேர்ந்தெடுக்கப்படாதிருப்பதே இலங்கையிலுள்ள சனநாயகமுறையின் உண்மைநிலையாகும்.

இலங்கையில் நிரந்தரமாக வசிக்கும் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் கொடுங்கோல் ஆட்சியே அங்கு இருக்கின்றது, மாறாக சனநாயகம் அல்ல.

ஸ்ரார் இந்தியா,
இராசேந்திரன் தங்கவேலு,
ஸ்கார்பொரோ ஒன்ராரியோ.

# ஈழத்திற்கு ஆதரவு தேடுபவர்கள் தரும் தவறான தகவல்

(த ஐலண்ட் — 21.9.93)

இலங்கையிலுள்ள பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுதலித்து, கனடாவில் வெளியிடப்படும் ஸ்ரார் இந்தியா (STAR INDIA) என்ற செய்தித்தாளில் வெளியிடப்பட்ட இக்கட்டுரை, கனடாவிலிருக்கும் இலங்கைத் தூதுவரால் எழுதப்பட்டதாகும். குற்றச்சாட்டுக்களைக் கொண்ட கட்டுரையும் கீழே தரப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெறும் உண்மைச் சம்பவங்களைத் திரித்துக்கூறும் திரு. ராஜேந்திரன் தங்கவேலு அவர்களுக்குப் பதிலளிக்காது, அவரைத் தப்பித்துக்கொள்ள விடலாம் என நான் நினைக்கின்றேனா? தனது ஈழப்பிரிவினை வாதம் என்ற குறிக்கோளுக்கு வலுச்சேர்ப்பதற்காக அவர் உங்கள் வாசகர்களை தவறாக வழிநடாத்துகின்றார். (அனைத்துலக மன்னிப்புச்சபை செப்டம்பர் மாதம் 3 ஆம் நாள் வெளியிட்ட தனது அறிக்கையில் குறி பிட்டிருந்தபோதிலும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன.)

இந்த இனப்பூசல் காரணமாக மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்ற அவருடைய குற்றச்சாட்டுக்குப் பின்னர் பதிலளிப்பதற்குப் பதிலாக, இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் பெரும்பான்மைச் சிங்கள சமூகத்தினரால், சிறுபான்மைத் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டுவருகின்றனர் என்று அவர் தன்னுடைய ஆய்வில் குறிப்பிட்டுள்ளதும், அவருடைய நேர்மையைப் பற்றி சந்தேகம் எழுப்புவதுமான மூன்று விடயங்களை நினைவுகூர உங்கள் அனுமதியைக் கோருகின்றேன்.

திரு. தங்கவேலு அவர்கள் எந்தவிதமான முறைகளைக் கையாண்ட போதிலும் தமிழ் மக்கள் தனிச் சலுகைபெற்ற சிறுபான்மையினராக விளங்கியதுடன் அநீதிக்குள்ளான பெரும்பான்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



மைச் சமூகத்தை தாங்கள் நினைத்தவாறு நடாத்தி வந்துள்ளனர் என்பதே உண்மையாகும்.

சிங்கள மக்கள் பெரும்பான்மையினராகவுள்ள தேர்தல் தொகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் எப்பொழுதேனும் தேர்ந்தெடுக்கப்படாததைப்போல், தமிழ் மக்கள் பெரும்பான்மையினராகவுள்ள தேர்தல் தொகுதிகளில் சிங்கள மக்கள் தேர்ந்தெடுக்கப்படாததே இலங்கையில் நிலவுகின்ற சனநாயகத்தின் உண்மையான நிலை என இவர் கூறியுள்ளார். "இலங்கையில் நிலவுவது பெரும்பான்மைச் சமூகமான சிங்களவரின் கொடுங்கோல் ஆட்சியே மாறாக சனநாயகம் அல்ல." எனவும் இவர் கூறியுள்ளார்.

தங்கவேலு அவர்களின் "உண்மை"யை வாசித்த உங்கள் வாசகர்கள் இப்பொழுது "மெய்யை" வாசிக்கட்டும். உள்ளுராட்சி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடாத்தப்பட்டபோது, சிங்கள மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட தேர்தல் தொகுதிகளில் இருந்து சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவங்கள் நிறைய உண்டு.

சிங்கள மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டதும், இலங்கையின் தலைநகரமாக விளங்குவதுமான கொழும்பு மாநகரின் நகர பிதாக்களாக தமிழர்களாகிய திரு. ஆர். சரவணமுத்து அவர்களும், திரு. ரி. உருத்திரா அவர்களும் விளங்கியுள்ளனர். சிங்கள மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட அநுராதபுரத்தின் நகரசபையின் தலைவராக தமிழராகிய நடராசா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். இலங்கை மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான சட்டசபைத் தேர்தல் 1911 ஆம் ஆண்டில் நடைபெற்றபோது சிங்களவரான கலாநிதி மாக்கஸ் பெர்னாந்து அவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழரான சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்று சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1931ம் ஆண்டிலிருந்து 194?ஆம் ஆண்டுவரை அடுத்தடுத்து நடைபெற்ற நான்கு சட்டசபைத் தேர்தல்களின்போது தமிழரான ஆர். சரவணமுத்து அவர்களும் அவரின் பின் தமிழரான திருமதி. என். சரவணமுத்து அவர்களும் சிங்களவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட கொழும்பு வடக்கின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். 1947ம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது 58% சிங்கள மக்

களைக் கொண்டதும் 34% இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்தியத் தமிழர்களைக் கொண்டதுமான பண்டாரவளையில் 2195 அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுத் தமிழரான திரு. கே. வி. நடராசா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். தனது இனத்தைச் சேர்ந்த மக்கள் 4% மாக இருந்தபோதிலும் சிங்கள மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட கொழும்பு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினராக பறங்கியரான திரு. பீற்றர் கெனமன் அவர்கள் பல ஆண்டுகளாக இருந்தார்.

70% சிங்கள மக்களையும் 8% முஸ்லிம் மக்களையும் கொண்ட பொரல்லையில் 1977-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலின் போது முஸ்லிமான எம். எச். முகமது அவர்கள் 10,012 அதிகப்படியான வாக்குகளைப்பெற்று பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். 73·/. சிங்கள மக்களையும் 26·/. முஸ்லிம் மக்களையும் கொண்ட பேருவளையில் முஸ்லிமான பக்கீர் மார்க்கார் அவர்கள் 27,672 அதிகப்படியான வாக்குகளைப்பெற்று அந்தத் தேர்தற் தொகுதியில் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் 74·/. சிங்கள மக்களையும், 19·/. விகிதம் முஸ்லிம்மக்களையும் கொண்ட கரிஸ்பத்துவானில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவரும், தற்போதைய வெளிவிவகார மந்திரியுமான திரு. ஏ. சி. எஸ். ஹமீது அவர்கள் மிகவும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். இலங்கையில் இடம் பெறும் விடயங்கள்பற்றி திரு. தங்கவேலு தொடர்ந்தும் இழிவுபடுத்திக் கூறுவதை நிறுத்துவதற்கு நான் மேலும் ஏதும் கூற வேண்டுமா?

1971-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல்முறை தமிழ் இளைஞர்களின பல்கலைக்கழக அனுமதியை வெகுவாகக் குறைத்துள்ளது எனத் தங்கவேலு அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பின்வரும் விடயத்தை அடிப்படையாகக்கொண்டே திரு. தங்கவேலு அவர்கள் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். தமிழ் மக்களுக்குச் சாதகமாகக் காலனித்துவ ஆட்சியாளர்களால் வகுக்கப்பட்ட கல்விமுறை காரணமாக 1969-ஆம் ஆண்டில் நாட்டின் சனத்தொகையின் 12.6 /. மாகவிருந்த தமிழ் மக்கள் பல்கலைக்கழகங்களின் 40.8 /. மான இடங்களைப் பெற்று வந்தனர்.

பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையில் குறைபாடு இருக்கின்றதென தமிழ் மக்கள் அப்போது குற்றம்

சுமத்தவில்லை. அது அதிர்ச்சியூட்டத்தக்க எண்ணிக்கையாக இருந்தபோதிலும் மற்றைய சமூகங்கள் பாகுபாடு காட்டப்படுவ தாகக் குற்றம் சுமத்தவில்லை.

இலங்கையில் வசிக்கும் மக்களில் 12.6·/. மாகவுள்ள தமிழ் மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழகங்களில் 16.6·/.ம் ஒதுக்கப்பட்டதைத் தொடர்ந்து 1974-ஆம் ஆண்டளவில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப் பட்ட தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தது. சனத் தொகைக்கு ஏற்ப நீதியான முறையில் மேற்கொள்ளப்பட்ட இந்த மாற்றத்தை ''தமிழ் இளைஞர்கள் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்காதவாறு செய்யப்பட்டனர்.'' என தனது வாதத் தில் தங்கவேலு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்கள் அனைவருக்கும், இலங்கையில் வாழும் சமூகங்களிலுள்ள எல்லா வகுப்பினருக்கும் நீதி வழங்கப்பட வேண்டுமென்ற விருப்பம் காரணமாகவும், முன்பு இளைத்த தவறுகளை சீராக்கவேண்டுமென்ற நோக்கம் காரணமாகவுமே 70-ம் ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதிமுறையில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

சமசந்தர்ப்பங்களையும், நீதியையும் எல்லா இனங்களிலு முள்ள கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் கோருவதிலும், அவற்றுக்குச் செவிசாய்ப்பதிலும் தவறு எதுவுமில்லை. சமூகத் தில் பின்தங்கிய வகுப்பினரின் குறைபாடுகளைக் கண்டுபிடிப்பது கனேடிய மக்கள் முன்பின் அறியாத ஒன்றல்ல என்பதுடன் கனடாவில் வசிக்கும் தங்கவேலுவும் இதை அறியாதவர் அல்ல. உடல்வலுவிழந்தோர், பழங்குடிமக்கள், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பெண்கள் ஆகியோருக்கு உதவுவதற்கான உறுதியான செயற்திட்டங்களை இவர் வகுப்பவர் என்பது தெரிபவருவ துடன் இவர் இதில் முக்கியமான பங்கை வகிக்கின்றார் எனவும் நான் கருதுகின்றேன்.

இதையே 1970-ம் ஆண்டுகளில் இலங்கையும் செய்தது. சமசந்தர்ப்பம் வழங்கும் இக்கொள்கையை இனவேறுபாட்டைக் காட்டும் ஒன்று என்று கூறுவது தற்காலத்திலுள்ள உண்மை நிலையைத் திரித்துக்கூறும் செயலாகும்.

''காணிப்பங்கீட்டில் தமிழ் மக்களுக்குப் பாகுபாடு காட்டப் படுகிறது'' எனத் தங்கவேலு அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்

கீழ்த்தரமான இந்தக்குற்றச் சாட்டை கூரறிவுடைய உங்கள் வாசகர்கள் சீர்தூக்கிப் பார்த்து முடிவுக்குவரட்டும்.

பெரும்பான்மையினரான சிங்கள மக்களுக்கும், ஏனைய சிறுபான்மை இனமக்களுக்கும் உரிமையை மறுக்கும் ஒல்லாந்தர்களால் உருவாக்கப்பட்ட தேசவழமைச் சட்டம் வடமாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்திலுள்ள தங்கள் காணிகளை அதன் உரிமையாளர்கள் தங்கள் சொந்த இனத்தவருக்கு மாத்திரம் மாற்ற அனுமதித்திருந்தால், காலனித்துவ ஆட்சியாளர்களின் காலத்தின்போது தமிழ் மக்கள் உன்னதமான வாழ்வை நடாத்தினார்கள்.

இதை ஆராய்ந்து நோக்குகையில் இலங்கையின் சனத்தொகையில் 18% மாகவுள்ள தமிழ்மக்கள்குழு இலங்கையிலுமுள்ள எந்தவொரு மூலையிலும் காணித்துண்டொன்றை சொந்தமாக வைத்திருக்கலாம் என்பதும், 74% தினரான பெரும்பான்மைச் சமூகத்தைச்சேர்ந்த சிங்கள மக்களுக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டதுடன், வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணத்திற்கு வெளியேமாத்திரம் அவர்கள் காணியைச் சொந்தமாகவைத்திருக்கும் உரிமையுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதும் புலப்படும்.

மேற்கு மாகாணத்தில் உள்ளதும், இலங்கையின் தலைநகரமான கொழும்பின் மத்தியிலுள்ளதுமான வெள்ளவத்தை மாநகர சபைக்குள் இருக்கும் முக்கியமான காணிகளில் 65% மானவற்றைத் தமிழ மக்களே சொந்தமாகக்கொண்டுள்ளனர், என்ற உண்மை வெளியில் கூறப்படாத இன்னொரு உண்மையாகவிருக்கின்றது. உண்மைநிலைமை இப்படியிருக்கும்போது தமிழ்மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டப்படுகின்றது எனக் கூறுவது எப்படிப்பொருந்தும்?

மகாவலித்திட்டத்தின் கீழுள்ள காணிகள் இனவிகிதாசார அடிப்படையிலே பங்கீடுசெய்யப்படுகின்றன. இலங்கை அரசாங்கத்தின் இந்த நீதியான கொள்கையை எந்தவொரு கனேடியரும் ''பாகுபாடு'' எனக் குறைகூறமாட்டார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாகத் தங்கவேலு அவர்களால் திரித்துக் கூறப்பட்டவற்றை மேற்கூறிய காரணங்கள் மூலம் மறுதலித்து உண்மையை வெளிக்கொணர்ந்த நாம் இல்லாத விடயங்களைத் தோற்றுவிப்பதை அவர் நிறுத்துவது

புத்திசாலித்தனமானது என நினைக்கின்றோம். சனநாயகத்தை யும், இறைமையையும் ஒற்றையாட்சி முறையையும், பல இன மக்களையும் கொண்ட இலங்கையிலிருந்து பிரிந்து ஒரே இன மக்களைக்கொண்ட இனவாத ஈழத்தை உருவாக்க எண்ணும் தமிழ்ப்பிரிவினை - வாதிகளின் குறிக்கோளுக்கு உங்கள் வாசகர் கள் ஆதரவு நல்குவார்கள் என அவர் கருதுகின்றார்.

அசோக வீரசிங்கா

உயர்ஸ்தானிகரின் செய்தித்தொடர்புப் பணிப்பாளர்

## ரோஸா லெக்சம்பெர்
## ஏன் அவர்களை எதிர்ப்பாள்?

ஜேர்மனியின் பெரும் தத்துவஞானியும் சிந்தனையாளருமான ரோஸா லெக்சம்பெரின்மேல் சிலர் பொறாமைகொண்டு, அவ ரைப்பற்றிய உண்மைகளுக்கு எதிரான அவதூறுகளை செய்தித் தாள்களில் வெளியிட்டனர். இப்படிப்பட்ட வதந்திகளுக்கு அவர் பதிலளிக்கவில்லை. அவரது ஆதரவாளர்கள் சிலர் அவரை அணுகி இப்படிப்பட்ட ஆதாரமற்ற வதந்திகளுக்கு மறுப்புக்கூற வேண்டும் என்று ஆலோசனை கூறினர். அத்துடன் அவரது மௌனம் மக்கள் உள்ளத்தில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்றும் கூறினர்.

அதற்கு ரோசா தனது தந்தை தனக்குப் பிள்ளைப்பிராயத் தில் கூறிய புத்திமதியை எடுத்துக்கூறினார். அது அவரது ஞாப கத்தில் இப்பொழுது உள்ளது. அவர் கூறினார்; "நாங்கள் மற் றவர்களது குறைபாடுகளையோ, தவறுகளையோ சுட்டிக்காட்டும் பொழுது, எமது ஒரு விரல் குற்றவாளியை நோக்குகின்றது. ஆனால் மற்றமூன்று விரல்களும் எங்களை நோக்குகின்றன" என்றார்.

அவர் பின்வரும் சொற்களினால் மேலும் தனது நண்பர் களுக்கு ஆறுதல் கூறினார். "இந்தச் செய்தியை வெளியிட்டவர் யாராயிருப்பினும், அவர் என்னைவிட மூன்று மடங்கு குற்ற வாளி என்பதனை ஏற்றுக்கொண்டார். ஆகையினால் அவரது கூற்றை மதிப்பதில் என்ன பயன்?" என்றார்.

இந்தப் பண்பான விவாதத்திற்குப்பின் அவருடைய நண்பர் களால் ஒன்றும் சொல்லமுடியவில்லை.

# கொலம்பியாவின் மயக்கமுடியாத கெரில்லாப் போர்வீரர்கள்

(ஏசியன் வோல் ஸறீற் யேர்ணல்)

சிசிலியா றெட்றிகெஸ்

*வன்செயல்களால் களைப்படைந்திருந்த போதும்; கொலம்பிய மக்கள் குண்டினால் மட்டும் தான் ஒரு தீர்வை அடையலாம் என நம்புகின்றனர்......*

பொகோட்டா (BOGOTA) கொலம்பியா:- இலத்தீன் அமெரிக்காவின் தீவிரவாத கட்சியில் முக்கியவராக விளங்கும் கியூபாத் தலைவர் பிடல் கஸ்ரோவை ஒரு சமாதானச் செயலாளராகப் பணியாற்றுமாறு இருவாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி சீசர் கபீறியா (CESAR GABIRIA) வேண்டிக் கொண்டார். இதுவரை கொலம்பியன் மக்களால் நிறைவேற்றிக் கொள்ளமுடியாத போர் நிறுத்தத்தை, அந்நாட்டுக்கு இராஜாங்க ரீதியாக வருகைதந்த திரு, கஸ்ரோவிடம், மாக்ஸிஸ கெரில்லாக் களை ஆயுதங்களைக் கைவிட்டு 30 வருடப்போரை நிறுத்தி வைக்குமாறு மக்கள் வேண்டினார்கள்.

கொலம்பியாவின் கெரில்லாக்களுக்கு முன்னின்று வழிகாட்டிய புத்தியீவிஞானதிதந்தை கஸ்ரோவினால் போரை நிறுத்த முடியுமா? ஏன் எனில் – விட்டுக்கொடுக்கமுடியாத பண்புதான் இவர்களுடைய தற்போதைய வலுமைக்கும், மக்களின் ஆதரவுக்கும் மூலகாரணமாக விளங்கியது. இவைதான் இவர்களின் முடிவுக்கு காரணமாகும்.

மெக்ஸ்கோ நகரத்தில் வாழும், நாடு கடத்தப்பட்ட கொலம்பியன் கெரில்லாக்கள் தங்களின் யுத்த ஈடுபாட்டைப் பற்றி என்னுடன் பேசினார்கள். நான் கொலம்பியாவுக்கு புறப்படுவதற்கு முன் இவர்களை ஒரு ஹோட்டலில் சந்தித்தேன். அரசியல் சமூக, அடக்கு முறைக்கு எதிராக கெரில்லாக்கள் போராடுவது, சரியென அவர்கள் திடநம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்பதை நான் கண்டுகொண்டேன். இதனால் தேசத்தின் எதிர்காலம்

வன்செயல்களாக தொடர்ந்துகொண்டு இருக்கும். கெரில்லாக்கள் தங்களுடைய நம்பிக்கையை நிலைநாட்ட தங்கள் உயிரையும் அர்ப்பணிக்க தயாராக இருப்பதை நோக்குமிடத்து, கொலம்பியாவின் உத்தியோக அறிவிப்பின்படி நான் ஏமாற்றப்பட்டேனா? என்ற கேள்வியை எனக்குள் வினாவினேன். இது சிறிது காலத்துக்கு முன் நடந்ததாக இருந்தது.

பத்து ஆண்டுகளுக்குமுன்னர் அநேக கொலம்பியர்கள், திறமையானவர்கள், உயர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், விவேகிகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, ஏதும் ஒரு கெரில்லா இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்களாக இருந்தனர். வசதிபடைத்தவர்களை ஆதரிக்கும் பலவீனம், தகமையற்ற லஞ்சம் பொருந்திய அரசாங்கத்தை தாக்குவதற்கும், கெரில்லாக்களால் தான் திருத்தி அமைக்கவும் முடியும் என கருதப்படுகிறது. சட்டத்தால் மாற்றம் கொண்டுவர முடியாது. அரசாங்க சார்புள்ள பெரிய நிலப்பரப்பை உடையோர், பல் இன தேசிய கும்பல்கள், எண்ணெய்க் கொம்பனிகள் இவர்களை கெரில்லாக்கள் தாக்கும்பொழுது கொலம்பிய மக்கள் அவர்களை ஆதரித்தனர். அவ்வளவுதான்.

கொலம்பிய அரசின் அமைப்பில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படாவிடினும் இந்த மாற்றத்தில் அக்கறை கொண்டவர்கள் இப்பொழுது கெரில்லாக்களை ஆதரிக்கிறார்கள் இல்லை. கொம்யூனிசற் உலகம் வீழ்ச்சியடைவதற்கு முன்பே, இங்குள்ள கெரில்லா மாக்ஸ்சிக்கட்சிகளின் குறிக்கோளிலும், யுக்தியிலும் ஏற்பட்ட மாயை ஆரம்பித்துவிட்டது. சமத்துவத்தையும், நீதியையும் நிலைநாட்டுவதற்காக தங்கள் உயிரையே அர்ப்பணிக்கத் தயாராக இருந்த கெரில்லாக்களின் இந்த எண்ணம் கொலம்பிய மக்களிடம் இப்பொழுது இல்லை. ஏன் என்றால் கெரில்லாக்கள் இப்பொழுது தனிப்பட்ட இராணுவமாகவும், தன்னாட்சியுடைய சமுதாயமாகவும், சுயதேவைகளைப் பூர்த்தி செய்பவர்களாகவும் மாறி வருகின்றனர். அவர்களுடைய முக்கிய குறிக்கோள் தங்களை இஸ்திரப்படுத்துவதோடு பணம் சம்பாதிப்பதுமேயாகும்.

இந்த யுத்த உராய்தல் நீடித்துக்கொண்டு போவதால், இவர்களுடைய கனவு நிறைவேறுவதற்கு மிகக் கடினமாக இருக்கும். சில மாதங்களுக்கு முன்பு கொலம்பியாவின் பிரசித்திபெற்ற விவேகிகளும், அவர்களுக்குள் நோமல் பரிசு பெற்ற கப்பிரியில் காசிய மாக்குவாஸ் (GABRIEL GARCIA MARQUEZ) என்ற எழுத்தாளரும் சேர்ந்து நாட்டை அழிக்கும் போரை நிறுத்துமாறு கெரில்லாக்களுக்கு பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளார்.

முன்னைய கெரில்லா ஆதரவாளர்கள் தங்கள் மனப்பான்மை விபரிக்கின்றபொழுது "ஐயுறவாளர்கள் மயக்கமற்றவர்கள்" என்ற சொற்பதங்களைப் பாவிக்கின்றனர். கெரில்லாக்களின் பொற்காலத்தில் முன்பு விவேகிகளாகவும், அனுதாபிகளாகவும் விளங்கிய இவர்கள்; இன்று தங்களை மறந்தநிலையில் இருக்கிறார்கள். " இவர்கள் எக்காரணம் கொண்டும் ஒரு போதும், கெரில்லாக்களுக்குக் கீழ்ப்படியவில்லை" என கொலம்பியாவின் பிரசித்தி பெற்ற எழுத்தாளரில் ஒருவரான என்றீக் சன்ரோஸ் கல்டிறொன் (ENRIQVE SANTOS CALDERON) கூறுகின்றார். இன்னும் அவர் சொல்லுகிறார் "நாங்கள் ஒருவிதமான நல்ல தோற்றத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்" 30 வருடப் போருக்குப் பின்பும் நாட்டில் ஒரே மாதிரியான நிலை தான் தோன்றுகின்றது. செல்வர்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள இடைவெளி வளர்ந்துள்ளது. இப்படியான முறைகளை ஒழிப்பதற்கு அரசாங்கம் தெண்டிக்கிறது. ஆனால் பழைய தீய ஒழுக்கங்கள் ஆழமாக நாட்டில் வேரூன்றிவிட்டன. இதனால் இன்னும் அந்த நாட்டில் வஞ்சமும், தகமையற்ற அரசாங்க ஆட்சியும், நிலவுகின்றது.

மூன்று தசாப்த வருடங்களிற்குப் பின் கிளர்ச்சியைவிட்டு சில கெரில்லாக்கள் நாட்டிற்குள் திரும்பி வந்துள்ளனர். 1990-ம் ஆண்டில் புதுமையான எம் - 19 கெரில்லா இயக்கம் கொலம்பிய அரசுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டது. அந்த இயக்கத்தின் உயர்ந்த தலைவர் அந்தோனியோ நவாரோ வூல் (ANTONIO NAVARRO WOLF) இவர் பல போரைக் கண்டவர். இவர் கொலம்பியாவின் றோஸ் பெறோவை (ROSS PEROT) ஒத்தவராகக் காணப்பட்டார். அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் இவர் சிறிய கூட்டணிகளைப் பிரதிபலிப்பதற்கு நடுத்தர மக்களாலும் இராணுவ உத்தியோகத்தர்களாலும், தேர்ந்தெடுக்கப்படுவார். எல்லா இஸ்திரமான அரசியல் கட்சிகளால் தேர்தலில் வெல்லக்கூடிய போக்கிருந்தாலும் உலக கணிப்பீட்டின்படி இவர் தேர்தலில் வெற்றியடையும் நல்ல நிலையில் உள்ளார்.

தேர்தலில் அரசியற் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை மாற்றாவிடின் அண்மைத் தேர்தலின்படி கெரில்லாக்களின் எண்ணங்கள் யாவும் செயற்படத்தொடங்கிவிடும். அநேக கொலம்பியர்கள் கெரில்லாக்களை மயக்கமூட்டும் பயங்கரவாதிகள், துணைப்படை, கொலையாளிகள் என ஒப்பிடுகின்றனர். அரசின் பொதுவெளியீட்டின்படி புரட்சிகர இயக்கங்கள் ஆள் கடத்தல், பணம்பறித்தல், இவைகளை திறமையான, வியாபாரமாக எடுத்துக்கொண்டனர். ஒருமுறை பல்கலைக்கழகங்களில் இருந்து வந்த ஏராளமான தொண்டர் படையினரைப் போரில்

கெரில்லாக்கள் இழந்திருந்தபின்னரும் அநேக வறுமைப்பட்ட கமக்காரர்களையும், நாட்டுமக்களையும் புரட்சிகர போராட்டத்திற்கு கெரில்லாக்கள் திரட்டினர். இவர்களுடைய வாழ்க்கைக்குக் கெரிலாக்கள் உறுதுணையாக இருந்தனர். கெரில்லாக்களுடன் சேராமல் புறக்கணிக்கப்பட்ட கமக்காரர்களின் தொகை நாட்டு விவேகிகளிலும்பார்க்க உயர்ந்துள்ளது. கமக்காரக் குடும்பத்தினர் தங்களுடைய மக்களையும், பயிர்களையும், கோழிகளையும் பலவிதமான கெரில்லா இயக்கத்தினருக்குக் கொடுத்துக் களைத்துப்போய்விட்டனர். அடிக்கடி எண்ணெய்க்குதங்களை அழித்தல், வியாபாரிகளை, அரசியல்வாதிகளை, பணக்கார மாட்டுப் பண்ணையாளர்களைக் கடத்திச்செல்லுதல் இவைகளை முன்பு புரட்சிகர செயல்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. பணக்கார விவசாயிகளுக்கு மக்களை ஏமாற்றுபவர்கள் என நாமம் சூட்டி அவர்கள் மேல் வரிகளைத் தண்டனையாகச் சுமத்தினர். இதனால் விவசாயிகள் தங்களுடைய மனநிம்மதியை இழந்து நின்றனர். மேலே சொல்லப்பட்ட குற்றங்கள் யாவும் கொலைக் குற்றமாகக் கருதப்பட்டது.

கெரில்லா இயக்கத்தினர் தங்களுக்குள்ளே இருந்த கருத்து வேறுபாட்டால், நாட்டு மக்களை தெருக்களில் பயங்கரமாகத் தாக்கினர். சில கெரில்லாக் குழுக்கள் போதைவஸ்து கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனால் அவர்களுடைய நல்ல பண்புகள் கூடியவிரைவில் வீழ்ச்சியுற ஏதுவாக இருந்தது. அண்மையில் கெரில்லாக்களால் நடத்தப்பட்ட சம்பவம் ஒன்று-கொலம்பியன் வட கடற்கரையோரத்திலுள்ள வறுமைப்பட்ட மக்கள் வாழும் நகரில் இஸ்பானிய மதகுருவைக் கடத்திச்சென்று கொலைசெய்தனர். இதனால் அந்நாட்டு மக்கள் எல்லோரும் ஆத்திரமடைந்தனர். அந்நாட்டு சனாதிபதியையும் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை அங்கத்தனரையும் கொலை செய்ய சதிசெய்தனர். கெரில்லாக்கள் என அவர்கள்மேல் குற்றம் சுமத்தப்பட்டது. இதற்கிடையில் கெரில்லாக்கள் கொலம்பிய அரசாங்கத்துடன் ஒரு சமாதானப் பேச்சை உருவாக்க எடுத்த முயற்சிகள் யாவும் உண்மையில் ஒரு செப்படிவித்தை என இருபக்கத்தினரும் கருதினர். ஒருவரை ஒருவர் பேச்சால் அடக்க ஆசைப்பட்டனர்.

வன்செயல்களால் களைப்பு அடைந்திருந்தபோதும் கொலம்பிய மக்கள் குண்டினால் தான் மட்டும் ஒரு தீர்வை அடையலாம் என நம்புகின்றனர். கெரில்லாக்களின் எதிர்ப்பை வெல்லுவதற்கு இராணுவத்தின் சுடுபடைக் கலங்கள் முழுவதும் தேவையில்லை. பிடல் கஸ்ரோவும் இதில் சம்பந்தப்படவேண்டியதில்லை. அநேக மக்களும் இதற்குத் தேவைப்படவேண்டியது இல்லை. கண்டத்தில் உள்ள புரட்சிக்காரர்கள் தங்களுக்குள்ளே உள்ள கருத்து வேறுபாட்டில் தங்கள் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள் எனத்தென்படுகிறது.

# மனித நலனுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்களைப் பின்பற்ற ஊக்கமளித்தல்

(இன்ரநஷனல் கெரல் ரிபியூன் — 27.8.93)

கொர்னேலியோ சொம்மாறுகா
(அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத் தலைவர்)

*யுத்தத்தினால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்ற மனிதஇனநலப்பற்றுடைய சட்டம் இருக்கிறது. இச்சட்டம் எதற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற நாம் எங்கிருந்தாலும் செயற்பட வேண்டும்.*

கெடுபிடி யுத்தம் முடிவுக்கு வந்தபொழுது உலகத்தில் நிரந்தரமான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு 20-ஆம் நூற்றாண்டின் முக்கியமான காலப்பகுதி இதுவே என்று எங்களில் பலர் நம்பிக்கை கொண்டிருந்தோம். அனைத்துலக சட்டத்தில் கூறப்பட்டுள்ளதும், அனைத்துலகத்தாலும் அங்கீகரிக்கப்பட்டதுமான நலன்களின் அடிப்படையில் தனது மேலான உரிமையை ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றக் கூடியதாய் இருக்குமெனக் கருதினோம்.

சச்சரவுகளுக்கு யுத்தத்தின்மூலம் தீர்வு காண்பதற்குப் பதிலாக அகில உலக நீதிமன்றத்தின் பொறுப்பில் அவற்றை விட்டுவிடலாம். பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை நிறைவேற்ற மாத்திரமே இராணுவத்தை அனுப்பவேண்டும். ஒரு நாட்டின் உள்நாட்டு ஒழுங்குகளை உறுதிசெய்யப்போதுமான அளவுக்கு இராணுவ பலம் குறைக்கப்படவேண்டும்.

இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என நான் கருதுகின்றேன். பாதுகாப்புச் சபையினதும், அனைத்துலகச் சட்டத்தின் ஆணை உரிமையை வலுப்படுத்தவும்; ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானத்தைப் பாதுகாக்கவும், மற்றும் சமா

தானத்தை ஏற்படுத்தவும் அதிகாரத்தைக் கட்டியெழுப்பவும் பல இன்னல்களுக்கு மத்தியிலும் சென்ற மூன்று ஆண்டுகால மாகப் பல முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள் ளோம்.

இருப்பினும் உலகின் பல பாகங்களிலும் அண்மைக்காலங் களில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளும், படுகொலை களும் திகைப்பூட்டக்கூடியனவாக இருக்கின்றன.

கடந்த ஐந்து வருடங்களில் ஒவ்வொரு வருடத்திலும் உல கில் பாரிய மோதல்கள் குறைந்து வருவதாக ஸ்ரொக் கோம் (STOCK HOLM) மாநகரிலுள்ள அனைத்துலக சமாதானசபை தனது அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது. இருப்பினும் இந்தச் சபையின் முடிவை நான் வரவேற்கும் அதேவேளையில் நானோ எனது துறையிலுள்ள சக உத்தியோகத்தர்களோ இதுவரை கண்டிராத பயங்கரமான வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப் பட்டுள்ளதைக் கண்டு வருந்துகின்றோம்.

யுத்தம் நடைபெறும் இடங்களுக்குச் செல்லமுன்னர் இத் துறையிலிருந்தவர்களைவிட எங்களுக்கும் தொடர்பு சாதனங் களுக்கும் அதிகவாய்ப்பு இருப்பதால் இதை நாம் அறியமுடி கின்றது.

இந்த யுத்தமுறைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை எங்களால் காணமுடிகின்றது. யுத்தப் பிரியர்களின் பணயக் கைதிகளாகப் பொதுமக்கள் ஆக்கப்படுவதுடன், அவர்கள் எதிரிகளின் முக்கிய இலக்காகவும் இருக்கின்றார்கள். பெண்களுக்கும், குழந்தை களுக்கும் எதிரான பாலியல் வன்முறை அதிகரித்துவருவதையும் காணக்கூடியதாகவிருக்கின்றது.

கெடுபிடி யுத்த சகாப்தம் முடிவடைந்தபின் அரச ஆட்சிக் குப் பதிலாக கொடுங்கோலாட்சி பல இடங்களில் உருவாகியது. ஆயுதங்களின் கட்டுப்பாடு பொறுப்புவாய்ந்தவர்களிடமில்லை. துப்பாக்கியை இரக்கமின்றி உபயோகிப்பதன்மூலம் தலைவர் களாகிக்கொண்ட தனிக்குழுக்களின் தலைவர்களிடமும், தன் னலக்கும்பல்களிடமும், யுத்தப்பிரியர்களிடமும் நவீன ஆயுதங்கள் உள்ளன.

வியட்நாம் யுத்தத்தின்போது 'இல்லை' என்று கூறுபவரை யார் என்று நாங்கள் அறிந்திருந்தோம். தீர்க்கமான முடிவை மேற்கொள்ளக்கூடிய ஒருவர் இல்லாததுடன் கண்மூடி விழிக்க

முன்னரே 'ஆம்' என்று கூறப்பட்டது. நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் எனக் கொடுத்த வாக்குறுதி மீறப்படுகின்றது. எங்கள் அடையாளச் சின்னம் உதாசீனம் செய்யப்படுவதுடன், பழித்துரைக்கப்படுவதும் அல்லாமல் அதை நோக்கிச் சுடவும்படுகின்றது. கடந்த ஆண்டில் மாத்திரம் 15 வெளித்தள உத்தியோகத்தர்களை நாம் இழந்துள்ளோம்.

இதன் காரணமாகவே ஜெனிவாவின் பிரதிநிதிகள் கூட்டாய்வுக் கழகத்தின் காப்பாளராக விளங்கும் சுவிஸ் அரசாங்கத்தை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க அனைத்துலக மாநாடு ஒன்றை ஜெனிவாவில் திங்கட்கிழமை ஆரம்பிக்குமாறு நாங்கள் கேட்டிருந்தோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் பணிமனையிலிருந்து யூகோசிலோவியாவரையும், பாலஸ்தீன விடுதலை முன்னணியிலிருந்து சர்வதேச மன்னிப்புச் சபைவரையுமுள்ள பார்வையாளர்களையும், ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் எல்லா நாடுகளையும், இந்த மகாநாட்டிற்கு சமூகமளிக்க அழைத்திருந்தோம்.

மனித நலனுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்களைப் பின்பற்ற ஊக்கமளித்தலே எங்கள் குறிக்கோளாகவிருக்கின்றது.

ஜெனிவாவின் பிரதிநிதிகள் கூட்டாய்வுக் கழகத்தை ஆரம்பிக்க உதவிய அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தை அதன் விதிகளுக்கு இணங்கி நடப்பதாகக்கூறிக் கைச்சாத்திட்ட அனைத்துலக சமுதாயத்தவர்கள் குறைகூறுகின்றனர். ஜெனிவாவின் பிரதிநிதிகள் கூட்டாய்வுக்கழகத்தை விரிவுபடுத்திப் பொதுமக்களுக்கு மேலும் பாதுகாப்பு வழங்கக்கூடியதாக 1977-ஆம் ஆண்டில் கூட்டு ஒப்பந்தம் ஒன்று கொண்டுவரப்பட்டது. இவ் ஒப்பந்தத்தின் மூலப்படிகளான ஒன்றையும், இரண்டையும் பாதுகாப்புச் சபையில் செல்வாக்குமிக்க அங்கத்துவ நாடுகளாக விளங்குபவையும், இன்னும் இவற்றைச் செல்லுபடியாக்காதிருப்பவையுமான அமெரிக்கா, பிரான்சு மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளையும், மற்றைய நாடுகளையும் இவற்றைச் செயற்படுத்த விரைந்து ஆவனசெய்யும்படி தூண்டுவதற்கு இந்த மாநாட்டைப் பயன்படுத்தவுள்ளோம்.

பொதுமக்களைக் கொன்றுகுவித்தல், விசாரணையின்றி மரணதண்டனை வழங்குதல், தடுத்து வைத்திருப்பவர்களைச்

சித்திரவதைசெய்தல், மனிதாபிமானமற்றமுறையில் தடுத்துவைத்தல், பட்டினிச்சாவு அல்லது நிர்ப்பந்தப்படுத்தி இடம்பெயரவைத்தல், கண்டபடி ஆயுதங்களை உபயோகித்தல், மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படும் உதவிகளைச் சூறையாடல், செஞ்சிலுவை மற்றும் வளர்பிறைச் சின்னங்களுடன் பணிபுரியும் அலுவலர்களைக் கொலைசெய்தல் ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென இந்த மாநாட்டில் பங்குபற்றுபவர்களை வெளிப்படையாகக் கூறுமாறு நாங்கள் கேட்கின்றோம்.

ஜெனிவாவின் பிரதிநிதிகள் கூட்டாய்வுக் கழகத்தையும், அதன் மேலதிகமான ஒப்பந்த மூலப்பிடிகளையும் எல்லா நாடுகளும், எல்லா மக்களும் உள்ளார்ந்த அக்கறையுடன் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதும், தங்கள் கட்டுப்பாட்டுக்குச் செயல் வடிவம் கொடுக்க இவற்றை இராணுவத்தினருக்கும், கல்லூரிகளுக்கும் போதிக்க வேண்டுமென்பதே எங்கள் கோரிக்கையாகும்.

யுத்தத்தின்போது குற்றம் இழைப்பவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பதும், யுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக அதன் மூலம் பணம் சம்பாதிக்க ஏதுவாயிருக்கும் ஆயுத வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதையும் நாங்கள் கோருகிறோம்.

அரசியல் மற்றும் இராணுவ நோக்கங்களுக்காகவும், அமைதி காக்கும் பணிக்காகவும் வழங்கப்படும் உதவிகளை மனிதகுலத்தின் நலனுக்காக வழங்கப்படுகின்ற உதவிகளுடன் சேர்த்து கணக்கெடுக்கக்கூடாது, என்பதும் எமது கோரிக்கையாகும்.

உயிருக்கும், உடலுக்கும் ஊறுவிளைவிக்கக்கூடிய ஆயுதங்களின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற அனைத்துலக சமூகம் விடுத்த கட்டுப்பாட்டை மேலும் இறுக்கமானதாகக் வேண்டும் என்பதும் எங்கள் கோரிக்கையாகும்.

இறுதியாக ஜெனிவாவின் விதிகளையும், கூட்டு ஒப்பந்த மூலப்படிகளையும் மீறுவதாக எழுந்த குற்றச்சாட்டுக்களை விசாரிக்க, 1977 ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவின் செயற்றிறனை அங்கீகரிக்கவேண்டுமென்பதே நாங்கள் கோரிநிற்பது.

யுத்தத்தினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்றவே மனித இன நலப்பற்றுடைய சட்டம் இருக்கின்றது. இச்சட்டம் எதற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற நாம் எங்கிருந்தாலும் செயற்படவேண்டும். புறக்கணிப்பு, அறியாமை மற்றும் மிருகப்பண்பே இதன் எதிரிகள். மனித இனத்தின் முன்னேற்றப் பாதையில் யுத்த மேகங்கள் மீண்டும் குறுக்கிடுவதால் இந்தச் சட்டத்தை உள்ளார்ந்த அக்கறையுடன் கடைப்பிடிப்போம் என நாம் உறுதிபூணுவோம்.

# சிறிய எஸ்ரோனியா ரஷ்யாவின் கால்விரல்களில் மிதிக்கவில்லையா?

(இன்ர நஷனல் ெகரல்ட் டிப்யூன்)

யு. றி. லூய்க்

*1991 ஆம் ஆண்டில் மீண்டும் சுதந்திரமடைந்த எஸ்ரோனியா ஒரு வருடத்துக்குள் தனது சுதந்திரத்தை தாபித்துக் கொண்டது. சோவியத் பாராளுமன்றத்தின் வீழ்ச்சியின்பின் ஒரு புதிய அரசியல் யாப்பைத் தயாரித்து தேர்தலையும் நடாத்தியுள்ளது. எஸ்ரோனியா; அரசியலிலும், பொருளாதாரத்திலும் அதிசயிக்கத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளதாக அவதானிகள் கருதுகிறார்கள்.*

ரஷ்யா தேசியவாதத்திற்கும், பிரிவினைவாதத்திற் நம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அங்கு பொருளாதாரம் தடையின்றி வீழ்ச்சியடைகிறது. தீவிரவாதிகள் பழைய சாம்ராஜ்யத்தைக் கொண்டு வருமாறு கூடிய அழுத்தத்தைக் கொடுக்கிறார்கள். இவ்வாறான குறைகளை தன்னகத்தே கொண்டுள்ள மொஸ்கோ மற்றவர்களை குறை கூறுவது எவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்க வில்லை. இவ்விடயத்தில் எஸ்ரோனியா இலக்காகிவிட்டது.

''நீ ஒரு நாயை உதைக்க எண்ணங்கொண்டால் நாய்க்குட்டியை உதை'' என்று ஒரு பழமொழி உண்டு. இதற்குப் பொருத்தமானது எஸ்ரோனியா என்று ரஷ்யர்கள் எண்ணுகின்றார்கள். ரஷ்யா ஏற்றுமதிப் பொருட்களுக்கு அதிகமான ஏற்றுமதி வரியை விதித்து அதன் விலைமதிக்கமுடியாத உலோகப் பொருட்களைக் களவாடுவதோடு (ஏற்றுமதிப் பொருட்களுக்கு அதிகமான விலையைமதித்து) 1.5 கோடி சனத்தொகையுடைய எஸ்ரோனிய தேசத்தையும்குற்றஞ் சாட்டுகின்றார்கள்.

எஸ்ரோனியாவின் முன்னேற்றத்திற்கு அதன் கடினமான உழைப்பே காரணம் கடந்த முதுவேனிற் காலத்தின் பின் எஸ்

ரோனியா தன்னுடைய நாணய மதிப்பீட்டில் மாற்றத்தை உண்டு படுத்தி ஒரு வெற்றியைப் பெற்றுள்ளது. "குறான்" (KROON) ஐரோப்பாவில் மிகவும் ஸ்திரமான நாணயமாகிவிட்டது. பண வீக்கம் குறைந்து வெளிநாட்டு முதலீடு அதிகரித்ததன் காரண மாக சாதாரன மனிதனின் பொருளாதாரம் கடந்தகாலத்தை விட உயர்நிலை அடைந்துள்ளது.

1991-ஆம் ஆண்டில் மீண்டும் சுதந்திரமடைந்த எஸ்ரோனியா ஒரு வருடத்துக்குள் தனது சுதந்திரத்தை தாபித்துக் கொண் டது. சோவியத் பாராளுமன்ற வீழ்ச்சியின் பின் ஒரு புதிய அர சியல் யாப்பைத் தயாரித்து தேர்தலையும் நடாத்தியுள்ளது. எஸ் ரோனியா அரசியலும், பொருளாதாரத்திலும் அதிசயிக்கத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளதாக அவதானிகள் கருதுகிறார்கள். அது கிழக்கத்தேய நாடுகளுக்கும், மத்திய ஐரோப்பிய நாடுகளுக்கும் ஒரு எடுத்துக்காட்டாகவுள்ளது.

எஸ்ரோனியா, ரஷ்ய உறவு எப்பொழுதும் விரிசலாயிருக்க வில்லை. பெரஸ் ரொயிக்கா (PERES TROIKA) கொள்கையின் ஆரம்பத்திலிருந்து ரஷ்யாவின் லிபரல் (LIBERAL) கட்சி முன் னோடிகள் எஸ்ரோனியாவின் சுதந்திரக் கோரிக்கைக்கு ஆதரவாக விருந்தார்கள். எஸ்ரோனியா மீண்டும் விடுதலைபெற கடும்முயற்சி எடுத்தபோது ரஷ்யாவில் புதிய ஜனநாயகவாதிகளின் (NEW (DEMOCRATS) ஆதரவும் இருந்தது. தற்போதைய நிகழ்வுகள் "தேன்நிலவு" முடிந்தது என்பதை வெளிப்படுத்துகின்றன. சட் டத்தின் நிதானமற்ற தவறுகளில் இருந்தே இந்த வேற்றுமை உண்டானது. 50 வருடங்களுக்கு மேலாக எஸ்ரோனியா ஒரு அடிமை நாடாகவிருந்தது.

சட்டத்துக்கு மாறான கடும் அட்டூழியங்களைச் சோவியத் அரசாங்கம் எஸ்ரோனியாவுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்டதை ரஷ்யா இன்றும் ஒத்துக்கொள்ளவில்லை. பாரதூரமான வாழ்க் கைச் சூழல் அழிப்பு, புள்ளிவிபரமாற்றம், மத்திய அரசால் திட்டமிடப்பட்ட குடியேற்றம் முதலிய நடவடிக்கைகள் எஸ்ரோனி யரை தங்களுடைய தேசத்தில் சிறுபான்மையராக்கியது.

ரஷ்யா எஸ்ரோனியாவிலிருந்து தன்னுடைய படைகளைத் திருப்பிப்பெற மறுத்தது. "சமாதான நாடு" என்றழைக்கப்பட்ட "போல்டிக்" நாடான லித்துவேனியா ரஷ்யாவுடனான வர்த்த கத்தில் நம்பிக்கையூட்டத்தக்கதாய் நடந்துகொள்ளவில்லை என்று பேச்சுவார்த்தையை நிறுத்திப் படைவிலகலையும் நிறுத்தியது.

1991-ல் ரஷ்யாவில் புரட்சி ஏற்படத்தொடங்கியதிலிருந்து அது தன்னுடைய முன்னைய குற்றங்களெல்லாம் கரும்பலகையிலிருந்து அழிக்கப்பட்டதுபோன்று ஒரு தூய்மையான கற்புடைய நாடாக வெளியானது என்று அந்நாட்டின் அரசியல்வாதிகள் கருதுகின்றார்கள். இந்த வாதத்தின்படி ரஷ்யாவும், எஸ்ரோனியாவும் இரண்டு புதிய சுதந்திர நாடுகளாகின. இதில் சிறிய நாடான எஸ்ரோனியாவை முன் ஆட்சிசெய்த நாட்டின் அமைப்புக்கள் எல்லாவற்றிலும் சட்டரீதியானவையாக ஆக்க வேண்டுமென்பதாகும்.

தற்போதைய சரித்திரத்தால் ஏற்பட்ட மாற்றங்கள் பிரதானமாகப் பிரசா உரிமைபற்றி வித்தியாசமான விளக்கங்களுக்கு வழிவகுத்தது. ரஷ்யாவின் வெளிநாட்டு அமைச்சர் அன்ரெய் கோசிறெவ் (ANDREI KOZYREV) பின் கீழ்த்தரமான நடவடிக்கைபோலல்லாமல் ''தன் விருப்பம்'' என்ற அடிப்படையில், எஸ்ரோனியா தான் பிறநாட்டு ரஷ்யர்கள் என்ற சிக்கலான விடயத்தில் நடைமுறைக்கு ஏற்றமுடிவை எடுத்தது.

பிரசா உரிமையை ஒருவர் மீது திணிக்க அரசுக்கு உரிமையில்லை. ஆனால் ஒருவர் தனது விருப்பத்திற்கு ஏற்றபடி பிரசா உரிமையைத் தெரிவுசெய்யலாம். ஆனபடியால் பிறநாட்டவரைப் பற்றிய சட்டங்களில் நிரந்தரமாக வசிக்கும் பிரசை எவராயினும் எஸ்ரோனிய பிரசா உரிமை பெறவிரும்பாவிட்டால் அவர்கள் உள்நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர் என்று பதிவுபெறலாம். இது முக்கியமாக அமெரிக்காவிலோ அல்லது ஜேர்மனியிலோ உள்ள ஏற்பாடுகளிலும்பார்க்க இலகுவானது.

நிரந்தரமாக வசிப்பவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டும் வகிக்கமுடியாது. ஆனால் அவர்களுக்கு அந் நாட்டுப் பிரசைக்குள்ள உரிமைகளும், பொறுப்புக்களுமுண்டு. எஸ்ரோனியா நிரந்தரப் பிரசைகளை உள்ளூராட்சி தேர்தல்களில் வாக்களிக்க இடமளித்திருக்கிறது. இந்தச் சலுகை அநேகமான ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் பிரசா உரிமை இல்லாதவர்களுக்கு இல்லை.

ரஷ்ய அரசியல்வாதிகள் மனித உரிமை மீறல்களைக் கண்டுபிடிப்பதில் நிபுணர்கள். ஆனால் ஐரோப்பிய தேசிய மன்றத்தில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மற்றும் பல ஸ்தாபனங்களிலும் இருந்து 15 மனித உரிமை மீறல்களை ஆராயவந்த தூதுக்குழுக்கள் வெறும்கைகளுடன் திரும்பிப்போயிருக்கின்றார்கள். மேற்கு நாடுகள் எஸ்ரோனியாவின் பிரசா உரிமைச் சட்டங்களின் விரி

வான கொள்கைகளைப் புகழ்ந்திருக்கின்றனர். பிரசா உரிமைக்கு விண்ணப்பம் செய்பவர்கள் குறைந்தது இரண்டு வருடங்கள் வசித்தவர்களாயிருத்தல் வேண்டும். அந்நாட்டு மொழி ஓரளவு தெரிந்திருக்கவேண்டும். அந்நாட்டுக்குரிய விசுவாசப் பிரமாணம் செய்திருக்கவேண்டும்.

மேற்கு நாட்டவர்கள் பலகாலத்திற்கு முன்பு, எஸ்ரோனியாவில் அவதானித்ததைப் போன்ற மனித நாகரீகம், சமுதாய உரிமைகள், உளவியல் ரீதியான உணர்வுகள் இன்று பிரச்சினைக்குரியதாக இல்லை. தன்னுடைய எதிர்காலத்தைப்பற்றி குழப்பமான நிலையிலுள்ள ரஷ்யாவுடன் சமதையாக வரவேண்டிய நிலை எஸ்ரோனியாவுக்கு உண்டு. புத்திக்கூர்மையுடைய ரஷ்ய அரசியல்வாதிகள் தமது அயலிலுள்ள சிறிய நாட்டில் படைகளை வைத்திருப்பதால் மேற்கு நாடுகளிடம் இருந்து பெறக்கூடிய உதவிகளையும், வர்த்தக தொடர்புகளையும் இழக்கும் நிலையில் உள்ளது. அத்துடன் எஸ்ரோனியாவை மேலைநாடுகளிடமிருந்து தனிமைப்படுத்தவும் முனைகிறது. கடந்த யூன் மாதம் 15-ம் திகதி ஜனாதிபதி பொறிஸ் ஜெல்சின் கூறியது போல இராணுவத் தலையீட்டினாலும் முக்கியமாக அங்குள்ள படைகளை வாபஸ் பெறுவதை இழுத்தடிப்பதனாலும் ரஷ்யாவின் நீண்டகால கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த உரிமையைக்கோருவதாக அமையும்.

மேலும் ரஷ்யா தனது அயல்நாடுகளுடனான உறவுகளை சிக்கலாக்குவதால் குழப்பமடைகிறது. ராஜிகிஸ்ரான் (TAJIKSTAN) ஜோர்ஜியா, (GEORGIA) அசார் பைசான் போன்ற இடங்களில் ரஷ்ய படைத்தளபதிகள் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூர்த் தலைவர்களுக்கு எதிராக பழைய கொமினிச தலைவர்களுக்கு ஆதரவளிக்கின்றனர். ரஷ்ய உக்கிரேயினிலுள்ள (UKRAINE) கிரிமியன் (CRIMEAN) குடாநாட்டிலும், டொன்பாஸ் (DONBAS) பிராந்தியத்திலும் உரிமை கோருகின்றது. மொல்டோவாவில் (MOLDOVA) 14-ம் படைப்பிரிவு உள்ளூர் ரஷ்ய பிரிவினைவாதிகளை ஆதரித்து அந்த நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டினை அச்சுறுத்துகின்றது.

இப்பொழுது மொஸ்கோ (MOSCOW) கப்கேஸ்க் யூவிடில்ஸ். (KAFKAESQ UETWILS) உள்ள வேறுபாடுகளைத் தீர்க்க, அல்லது தன்னுடைய கொள்கைகளால் ஏற்பட்ட பூசல்களைத் தணிக்க, சுற்றுவட்டத்திலுள்ள நாடுகளுடன் கிட்டவுள்ள வெளிநாடு என்றொரு கொள்கைகளை விளக்குகின்றது. இதனால் தான் ஒரு

சமாதானப்படுத்தும் நாடாகவிருந்து, தன்னுடைய எல்லைகளிலுள்ள நாடுகளுடனான கொள்கையில் அயல்நாடுகளுக்கு அப்பாலுள்ள நாடுகளுடனான உறவிலும் பார்க்க வித்தியாசமாக நடந்து, சமாதானத்தை நிலைநாட்டும் நோக்கத்தில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அண்டைநாடுகளுக்கிடையில் நடுநிலைப் பிரிவு நிலத்தை ஏற்படுத்த முயல்கின்றதா ? அதன் மூலம் தன் பாதுகாப்புக்கு கிழக்கு, மத்திய ஐரோப்பாவை ஈடுசெய்யமுடியுமா? அல்லது பேரரசுக் கோட்பாடுடைய நடுநிலையாளரைக் கண்டு மொஸ்கோவின் (MOSCOW) கொள்கை வகுப்போர் பின் வாங்கிவிட்டனரா?

''எஸ்ரோனியா அது தான் சரியான காரணம்'' என்கின்றது. ரலினில் (TALLINN) உள்ள நாம் எங்களுடைய அண்டை நாடு எவ்வளவு உணர்ச்சிவசமான எண்ணங்களுடன், சிக்கல்களுடன் குழப்பமடைகின்றன என்று விளங்கி, ரஷ்யாவுடனான பலதரப்பட்ட, தடுமாற்றமான, உணர்ச்சிவசமான சிக்கல்களை உணர்ந்து, பகைமையாக உணர்ச்சிவசப்பட்டு ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டும் போக்கைத் தணிக்க எவ்வளவோ முன்வந்துள்ளோம். அண்டைய நாடுகளுடன் வழிவழிப் பகைமை கொள்வதில் ஆபத்து இருக்கின்றதென்பது விளங்குகின்றது. ரஷ்யாவுடனான கூட்டுச்சமஷ்டிக்காக எஸ்ரோனியா தன்னுடைய அரசியல், பொருளாதார முன்னேற்றத்தை விலைகொடுக்கமுடியாது.

## ஜோன் எப். கெனடி
## எமது கடமை

ஜோன் எப் கெனடி ஒரு சக்திவாய்ந்த பேச்சாளர். அவர் தனது பதவியேற்பு வைபவ விழாவில் உணர்ச்சிபூர்வமாகப் பேசினார். அவர் அன்று கூறியது எல்லா நாடுகளுக்கும், எல்லா மக்களுக்கும், எல்லாக் காலத்திற்கும் பொருந்தும். அவர் கூறினார்:- ''உனது நாடு உனக்கு என்ன செய்யப்போகிறது என்று கேட்காதே. கொஞ்சம் என்னிடம் கூறு, நீ இந்த நாட்டிற்கு என்ன செய்யப்போகிறாய்'' இதில் எமக்கு ஒரு படிப்பினை இருக்கின்றது. எங்களது வழக்கம் எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தை நோக்கி நிற்பதே. ஆனால் நாம் நாட்டிற்கு ஏதாவது செய்ய முயற்சி எடுப்பதில்லை.

# விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தைக் காப்பாற்றித் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதையே தமது முதலாவது குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்

(த ஐலண்ட் — 31.10.93)

தாரகி

*யாப்பாணத்தைக்காப்பாற்ற முன்னுரிமை கொடுக்கும் விடுதலைப்புலிகளின் இராணுவ அணுகுமுறை அரசாங்கத்திற்கு அனுகூலமாக இருக்குமா, அல்லது முதலில் கிழக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கை விடுதலைப் புலிகளுக்கு அனுகூலமாக இருக்குமா என்பதை கிளாலிப் போருக்குப் பின்பு நடைபெறவிருக்கும் போர் தெரியப்படுத்தக் கூடியதாயிருக்கும்.*

யாழ்ப்பாணத்தைக் காப்பாற்றித் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் இதுவே விடுதலைப்புலிகளின் நீண்டகால இராணுவ யுக்தியாக இருந்துவருகின்றது. அரசியல் ரீதியாகவும், புவியியல் ரீதியாகவும், இன ரீதியாகவும் பொதுவான நிலையாக இருக்கும் வடக்கு குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பம் தங்கள் ஈழத்திற்கான ஆயுதப் போராட்டத்தை வலுப்படுத்தி முன்னெடுத்துச் செல்ல உதவியாகவிருக்கும், எனக் கருதுவதனாலேயே இந்தக் கொள்கையை அவர்கள் கடைப்பிடிக்கின்றனர். அவர்களுடைய இந்தக் கொள்கை 1980-ம் ஆண்டு முற்பகுதியில் தெரியவந்த நாளிலிருந்து பலர் இதைக் குறைகூறிவந்தனர். ஆனால் ஈழத்தைக் காண்பதற்கு எழுச்சி பெற்றுப் போராடவந்த குழுக்களுள் விடுதலைப்புலிகள் தாங்களே சக்திவாய்ந்தவர்கள் என நிலைநாட்டியதன் பின் இந்த விடயம் மறக்கப்பட்டது. தங்கள் போராளிகளில் பெரும் எண்ணிக்கையினரையும், தங்கள் இராணுவ வளத்தின் பெரும் பகுதியையும் கிழக்கிலிருந்து பெற்று வடக்கிலுள்ள போர் முனைகளில் பயன்படுத்தவேண்டிய அவசியத்தை விடுதலைப்புலிகள் உணர்ந்திருந்தனர் என்பதை இரண்டாம்

328900C

ஈழப்போரின் ஆரம்பகட்டம் வெளிக்காட்டியது. வடக்கை கைப்பற்றவும், தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் கிழக்கிலிருந்து பெறப்பட்ட வளங்கள் தங்களுக்குப் பெரிதும் உதவியதாக பல சந்தர்ப்பங்களில் அவர்கள் கூறியுள்ளனர். இதற்காகத் தங்கள் மண் செலுத்தவேண்டிய பாரிய விலையை கிழக்கு மாகணத்திலுள்ள விடுதலைப் போராளிகள் இலகுவில் மறந்துவிட மாட்டார்கள். தன்னுடைய பகுதியின் நலன்களை விட, திரு. பிரபாகரன் அவர்களுக்கு மிகுந்த விசுவாசமாகவுள்ள மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய இடங்களிலுள்ள விடுதலைப்புலிகள் சிறப்புப் படைத்தளபதியான திரு. கருணா அவர்கள் "முத்தமிழ் விழாவிற்கான இந்த வாழ்த்து செய்தியை நான் எழுதிக்கொண்டிருக்கும் வேளையில்கூட இலங்கை இராணுவத்தின் அட்டூழியங்களினால் எனது பகுதிமக்கள் அல்லல்படுகின்றார்கள் எனக்கூறி" யுள்ள வேளையில், அவருடைய சகாக்களின் வாழ்த்துச்செய்திகளில் பண்டைய காலத்தைய தமிழரின் இராணுவம் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள பல நாடுகளைக் கைப்பற்றி இமயமலைமீது புலிக்கொடியேற்றிவைத்தது. தங்கள் போராட்டத்திற்கு உந்துசக்தியாக விளங்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## கிளாலி மீதான நடவடிக்கை

தற்போதைய யுத்தம் சம்பந்தமாக அரசாங்கம் கடைப்பிடிக்கும் போக்கு பாரிய தாக்கங்களைத் தோற்றுவித்துள்ளது. இது மாத்திரமன்றி, கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சிக்கான தேர்தலை ஜனவரி மாதத்தில் நடாத்த ஐக்கிய தேசியக்கட்சி திட்டமிட்டிருப்பதால் தோன்றக்கூடிய அரசியல் விளைவுகள் காரணமாகவும், வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிக்க கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தவிருப்பதன் காரணமாகவும். கிளாலி நடவடிக்கையும் அதன்பின் இடம்பெற்ற சம்பவங்களும் யாழ்ப்பாணத்தைக் காப்பாற்றுவது என்ற விடுதலைப்புலிகளின் கொள்கையை மீளாய்வு செய்யவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தை முதலில் காப்பாற்றவேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் கொள்கையை இன்னொரு கோணத்தில் நோக்குகையில், இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் கிழக்கைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து வலுப்படுத்திய பின் வடக்கில் நடவடிக்கையை மேற்கொள்ள எண்ணியுள்ள அரசாங்கத்தின் தந்திரோபாயத்திற்கு அவர்கள் பலிக்கடா ஆகக் கூடியவகையில் அவர்களுடைய யுக்தி பலவீனமானதாக இருப்பதைக்காண முடிகிறது. குடாநாட்டிலுள்ள நிலப்பரப்பைக் கைப்பற்ற இராணுவத்தினர் மேற்கொள்ளும் எந்தவிதமான முயற்சி

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



களையும் முறியடிக்க விடுதலைப்புலிகள் பெரும் எண்ணிக்கை யான போராளிகளையும், பெருமளவு வளங்களையும் இழப் பதற்குத் தயாராகவிருக்கின்றனர் என்பதை புலோப்பளையில் நடாத்தப்பட்ட போர் எடுத்துக்காட்டியது.

இதே எண்ணிக்கையான போராளிகளையும், ஆயுத தள பாடங்களையும் அதிக பலனைப் பெறக்கூடியவகையில் கிழக்கில் உபயோகித்திருக்கலாம். வடக்கிலுள்ள நிலப்பரப்பைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியமாகையால் தங்கள் படைப் பலத்தை கிழக்கிற்கு அனுப்பிவைக்க விடுதலைப்புலிகள் விரும்ப வில்லை. சிறந்த நிலப்பரப்பைக்கொண்ட ஆனையிறவு - வெற் றிலைக்கேணிப் பகுதியை தக்கவைத்துக்கொள்ள இராணுவத் திற்கு இயலாதென விடுதலைப்புலிகள் அறிந்திருந்தபோதிலும் யாழ்தேவி நடவடிக்கையின்போது புலோப்பளையில் தாக்குதலை நடாத்த விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் உத்தரவிட்டி ருந்தது.

## கவனத்தில் எடுக்கப்படாத விடயம்

போராளிகளை இராணுவத்தினருடன் நேருக்குநேர் எதிர்த்து நின்று போராடச் செய்து தங்கள் மேல்நிலையை எடுத்துக்காட் டியதன் மூலம் கிளாலியில் தாங்கள் வெற்றியீட்டியுள்ளதாக விடு தலைப்புலிகள் கூறியுள்ளபோதிலும், கிழக்கிலிருந்து படையினரை விலக்கிக் கொண்டதனாலேயே இராணுவம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள முடிந்ததென்ற உண்மையை யாழ்ப்பாண மக்களின் கவனத்திற்கு அவர்கள் கொண்டுவரவில்லை. இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதால் கிழக்கு மாகாணத்திலுள்ள தங்கள் தளங்களில் சில விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்குள் ளாகக் கூடியதாக இருந்ததென கிழக்கு மாகாணத்திலுள்ள இரா ணுவத்தினருடன் இணைந்து கடமையில் ஈடுபட்டுவரும் தமிழ்த்தீவி ரவாதிகள் கூறியுள்ளனர். இராணுவத்தை விலக்கிக்கொண்டதை உள்ளூரில் தாக்குதலை மேற்கொள்ளும் விடுதலைப்புலிகள் அறிந் திருந்தபோதிலும், பாதுகாப்பின்றி இருந்த இந்தத் தளங்களைத் தாக்குவதற்கு அவர்கள் முயலவில்லை என அவர்கள் கூறினர். விடுதலைப்புலிகள் சில காலமாக எதிர்பார்ப்பதுபோல யாழ்ப்பா ணத்தின் பிரதானமான இடங்களைக் கைப்பற்றுவதற்கான பாரிய நடவடிக்கையின் முதற்கட்ட நடவடிக்கையாக யாழ்தேவி நட வடிக்கை இருக்குமாயின் கிழக்கிலுள்ள தாக்குதல் குழுக்கள் வடக் கிற்கு வரவேண்டும் எனப் பணிக்கப்பட்டிருக்கலாம் என்பதை அவர்களுடைய நடவடிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன. மண லாற்றில் விடுதலைப்புலிகளின் தொடர் முகாமான 1-4 தளத்தின்

மீது பாரிய தாக்குதல் நடவடிக்கை ஒன்று 1991 ஆம் ஆண்டில் ஜெனரல் கொப்பேகடுவ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையைக் கைவிட இராணுவத்திற்கு நிர்ப்பந்தத்தைக் கொடுக்கக் கூடியவகையில் கிழக்கின் எந்தப்பகுதியிலும் ஒரு பாரிய தாக்குதலை மேற்கொள்ள, விடுதலைப்புலிகளால் முடியவில்லை அல்லது அவர்கள் விரும்பவில்லை. இருப்பினும் தங்கள் இடைவிடாத கரந்தடிப்போரை எதிர்கொள்ள இராணுவம் தன்பெரும் பகுதியை கிழக்கில் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை உணரும் விடுதலைப்புலிகள் இந்தப் பிரதேசத்தின் முக்கியத்துவத்தை அறிந்துள்ளனர். கிழக்குப்பகுதியின் அருமையை நன்கு பயன்படுத்திக் கொண்ட இவர்கள், கரந்தடித் தாக்குதலை தீவிரமாகவும், விரைவாகவும் படையினருக்கு எதிராக மேற்கொண்டு வடக்கிலுள்ள பகுதிகளைக் கைப்பற்ற எண்ணியிருந்த அரசாங்கம் தனது எண்ணத்தைக் கைவிடவும், படையினர் தங்கள் கவனத்தைக் கிழக்கில் செலுத்தவும் நிர்ப்பந்தித்தனர்.

வடக்கிலுள்ள நிலப்பரப்பரப்பின் பெரும் பகுதிகளைக் காப்பாற்றும் ஆற்றல் விடுதலைப்புலிகளுக்கு உண்டா எனக்கண்டறிவதற்காகவே கிழக்கிலிருந்து பெரும் எண்ணிக்கையான படையினர் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டனர் என்பதை விடுதலைப்புலிகள் அறிவர்.

கிளாலியில் நடைபெற்ற யுத்தத்தின் பின்பும் முதலில் யாழ்ப்பாணத்தைக் காப்பாற்றும் தங்கள் திட்டத்தைக் கைவிடாது விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் ஏன் அதைப்பின்பற்றுகின்றார்கள். முதலாவதாக கிழக்கில் மேற்கொள்ளப்படும் கரந்தடிப் போர் போன்றில்லாது யாழ்தேவி இராணுவ நடவடிக்கை போன்ற பாரியநடவடிக்கை ஒன்று யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படுமாயின் அது பாரிய அரசியல் தாக்கங்களை உள்ளூரிலும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்படுத்தும். பாரிய தாக்குதல்களின்போது மேற்கொள்ளப்படும் குண்டுவீச்சுத் தாக்குதல்கள், எறிகணைத்தாக்குதல்கள் ஆகியவற்றால் பாதிப்படையும் பல எண்ணிக்கையான குடும்பங்கள் இடம்பெயர்ந்து செல்வதாலும், தாக்குதல்களை மேற்கொள்ளும் பகுதிகளுக்கு வெளியேயுள்ள இடங்கள் அழிக்கப்படுவதால் பொதுமக்கள் கோபமுற்றிருப்பதாலும் வடக்கிலுள்ள விடுதலைப்புலிகளுக்கு இதுபோன்ற தாக்குதல்கள் பெரும் நன்மைபயப்பதாக இருப்பதுடன், பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்தும் கோபமுற்ற மக்களிடமிருந்தும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் போராளிகளாக மாற வாய்ப்பளிக்கின்றது. யாழ்தேவி நடவடிக்கை முடிவுற்ற அடுத்தவாரத்தில் 600 – 700 வரையிலான இளைஞர்கள் விடு

தலைப்புலிகள் போராளிகளாகத் தங்களுடன் இணைத்துக்கொண்டனர் எனத்தெரியவருகின்றது. முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கிழக்கு விளங்குகையில் முதலில் யாழ்ப்பாணத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதெற்கென அதிக எண்ணிக்கையான போராளிகளை அங்கு வைத்திருப்பதற்கு தேவையற்ற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. யாழ்தேவி நடவடிக்கையை ஆரம்பிப்பதற்குப் பல மாதங்களுக்கு முன்னர் யாழ் குடாநாட்டிற்குச் செல்லக்கூடிய பாதை ஒன்றைத் திறந்துவிடுவதற்காக பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்காகவோ, அல்லது யாழ்ப்பாணத்தின் மீது நடாத்தப்படக்கூடிய எந்தவொரு இராணுவ தாக்குதல்களையும் எதிர்கொண்டு தடுப்பதற்கோ தங்கள் வளங்களில் பெரும் பகுதியையும் பெரும் எண்ணிக்கையான போராளிகளையும் கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகள் விலகிக் கொள்ளவேண்டியதாகவிருந்தது. யாழ்தேவி நடவடிக்கைக்குத் தேவையான துருப்பினரைக் கிழக்கிலிருந்து பெறுவதற்கு இது இராணுவத்திற்கு நல்ல வாய்ப்பை அளித்தது.

கிழக்கிலிருந்து படையினரை விலக்கிக் கொண்டதால் அங்குள்ள இராணுவத் தளங்கள் பாதுகாப்பின்றி இருந்தபோதிலும் படையினரின் கவனத்தைத் திசைதிருப்பக்கூடிய பாரிய தாக்குதல் நடவடிக்கை எதனையும் விடுதலைப் புலிகளால் அந்த மேற்கொள்ள முடியவில்லை. இராணுவத்தினரின் கவனத்தை வடக்கிலிருந்து திசைதிருப்ப சிறிய செலவீனத்தை ஏற்படுத்தக் கூடிய புலோப்பளைப்போரை மேற்கொள்ள விடுதலைப்புலிகள் வகுத்த திட்டம் இடமளித்துள்ளது.

கிளாலிப் போருக்குப் பின் விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் ஆயுத்தங்கள், இராணுவத்தினரின் பாரிய இன்னொரு தாக்குதலை எதிர்பார்த்து தங்கள் மனிதவளத்தையும், மற்றைய வளங்களையும் குடாநாட்டில் குவிக்கும் கொள்கையைத்தொடர்ந்தும் கடைப்பிடிக்க விரும்புகின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது கிழக்கில் கரந்தடிப்போரைத் தீவிரப்படுத்துவதை விடுத்து, கிழக்கிலிருந்து பெற்ற படையினர்மூலம் வலுப்பெற்றிருக்கும் இராணுவத்தை எதிர்க்க விடுதலைப்புலிகள் தங்களைத் தயார்ப்படுத்துகிறார்கள்

விடுதலைப்புலிகளின் இந்தக் கொள்கை இராணுவரீதியாக அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாகவில்லை. கிழக்கிலுள்ள உள்ளூர் சபைகளுக்கான தேர்தல்களை நடாத்தி முடித்ததும் இயல்பு நிலையை அங்கு கொண்டுவர அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டம் மேற்குலக நாடுகளின் ஆதரவைப் பெறுவதுடன்,

கிழக்கிலுள்ள இராணுவத்தின் பெரும் பகுதியை வடக்கிற்கு அனுப்புவதற்கு ஐக்கியதேசியக் கட்சியின் தலைமைப்பீடத்திற்கு உதவுவனவாகவும் இருக்கும். இது கைகூடியபின் மரபு ரீதியான தாக்குதல்களை வடக்கில். தொடர்ச்சியாக நடாத்தக்கூடிய நிலையில் அரசாங்கம் இருக்கும் இந்நிலையில் விடுதலைப்புலிகள் கரந்தடிப்போரில் ஈடுபடின் அதிகமானவர்கள் போராளிகளாக இணைந்து கொள்ளவேண்டும் என்ற பொதுமக்களின் ஆர்வம் குறையும் இன்னொரு புறத்தில், வடக்கிலுள்ள புலோப்பளையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைப்போன்ற பாரிய தாக்குதல்களைப் பற்றிய தீவிர பிரச்சாரம், கிழக்கிலுள்ள தமிழ்மக்களும், முஸ்லிம் மக்களும் நீண்டகாலமாகக் கொண்டிருக்கும் அரசியல் கருத்துக்களை மாற்ற உதவும். விடுதலைப்புலிகள் இதை நன்கு அறிவர். குடாநாட்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் படவிருக்கும் இராணுவத் தாக்குதல்களை முறியடிப்பதன் மூலம் கிழக்கில் தங்களுடன் போர்புரியவிருக்கும் இராணுவத்தின் வலிமையைக் குறைக்கலாம் என்ற நோக்கில் அவர்கள் செயற்படுவதாகத் தோன்றுகின்றது.

## கட்டமைப்பு

அண்மைக்காலங்களில் விடுதலைப்புலிகள் தங்கள் இராணுவ வலிமையை வடக்கில் அதிகரித்துள்ளபோதிலும், கிழக்குப் பகுதியினுள்ளும் அதன் வெளியிலும் எந்தநேரத்திலும் ஈடுபடுத்தக் கூடிய வகையில் பெரும் எண்ணிக்கையைக் கொண்ட இராணுவக் கட்டமைப்பை கீழ் மாகாணத்தின் பிரதேசங்களில் கொண்டுள்ளனர். பாரிய இராணுவ நடவடிக்கையின் போது போர்த்தளபாடங்களை எடுத்துச் செல்லுதல், முதலுதவி வழங்குதல், காயப்பட்டவர்களை அப்புறப்படுத்துதல் போன்ற சேவைகளைக் குடாநாட்டு மக்கள் ஆர்வத்துடனும், தன்னிச்சையாகவும் மேற்கொள்ளக் கூடிய ஆர்வத்தை ஊட்டுவதற்கு விடுதலைப்புலிகள் அவர்களைப் போர்க்காலச் சூழ்நிலையில் வைத்திருக்கவேண்டியுள்ளது. இதற்கு மாறாக பகைவர்களின் பிரதேசத்திற்குள் பிரவேசிக்கும் இராணுவம் பாதிப்புறும் தங்கள் படையினரை அப்புறப்படுத்த தங்கள் படையினரையே உபயோகிக்க வேண்டியிருப்பதால் உக்கிரமான போர் நடக்கும்போது உடல்நலம் வாய்ந்த இராணுவத்தினரின் சேவையை அது பெறமுடியாத நிலை ஏற்படுகின்றது.

மக்களைப் போர்க்காலச் சூழ்நிலையில் வைத்திருப்பதற்கு விடுதலைப்புலிகளுக்கு வடக்கில் போர் அவசியமானதாகவுள்ளது. யாழ்தேவி இராணுவ நடவடிக்கைபோன்ற பாரிய தாக்குதல்

களின் போது இராணுவத்தினரின் போரிடும் ஆற்றலை அழித்தொழிப்பதற்கு இது இன்றியமையாததென அவர்கள் கருதுகின்றார்கள்.

முதலில் கிழக்கைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என்ற அரசாங்கத்தின் அணுகுமுறையே, முதலில் யாழ்ப்பாணத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற விடுதலைப்புலிகளின் அணுகுமுறையில் உள்ள இந்த அம்சங்களைக் கவனத்தில் எடுக்காது செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தைக் காப்பாற்ற முன்னுரிமை கொடுக்கும் விடுதலைப்புலிகளின் இராணுவ அணுகுமுறை அரசாங்கத்திற்கு அனுகூலமாக இருக்குமா அல்லது முதலில் கிழக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கை விடுதலைப்புலிகளுக்கு அனுகூலமாக இருக்குமா, என்பதை கிளாலிப்போருக்குப்பின் நடைபெறவிருக்கும் போர் தெரியப்படுத்தக் கூடியதாயிருக்கும்.

## சேர். வின்சன்ஸ் சேர்ச்சில் கண்காட்சி

இரண்டாவது மகாயுத்தத்தில் இங்கிலாந்தின் கதாநாயகனும், பிரதமருமான வின்ஸன் சேர்ச்சில் பிரபு ஒரு கூட்டத்தில் பேசுவதற்கு மேடைக்கு வந்தார். அவரது ஆதரவாளர் ஒருவர் அங்கு இருந்த கூட்டத்தைச் சுட்டிக்காட்டி "திரு. சேர்ச்சில் அவர்களே! நீங்கள் புகழ்பெற்றவர். 5000 பேர் வரையில் உங்களது பேச்சைக் கேட்கக் கூடியுள்ளர்." என்றார்.

சேர்ச்சில் இதனால் கவரப்படவில்லை. அவர் அசட்டையாகக் கூறினார். "எனது நண்பரே, அவர்கள் எனது பேச்சைக் கேட்க வரவில்லை. அவர்கள் வந்தது பொழுதுபோக்கிற்காகவே. நாளைக்கு நான் தூக்கிலிடப்படுவேன் என்று அறிவித்தால், நான் தூக்கிலிடப்படுவதைக்காண ஐம்பதாயிரம் பேர்கள் கூடுவார்கள், அதைப் பார்த்து நீர் ஆச்சரியப்படத்தேவையில்லை."

# பிள்ளைகள்: உலகத்தின் ஒளி

சகுந்தலா பெரேரா
சுவேந்திரினி முத்துதந்திரி

*... ஆயிரக்கணக்கான சிறுவர்களின் வாழ்க்கை ஒரு போராட்டமாகவும், நடைபாதையே வீடாகவும், கொடிய கும்பல் தலைவர்களே பெற்றோராகவும் உள்ளனர். இன்று நடைபெறும் உலக சிறுவர் தினத்தைப்பற்றி இவர்களுக்கென்ன விளங்கப்போகிறது. இது ஒரு வியப்புக்குரிய விடயமாகும்.*

பிள்ளை பராமரிப்பு நன்னடத்தை திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வு ஒன்றின்படி, வீதிகளில் சுற்றித்திரியும் `5,000 சிறுவர்களில் 5000 க்கும் மேற்பட்டோர் தாய் இறந்த பின் தந்தை மறுமணம் புரிவதனாலேயே இந்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

மேலும் இந்த ஆய்வில் கண்டறியப்பட்டதாவது; அநேகமான சிறுவர்கள் தங்களுடைய கல்வி தடைப்பட்டதும் தெருக்களில் புகலிடம் தேடுகின்றனர்.

ஆயினும் இப்பராமரிப்புத் திணைக்களத்தின் அதிகாரியான திருமதி பத்மா ரணசிங்கவின் கூற்றுப்படி; இச்சிறுவர்கள் புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்ட பின்பு பாடசாலைக்கு அனுப்பப்படும்போது அவர்கள் கல்வியில் சிறந்தவர்களாகவும், வகுப்பறையில் நடக்கும் நிகழ்ச்சிகளில் அதிகளவு ஆர்வம் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அநேகமான தெருச்சிறுவர்கள் தங்களுடைய அன்றாட நாட்களை காலை 6 மணிக்கு வேலை தேடுவதோடு ஆரம்பிக்கின்றனர். அவர்களின் வேலையானது பிச்சை எடுப்பதிலிருந்து கொள்ளையடிப்பதும், போதைவஸ்து விற்பதுமாக இருக்கும். காலை 11 மணிவரை தங்களுடைய நேரத்தைக் கடத்தி, பகல் 1 மணிக்குக் குளிப்பதற்காக தமது வேலைகளை நிறுத்துவார்கள்.

பொது நூலகம் மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்.

மதிய போசனத்தை உணவு விடுதிகளிலும், உணவகங்களிலுமுள்ள குப்பைத் தொட்டிகளிலிருந்து எடுத்து உண்பதுடன், அதற்காக இருமணித்தியாலங்களையும் செலவிடுவார்கள். பிறகு மாலை 6 மணிவரை வேலை செய்தபின்பு காலி முகத்திடலில் (GALLE FACE GREEN) அலைந்து திரிவார்கள். நாளைய சந்ததியினரான இச்சிறுவர்கள் நடைபாதையையே படுக்கையாக அமைத்து உணவையும் உய்வையும் எண்ணமாகக் கொண்டு திரிகின்றனர்.

நகரத்தின் கீழ் உலகத்துடன் தொடர்புள்ள வயது வந்தவர்களால் நன்றாக ஒழுங்கு செய்யப்பட்ட கும்பலுடன் இணைந்து சில சிறுவர்கள் தனிமையாகச் செயற்படுவதுண்டு.

கொழும்பு நகரில் இவ்வாறான ஏழு கும்பல்கள் செயற்படுவதாக ஒரு ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. 40 வயதுள்ள தன்னினச் சேர்க்கையில் ஈடுபடும் ஒரு மனிதனை தலைவனாகக் கொண்ட "அ" கும்பலில் 24 சிறுவர்கள் உள்ளனர். இவன் இச்சிறுவர்களுக்கு இரவில் இருப்பிடவசதி கொடுப்பதனால் இவர்கள் அவன் இடும் கட்டளைகளை நிறைவேற்றுவதுடன் அவனுக்கு அடிபணிந்தும் நடக்கின்றார்கள்.

35 வயதினையுடைய ஒரு மனிதனை தலைவனாகக் கொண்ட "ஆ" கும்பலில் உள்ள 12 சிறுவர்கள் அன்னாசிப்பழங்கள் விற்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றனர். இரவு வேளைகளில் இச்சிறுவர்களை தன்னினச் சேர்க்கையாளருக்கு அவர்களின் பாதுகாவலனால் விற்கப்படுவதுண்டு.

50 வயதினையுடைய ஒரு மனிதனைத் தலைவனாகக் கொண்ட "இ" கும்பலில் உள்ள 8 சிறுவர்கள் நகரின் பல இடங்களில் பிச்சை எடுப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றார்கள். மாலையில் அவர்கள் பிச்சை எடுக்கும் பணத்தில் பெருந்தொகையைத் தான் வைத்துக்கொண்டு மிகுதியை சிறுவர்களுக்குப் பகிர்ந்தளிக்கின்றான்.

ஜா - எலவில் வசிக்கும் ஒரு மதிக்கத்தக்க மனிதனால் நடாத்தப்படும் "ஈ" கும்பலில் உள்ள 5 சிறுவர்கள் நடைபாதையிலுள்ள மரக்கறிவகைகளை சேகரித்து விற்பதற்கு பயன்படுத்தப்படுகின்றார்கள்.

35 வயதினையுடைய விவாகமாகாத ஒரு மனிதனைத் தலைவனாகக்கொண்ட "உ" கும்பலில் உள்ள சிறுவர்கள் போக்குவரத்

102037

துச் சாதனங்களில் மக்களை ஏற்றுவதைத் தொழிலாகக்கொண்டு உள்ளனர். இம்மனிதன் முக்கியமான கொலைகளில் தொடர்புள்ளவன்.

நடுத்தர வயதினையுடைய ஒரு மனிதனைத் தலைவனாகக் கொண்ட "ஊ" கும்பலிலுள்ள இரு சிறுவர்கள், குருடர்கள் பிச்சை எடுப்பதற்கு உதவுகின்றார்கள்.

28 வயதினையுடைய ஒரு இளைஞனை தலைவனாகக் கொண்ட "எ" கும்பலிலுள்ள இரு சிறுவர்கள் கடைகளில் வெங்காயம் மிளகாய் விற்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றனர்.

1980-ம் ஆண்டின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின்படி, 50,000 பேரைக்கொண்ட பிச்சைக்கார சமூகத்துடன் 15,000 தெருச்சிறுவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் நாளாந்த சூழலுக்கு ஏற்றவாறு வாழ்பவர்களாக இருக்கின்றனர்.

கருமை நிறமும், அறிவுக் கூர்மையுமுள்ள கண்களைக் கொண்ட கமலா என்ற 12 வயதுச் சிறுமி தனது அன்றாட சீவியத்திற்காகத் தனது இனிமையான குழந்தைக் குரலில் பாடும் ராகமில்லா பாடல்களைவிட தனக்கு ஒரு நிரந்தர வேலை கிடைக்கவேண்டும் என்பதே தனது கனவாகும் என்று விளக்கிக் கூறினாள். குறும்புத்தனத்தோடும், மடைத்தனமான துணிச்சலோடும் நடைபாதையில் அலைந்துதிரியும் கமலாவின் சகோதரனான வியுலா என்ற 10 வயதுச் சிறுவன் தன்னுடைய இலட்சியம் ஒரு கோடீஸ்வரராவதே என்று மிகுந்த நம்பிக்கையுடன் கூறினான்.

பிள்ளை பராமரிப்பு நன்னடத்தைத் திணைக்கள அதிகாரிகளினால் நடாத்தப்பட்ட ஆய்வில் தெருச்சிறார்கள் சுற்றித் திரிந்து போதைவஸ்த்து விற்பதும், விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவதும் நீங்கலாக பலதரப்பட்ட ஒழுங்கற்ற வேலைகளில் ஈடுபடுத்துவதும் தெரியவந்துள்ளது.

இவற்றில் மிகவும் வழக்கமாக மேற்கொள்ளும் வேலை பிச்சை எடுப்பதாகும். இச் சிறுவர்கள் நாளாந்தம் ரூபா 75/- இல் இருந்து ரூபா 200/- வரை சேகரிக்கின்றனர்.

ஒழுங்கு செய்யப்பட்ட சில கும்பல்கள் வாகனங்களில் ஏற்றும் போதோ அல்லது இறக்கும்போது சீனி மூடைகளிலிருந்து சிந்தும் சீனிகளை சேகரித்து கடைகளுக்கு விற்பனை செய்வதை தொழிலாகக் கொண்டுள்ளனர். அநேகமாக இவர்களை கொழும்பு 4

தெருக்களில் காணலாம். இவ்வாறு சேகரிக்கப்படும் சீனி 1 கிலோ ரூபா 12 க்கு கசிப்பு தயாரிப்பில் ஈடுபட்டுள்ள முதலாளிக்கு விற்கப்படுகின்றன. இச் சிறுவர்கள் நாளாந்தம் ரூபா 15 உழைக்கின்றனர்.

புறக்கோட்டை மனிங் சந்தையில் கீழே விழும் மரக்கறிகளையும், பழங்களையும், சேகரித்து நடைபாதையில் விற்பனை செய்வது அல்லது தெருவோரங்களிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளுக்கு விற்பனைசெய்வது இச்சிறுவர்களுக்கு மற்றுமொரு வருமானம் வரும் வழியாகவுள்ளது.

இலங்கையிலுள்ள தெருச்சிறார்களை அலட்சியம் செய்யவோ, அல்லது கவனத்தில் எடுக்காது விட்டாலும் இவர்கள் ஏனைய தென்னாசியா நாடுகள் மற்றும் லத்தீன் அமெரிக்கா நாடுகளிலுள்ள சிறார்களைப்போல் சமூகத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதில்லை. உதாரணமாக பிரேசில் நாட்டில் இட்பிரச்சினை அளவுக்கு மீறிப் போயிருப்பதாகவும், அந்நாட்டுப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெருக்களில் உறங்கும் பல சிறுவர் கும்பல்களிடையே துப்பாக்கிச் சண்டைத்தொடர்புகளை அவதானித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இத்தெருச் சிறார்களினால் உருவாக்கப்படும் மிகவும் வழக்கமான பிரச்சினைகள் என்னவென்றால், தெருச்சண்டை, கொள்ளையடித்தல், களவு, சூதாடுதல், அலைந்து திரிதல், ஊரடங்குச்சட்டத்தை மீறுதல் ஆகியனவாகும். இலங்கையில் இப்பிரச்சினை சிறியதாயினும் தெருச் சிறார்களின் எண்ணிக்கையை மேலும் வளராமல் தடுப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

"நாங்கள் பல திட்டங்களை நடைமுறைப்படுத்த முற்பட்டாலும், இப்பிரச்சினையை கையாளுவதற்கு அது போதுமானதாக இல்லை" என்று பிள்ளைகள் பராமரிப்பு நன்னடத்தை திணைக்களத்தின் தலைவியான திருமதி பத்மா ரணசிங்க கூறினார்.

"இப் பிரச்சினையில் இருந்து நாங்கள் மீள்வதற்கு உறுதியான கட்டமைப்புடைய குடும்பங்களை உருவாக்குவதில் சமூகம் கவனம் செலுத்தவேண்டும். பிரிந்த குடும்பங்களே இப்பிரச்சினை வளர்வதற்குப் பொறுப்பாகவுள்ளன" என்று அவர் மேலும் கூறினார்.

அரசாங்கம் அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து சமூகத்திலிருக்கும் பிடிவாத கும்பலை புனரமைத்து திருத்தி நல் வழியைக் காட்டுவதற்குப் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மூன்று அரச நிறுவனங்கள் அலைந்து திரியும் பிள்ளைகளுக்கு இருப்பிட வசதிகளை அளிக்கின்றது. கங்கொடவில, ரிதிகம தடுப்பு இல்லங்கள் சமூகசேவைத் திணைக்களங்களினால் பரா மரிக்கப்படுகின்றது. பிள்ளை பராமரிப்பு நன்னடத்தைத் திணைக் களமும் புறம்பான தடுப்பு இல்லம் ஒன்றை நடாத்துகின்றது. இந்த இல்லங்கள் "தடுப்பு இல்லங்கள்" என்று அழைக்கப்பட் டாலும் அங்குள்ள பிள்ளைகள் அமைதியான சூழ்நிலையில் சுதந்திரமாக வளர அனுமதிக்கப்படுகின்றார்கள். இருப்பினும், சில பிள்ளைகள் இங்கிருந்து தப்பியோடியமை இத் தடுப்பு இல் லங்களும் இப்பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வாகாது என்ப தையே காட்டுகின்றது.

தெருச்சிறார்களுக்கு நிலையங்கள் அமைப்பதென்ற அரசாங் கத்தின் கொள்கையானது தற்போது வேறு வடிவமாக்கப்பட்டு சமுதாயத்தின் கீழ் புனரமைத்தல் என்ற புதிய முறையை அறி முகம் செய்து இப்பிரச்சினையைக் கையாளத் திட்டமிடப்பட் டுள்ளது.

அத்துடன் உள்ளூர் தொண்டர் ஸ்தாபனமான ரெட்பானா வும், ஏனைய வெளிநாட்டு நிறுவனங்களும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக ஒன்று சேர்ந்துள்ளன.

சமூக சேவைத்திணைக்களம் இத்தெரு சிறார்களுக்கென்று ஒரு புதிய திட்டமான "நாளாந்த பராமரிப்பு நிலையம்" ஒன்றை திம்பிரிகஸ்யாவில் நிறுவியுள்ளது.

புனரமைத்தலும், சீர்திருத்த திட்டங்களும் முடிவில்லாமல் நடைபெற்றாலும் இத் தெரு சிறார்களின் நீண்ட அவலப்பாதை யில் ஏதும் ஒளிதென்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை.

இலங்கையிலும் மற்றும் உலகெங்கும் உள்ள கமலா, விபுலா போன்றவர்களும் ஆயிரக்கணக்கான சிறுவர்களின் வாழ்க்கை ஒரு போராட்டமாகவும், நடைபாதையே வீடாகவும், கொடிய கும்பல் தலைவர்களே பெற்றோராகவும் உள்ளனர். இன்று நடை பெறும் உலக சிறுவர் தினத்தைப்பற்றி இவர்களுக்கு என்ன விளங்கப்போகிறது. இது ஒரு வியப்புக்குரிய விடயமாகும்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# யாழ்தேவி நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாக இராணுவத் தளபதி கூறுகின்றார்

( த சன்டே ரைம்ஸ் – 17.10.93)

*சர்ச்சைக்குரிய யாழ்தேவி நடவடிக்கை பற்றி பாதுகாப்பு நிருபர் இந்தப் பந்தியில் பல வினாக்களைச் சென்ற வாரம் எழுப்பியிருந்தார். இன்றைய இந்த நேர்காணலில் இராணுவத் தளபதியான திரு. சிசில் வைத்தியரட்னா அவர்கள் அந்தக் கேள்விகள் சிலவற்றுக்கு பதில் தருகின்றார்.*

யாழ்தேவி நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாகவும், பாதுகாப்புப் படையினர் தங்களுடைய குறிக்கோள்கள் அனைத்தையும் அடைந்துள்ளதாகவும் இராணுவத் தளபதியான திரு. சிசில் வைத்தியரட்ணா கூறியுள்ளார்.

யாழ்குடா நாட்டிற்குள் இராணுவம் புகாவண்ணம் தடுப்பதற்கு தமிழ் மக்களைத் தங்களுடைய இயக்கத்தில் இணைந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் அழைப்பு விடுத்தது. இந்த இராணுவ நடவடிக்கை வெற்றியளித்துள்ளது, என்பதைத் தெளிவாக வெளிக்காட்டுகின்றது என அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தப் பகுதியிலிருந்தும் அவர்களை விரட்டியடிக்கக்கூடிய ஆற்றலைத் தாங்கள் பெற்றுவிட்டதை இராணுவத்தினர் இதன் மூலம் நிரூபித்துவிட்டனர் என அவர் மேலும் கூறினார்.

**அவருடைய நேர்காணலிலிருந்து சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.**

கேள்வி:- அண்மையில் மேற்கொள்ளப்பட்ட யாழ்தேவி நடவடிக்கைபற்றி பலவிதமான கருத்துக்கள் நிலவுகின்றதே. உங்கள் கணிப்பீடு என்ன?

பதில்:- இந்த நடவடிக்கை எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது என்பதை மதிப்பிடுவதற்கு, இது என்ன குறிக்கோளுக்காக மேற்கொள்ளப்பட்டது என்பதை விளங்கிக்கொள்வது அவசியமாகும். கிளாலிக்கு முன்னேறிச் சென்று அங்குள்ள படகுகளையும், இறங்குதுறை போன்ற மற்றைய வசதிகளையும் அழிப்பதன் மூலம் விடுதலைப்புலிகள் இதைத் தங்கள் போக்குவரத்திற்கு உபயோகிப்பதைத் தடைசெய்வது இதன் முதலாவது குறிக்கோளாகும். முன்னேறிச் செல்லும்போது விடுதலைப்புலிகளின் முகாம்கள் அனைத்தையும் அழிப்பது இரண்டாவது குறிக்கோளாகும். எவ்வளவு விடுதலைப்புலிகளை வெளிக்கொணரவைத்து கொல்ல முடியுமோ அவ்வளவுபேரையும் அழிப்பது மூன்றாவது குறிக்கோளாகும். இந்தப் பாதையை உபயோகிப்பதன் மூலம் மாதந்தோறும் பல மில்லியன் ரூபாய்களை விடுதலைப்புலிகள் பெறுவதைத் தடைசெய்வது நான்காவது குறிக்கோளாகும். இந்த யாழ்தேவி நடவடிக்கை மூலம் நாங்கள் எங்களுடைய குறிக்கோள்கள் அனைத்தையும் அடைந்துவிட்டோம். இதை எங்கள் படையினரின் மகத்தான வெற்றி என்றே நான் கருதுகின்றேன். இதன்மூலம் யாழ்குடா நாட்டிலுள்ள எந்தவொரு இடத்திற்கும் படையினரால் செல்லமுடியும் என்பதை நாம் விடுதலைப்புலிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

கேள்வி:- விடுதலைப்புலிகளின் படகுகளை அழிப்பதன் மூலம் கடல் நீரேரியில் அவர்களின் நடமாட்டத்தை இல்லாதொழிப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் எனக் கூறப்படுகின்றது. வான்படையால் இதைநிறைவேற்றியிருக்கமுடியாதா?

பதில்:- விமானத்தாக்குதல் மூலம் மாத்திரம் இந்தநோக்கத்தை அடையக்கூடியதாக இருந்திருந்தால் அதைப் பற்றிச் சிந்தியாதிருந்ததற்கு இந்த நாட்டிலுள்ள இராணுவ மேலாளர்கள் அனைவரும் முட்டாள்கள் என நீங்கள் நினைத்தீர்களா? இப்படியான பயங்கரமான கருத்துக்களைத் தெரிவிப்பவர்களை யுத்தத்தை எப்படி வெல்வது என ஆலோசனை நடாத்த உருவாக்கும் விசேட சபைக்கு அழைத்து போர்த்திறன

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

பற்றிய கருத்தை அவர்களிடம் இருந்து பெறவேண்டும்.

**கேள்வி:-** 18 கிலோமீற்றர் தூரம் வரை முன்னேறிச் சென்ற படையினர் கிளாலியிலிருந்து ஏன் வெளியேறிச் சென்றனர்?

**பதில்:-** நாங்கள் வெற்றிகரமாக எட்டிய எங்கள் இராணுவக் குறிக்கோள்கள் பற்றி அன்றும் தெளிவாக இருந்தோம் இன்றும் தெளிவாக இருக்கின்றோம். எங்களுடைய குறிக்கோள்களை



லெப். ஜெனரல் சிசில வைத்தியரத்தினா

சாதாரண மக்களும் நாற்காலியில் இருந்துகொண்டு விமர்சிப்பவர்களும் விளங்கிக் கொள்ளாவிடில் அவற்றை அவர்களுக்கு விளக்குவது எனதுகடமையல்ல.

**கேள்வி:-** அது ஒரு அரசியல் தீர்மானமா அல்லது இராணுவத் தீர்மானமா?

**பதில்:-** அரசியல் தந்திரோபாயத்தை நிறைவேற்றுவதற்காக இராணுவமே இதைத் தீர்மானித்தது.

**கேள்வி:-** கடல் நீரேரியில் படகுகளின் நடமாட்டம் இப்பொழுதும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இதைப்பற்றி கூறமுடியுமா?

**பதில்:-** எங்களுக்குத் தெரிந்தவரையில் நீங்கள் குறிப்பிடும் கிளாலிக்கும், குஞ்சிப்பரந்தனுக்கும் இடையேயான போக்குவரத்து எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. எங்களுடைய இராணுவப் புலனாய்வுத் துறையினர் கூறியதைவிட அதிகமான விபரங்களை கொழும்பிலுள்ள நீங்கள் அறிந்திருந்தால் நாட்டுப் பற்றுள்ளவர்கள் ஆயின் அவற்றை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

PUBLIC LIBRARY

கேள்வி:- விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுவதற்கு மேலும் அதிகமான படையினரை இராணுவத்தில் சேர்த்து அதை வலுப்படுத்தவேண்டும் என நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்:- வடக்கிலும், கிழக்கிலும் பாரிய அளவில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதால், இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரித்து இராணுவத்தை வலுப்படுத்த வேண்டும் என்ற கருத்தை நான் நீண்டநாட்களாகக் கொண்டுள்ளேன். முன்னாள் சனாதிபதி அவர்களுக்கு இதை நான் தெரியப்படுத்தியிருந்தேன். அது பலனளிக்கவில்லை. ஆனால் இன்றைய சனாதிபதி விஜயதுங்கா அவர்கள் ஒத்துணர்வுள்ளவராக இருக்கின்றார். இராணுவத் தளபதியாக ஜெனரல் வனசிங்கா அவர்கள் இருந்த வேளையில்கூட இராணுவத்தை வலுப்படுத்த மேலதிக துருப்புகளைச் சேர்க்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

கேள்வி:- உங்களுடைய துருப்புகளின் கட்டுப்பாட்டமைதி எப்படி இருக்கின்றது? தாக்குதல் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ள அவர்கள் விரும்புகின்றார்களா?

பதில்:- விடுதலைப்புலிகளின் ஆளணி மற்றும் தளபாடங்களுக்குப் பாரிய சேதத்தை ஏற்படுத்தியதைத் தெரிந்ததனால் படையினரின் கட்டுப்பாட்டமைதி மிகவும் உயர்ந்த நிலையிலுள்ளது. யாழ்தேவி நடவடிக்கையின்போது அவர்கள் பெற்ற பட்டறிவு அவர்களுக்குப் போராடும் ஆர்வத்தையும், நம்பிக்கையையும் ஊட்டி தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ளும் விருப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அவர்களின கட்டுப்பாட்டமைதி உயர்ந்தநிலையால் இருந்ததன் காரணமாகவே யாழ்தேவி நடவடிக்கையை மின்னல் வேகத்தில் நடாத்தமுடிந்தது. தங்கள் வீடுகளில் வசதிகளுடன் சுகமாக இருந்துகொண்டு விமர்சிப்பவர்களே படையினர் யுத்தகளத்தில் பலிக்கடா ஆக்கப்பட்டதாக முடிவுக்கு வந்துவிட்டார்கள். இந்த நாட்டைப் பிரிக்கப் போராடிவரும் விடுதலைப் புலிகளுக்கு உதவும் முகமாக இராணுவக் கட்டுக்கோப்பை வலுவிழக்கச் செய்து வேற்றுமைகளை உருவாக்க நாட்டுப்பற்றற்றவர்கள் முனைப்பாகச் செயற்படுவதையும் காணக் கூடியதாகவிருக்கின்றது.

கேள்வி:- இலங்கையில் இராணுவத்தை உருவாக்கிய தினத்தைக் கொண்டாடும் ஒக்டோபர் மாதத்திற்குமுன் வடக்கு மற்றும் கிழக்கில் நிலவும் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அண்மையில் நீங்கள் கூறியிருந்தீர்கள். இந்த நோக்கத்தினை எவ்வாறு நிறைவேற்றுவீர்கள் என நீங்கள் நம்புகின்றீர்கள்?

பதில்:- 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்குமுன் பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலை இல்லாதொழிப்பதற்கு இராணுவ மேலாளர்களும், படையினரும் தங்களை அர்ப்பணித்து சேவை ஆற்றவேண்டும் என்றே அப்போது நான் கூறியிருந்தேன். அவர்கள் இந்தப் பணியைச் செய்துமுடிப்பார்கள் என எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு.

கேள்வி:- மட்டுப்படுத்தப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையில் அதிக இழப்புகள் ஏற்பட்டுள்ளதல்லவா?

பதில்:- போரில் இழப்புக்களை எதிர்பார்க்கவேண்டியிருப்பினும் அவை மிகவும் குறைந்த எண்ணிக்கையில் இருக்கவேண்டும். போதை மருந்து உட்கொண்டவர்களைப் போல் தோன்றிய பயங்கரவாதிகளுடன் நேருக்கு நேர் நின்று வீரத்துடன் போரிட்ட 118 மேலாளர்களையும், படையினரையும் நாம் இதில் இழந்துள்ளோம். இந்த நாட்டின் ஒருமைப்பாட்டை காப்பாற்றுவதற்குத் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த வீரமுடைய இவர்களை நாம் எப்பொழுதும் நினைவுகூறுவோம். வேறு பல சந்தர்ப்பங்களிலும் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தவர்களும் இவர்களுமாகத் தற்பொழுது 3,500 பேருக்கு அதிகமானோர் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். இருப்பினும் யுத்தத்தை வென்று எங்கள் தாய் நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர இது தடையாக இருக்கப் போவதில்லை. இப்பொழுது விடுதலைப் புலிகள் குழம்பிய நிலையிலுள்ளனர். இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னா அவர்களின் கட்டளையிலுள்ள படைகளும், ஆயுதங்களும் பயங்கரமானவையும், இரக்கமற்றவையும் ஆகையால் அவை குடா நாட்டினுள் நுழைவதைத் தடுப்பதற்கு யாழ் மக்கள் அனைவரையும் தங்களுடன் இணையும்படி அவர்கள் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

# என்ன தவறு நடந்தது? பூநகரியில்!

(ஐலண்ட் — 21.11,93)

நிரேஷ் இளையதம்பி

''விடுதலைப்புலிகள் பூநகரியைத் தாக்குவார்கள் என்று இராணுவத்திற்கு போதியளவு எச்சரிக்கைகள் செய்யப்பட்டிருந்தன.'' அரசாங்கமும், படையினரும் பூநகரியில் இதுவரை கொல்லப்பட்ட, காயமடைந்த, காணாமற்போன படையினரைப் பற்றிய விளக்கங்களைப் பொதுமக்களுக்கு வெளியிடவில்லை. அதனால் பத்திரிகையாளர்களே அழிவைப்பற்றி விசாரித்து, ஆராய்ந்து, ஊகிக்க வேண்டியுள்ளது. உண்மையில் எந்தவிதத்தில் நோக்கினாலும் இது ஓர் அழிவாகும். விடுதலைப்புலிகள் தாக்குவார்கள் என்பது இராணுவத்திற்குத் தெரியும். அப்படியாயின் விடுதலைப்புலிகள் எவ்வாறு அதனை அழித்தார்கள்? இந்தக் கேள்வியும் இருள்மயமான வேளையில் எத்தனை இராணுவத்தினரும், கடற்படையினரும் படுகொலை செய்யப்பட்டனர் என்ற கேள்வியும் நாட்டு மக்களின் மனதில் நிற்கின்றன.

''விடுதலைப்புலிகள் பூநகரியைத் தாக்குவார்கள் என்று இராணுவத்திற்குப் போதியளவு எச்சரிக்கைகள் செய்யப்பட்டிருந்தன.''

பூநகரித் தாக்குதல் நடந்துகொண்டிருக்கும் பொழுதே எட்டு நாட்களுக்கு முன்பு பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டன் வணசிங்கா பத்திரிகையாளர் கூட்டத்தில் தந்த திடுக்கிடும் தகவல் இன்னமும் எங்கள் மனதில் எதிரொலிக்கின்றன.

இங்கே ''போதுமான'' என்ற சொல் முக்கியத்துவம் வாய்ந்தது. பாதுகாப்புச் செயலாளர் முன்னைய இராணுவத் தளபதியாவார். அவர் இராணுவத்திற்குப் போதிய எச்சரிக்கை கொடுக்கப்பட்டதென்று கூறியபோதும், இந்தப் பயங்கரமானதும், வெட்கப்படவேண்டியதுமான தோல்வி தடுக்கப்படாததேன்? முன்னெச்சரிக்கை முன்னேற்பாடாயிருக்கவில்லையா? அதனால் என்ன நடந்தது?

அரசாங்கமும், படையினரும் பூநகரியில் இதுவரை கொல்லப்பட்ட, காயமடைந்த, காணாமற்போன படையினரைப்பற்றிய விளக்கங்களைப் பொதுமக்களுக்கு வெளியிடவில்லை அதனால் பத்திரிகையாளர்களே அழிவைப்பற்றி விசாரித்து, ஆராய்ந்து, ஊகிக்கவேண்டியுள்ளது. உண்மையில் எந்தவிதத்தில் நோக்கினாலும் இது ஓர் அழிவாகும்.

விடுதலைப்புலிகள் தாக்குவார்கள் என்பது இராணுவத்திற்குத் தெரியும். அப்படியாயின் விடுதலைப்புலிகள் எவ்வாறு அதனை அழித்தார்கள்? இந்தக் கேள்வியும் இருள்மயமான வேளையில் எத்தனை இராணுவத்தினரும், கடற்படையினரும் படுகொலை செய்யப்பட்டனர் என்ற கேள்வியும் நாட்டு மக்களின் மனதில் நிற்கின்றன.

பலாலியில் சென்ற ஞாயிறு பத்திரிகையாளரைச் சந்தித்த இராணுவ நடவடிக்கை இயக்குனர் பிரிகேடியர் சி. எஸ். வீரசூரியாவும், இராணுவ உளவுப் பிரிவு இயக்குனர் பிரிகேடியர் லயனல் பாலகல்லவும், விடுதலைப் புலிகள் பூநகரியைத் தாக்குவார்கள் என்ற திட்டத்தை; இத்தாக்குதலும் அழிவும் நிகழ மூன்று மாதங்களுக்கு முன்பே அறிந்திருந்ததாகக் கூறினார்.

வடக்கிலும் தெற்கிலும் இருந்து பூநகரியையும் நாகதேவன் துறையையும் விடுதலைப்புலிகள் வேவுபார்த்தனர். அப்படிப் பட்ட சில விடுதலைப்புலிகளை இராணுவம் சுட்டும் இருந்தது.

இராணுவம் மேலோட்டமாக சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அனுபவம்பெற்ற 300 படையினர் உட்பட இலங்கை லைற் இன்பன்றி (CEYLON LIGHT INFANTRY) மூன்றாவது கஜபாகுபிரிவு ஆகிய இரண்டு படைப்பிரிவுகள் (BATTALIONS) பூநகரிக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

மேலும் தரைப்படைப் பிரிவும் அங்கிருந்தது. அவர்கள் 120 மி. மீ. மோட்டார் பீரங்கிகள், 106 மி. மீ. கவசவாகன பின்னுதைப்பற்ற பீரங்கி (R. C. L.) முதலியவற்றையும் வைத்திருந்தனர். செக்கோசிலோவக்கியா தயாரித்த ரி - 55, ரி - 85 ரக கவசவண்டிகள் (TANKS) போன்றவையும் பாதுகாப்பின் ஒரு பகுதியாக இருந்தன.

கப்பற்படையை நோக்கும்பொழுது நாகதேவன்துறை கடற்படைத் தளத்திலுள்ள ராடர் நிலையம் (NAVAL RADAR STATION) நீரேரிக்குமேல் நடத்தப்படும் எந்தத் தாக்குதலை

யும் எச்சரிக்கும்வகையாகவிருந்தது. இறங்குதுறையில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கரையோர ரோந்துப் படகுகள், ஐம்பது கலிபர் தானியங்கித் துப்பாக்கிகளை தாங்கிக்கொண்டிருந் தன. 350க்கும் மேற்பட்ட கடற்படையினர் அங்கு தங்கியிருந்தனர். இவர்களில் சிலர் ராடர் நிலையத்தைக் காத்து நின்றனர். மற்றவர்கள் சிறு கூட்டங்களாக இங்குமங்குமாக இருந்தனர்.

தளபதி வணசிங்காவின் கூற்றுப்படி காவற்படையினருக்கு இரவு வெளிச்சம், தளபாடங்கள், பிரகாசமான விளக்கு வட்டம் முதலியன கொடுக்கப்பட்டிருந்தன. எனினும் விடுதலைப் புலிகள் சிறிதளவில் நடாத்திய நடவடிக்கைகள் அங்கு தென்படவில்லை.

பூநகரியில் இருந்த பாதுகாப்புப் படையினரின் தொகை 2000 க்கும் மேற்பட்டதாகும்.

இரண்டு நாட்களில் விடுதலைப் புலிகள் 400 க்கும் ￼00 க்கும் இடைப்பட்ட படையினரைக் கொன்றனர். கொல்லப்பட்டவர் களில் 15 அதிகாரிகளும், 100 க்கு மேற்பட்ட கடற்படையினரும் அடங்குவர். மேலும் விடுதலைப்புலிகள் 5 கரையோர ரோந்து படகுகள், ஒரு ரி - 85 ரக டாங்கி, ஒரு ரி - 65 ரக பீரங்கி வண்டி, ஒரு 106 மி. மீ. பின்னுதைப்பற்ற பீரங்கி (R. C. L.), இரண்டு 120 மி. மீ. மோட்டார் பீரங்கிகள், டஸின் 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கிகள், மூன்று குண்டு செலுத்தும் கருவிகள், 50 இலகு இயந்திரத்துப்பாக்கிகள், 400 றைபிள் துப் பாக்கிகள் இந்த ஆயுதங்களுக்குவேண்டிய பெரும்தொகையான வெடிமருந்துகள் முதலியனவற்றைக் கைப்பற்றினர். மேலும் 600 பேர் வரையிலான இராணுவத்தினரும் கடற்படையினரும் காயப்பட்டுள்ளனர். ஒரு தரை தாக்கும் புக்காரா விமானமும் சேதப்படுத்தப்பட்டது.

செப்ரெம்பர் 10-ம் திகதி புதன்கிழமை இரவு 11.45 மணி யளவில் பல தொலைத் தொடர்பு சாதனங்கள் வடக்கில் செயற்பட்டன. அது ஏதோ ஒரு பெரும் நடவடிக்கை கட்டாய மாக நடக்கப் போகின்றதென்பதைக் குறிக்கின்றது. உடனேயே பலாலியிலுள்ள பிரிகேடியரினால் பலாலி, ஆனையிறவு, பூநகரி, காரைநகர் மற்றும் குடாநாட்டிலுள்ள பிரிவுகளும் எச்சரிக்கை செய்யப்பட்டு, படைகளை உசார் நிலையில் நிற்கும்படி பணிக் கப்பட்டது.

11-ம் திகதி இரவு 1.45 மணிக்கு முதலாவது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான விடுதலைப்புலிகள் யாழ்

நீரேரியிலுள்ள இடுப்பளவிலான நீரின் ஊடாக தென்கரையோர மாக வந்து நாகதேவன்துறையிலுள்ள கடற்படையின் 5 படகு களையும் தாக்கினார்கள்.

சில வினாடிகளில் அந்தப் படகுகளிலிருந்த 35 படைத்துறை யினரும் கொல்லப்பட்டனர். பி-114, பி-117, பி-120. பி-122, பி-123 இலக்க வோட்டர் ஜெற் படகுகளை விடுதலைப்புலிகள் கைப்பற்றிச் சென்றனர்.

அதைத் தொடர்ந்து நாகதேவன்துறைத் தளம் நீரேரியிலிருந் தும் தெற்கிலுமிருந்து பலத்த தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டது. அதன் வானொலி இயங்காமல் செய்யப்பட்டது. அதேநேரத்தில் பூநகரியில் உள்ள தரைப்படைத்தளமும் நாலாபக்கங்களில் இருந்து தாக்கப்பட்டது. அவர்கள் தளத்திற்குள் ஊடுருவிச் சென்றுள்ளார்கள். விடுதலைப்புலிகள் நன்கு திட்டமிட்டே இத் தாக்குதலைச் செய்திருக்கின்றார்கள். ஏனெனில் ஒவ்வொரு ஆட்லறியும் எங்கு பொருத்தப்பட்டுள்ளதென்பது அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது.

பீரங்கிகளுக்கு பொறுப்பாயிருந்த பல சிப்பாய்கள் உடனேயே கொல்லப்பட்டனர், விடுதலைப்புலிகள் ஐந்து 120 மி. மீ. மோட் டர் பீரங்கிகளில் இரண்டைக் கொண்டு சென்றனர். மூன்று சேதப்படுத்தப்பட்டன.

கேணல் (COLONEL) ரஞ்சித் சில்வாவின் கீழ் உள்ள சி. எல். ஐ. (C.L.I) யினர் பூநகரி முகாமைப் பாதுகாத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் விடுதலைப்புலிகளின் உறுதியான தும், அடுக்கடுக்கானதுமான தாக்குதலை எதிர்த்து நின்று தாக்குப் பிடித்தனர். விடுதலைப்புலிகள் உண்மையில் பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தனர். ஆனால் சி. எல். ஐ. யினர் நேருக்கு நேரான பலத்த சண்டையின் பின்பும் விடியும் வரை தாக்குப்பிடித்தனர். விடிந்தபொழுது தங்களில் 200 க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்திருந்ததைக் கண்டனர். ஆனால் அவர்களால் தம்பிரிவை உடைத்துவிட்டு கரையை அடைய முடி யாமல் இருந்தது. அங்கிருந்துதான் மேலதிக படைகள் வர வேண்டியிருந்தது. காயமடைந்தவர்கள் இருந்த காரணத்தினால் சி. எல். ஐ. படையினர் தொடர்ந்தும் சண்டையிட நேரிட்டது. வடக்கில் 3 ஜி. ஆர். நன்றாக முன்னேறவில்லை. தாக்குதல் தொடங்கும்பொழுது அவர்களின் தொலைத்தொடர்புச் சாதனங் கள் அழிக்கப்பட்டன. இருளிலும் நேருக்குநேரான சண்டையே

நடைபெற்றது. 5 மணித்தியாலத்தில் 3 ஜி. ஆர் க்கும் மூத்த அதிகாரிகளுக்கும் இடையில் தொடர்பில்லாமல் போய்விட்டது. அவர்கள் முழுப்படைப்பிரிவும் அழிக்கப்பட்டுவிட்டதாக எண்ணினர்.

விடிந்த பின்புதான் ஒரு சீ. எல். ஐ. யினர், மூன்று ஜீ. ஆருக்கு என்ன நடந்தது என்பதனை அறிவதற்காக வடக்குப்



11.11.93 பூநகரி முகாம் தகர்ப்பின்போது விடுதலைப்புலிகளால் கைப் பற்றப்பட்ட T-55 ரக டாங்கியுடன் போராளிகள்.

பகுதிநோக்கிச் செல்லும் நடவடிக்கையை மேற்கொண்டனர். இதனால் திரும்பவும் 3 ஜீ ஆருடன் தொடர்பு ஏற்படுத்த முடிந்தது. அதன் பின்பே முழுப்படையினரும் ஆறுதல் அடைந்தனர்.

பகல் வந்ததும் முதலாவது மேலதிகப்படை வந்தடைந்தது. பலாலி விமானத்தளத்திலிருந்து ஒரு புக்காரா விமானமும் மார்செற்றி (PUCCARO SIA MARCETTI) தரைதாக்கும் விமானங்களும் உதவிக்குவந்தன. இவை எதிரியின் நடவடிக்கைகளைத் தாக்கத் தொடங்கின. ஆனால் அவை வரையறுக்கப்பட்டதாகவே இருந்தன. ஏனெனில் இருதரப்பினரும் மிக நெருங்கிப்போர் செய்தனர். விமான ஓட்டிகள் தங்கள் சகாக்களைப் பாதுகாக்க இயலாதிருந்தனர். எனினும் நூற்றுக்கணக்கான போராளிகள் படகுகள் மூலம் கிளாலியிலிருந்து பூநகரி நோக்கி வந்துகொண்டிருந்தனர். விமானப் படையினர் அவர்களை பலமாகத்தாக்கினர். ஆனால் அனேகமானோர் பூநகரியை வந்தடைந்தனர்.

விமானப்படையினர் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட இரண்டு படகுகளில் ஒன்றை அழித்துவிட்டதாகக் கூறினர். ஆனால் இதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

மு படைத்தளபதிகளாகிய லெப். ஜெனரல் (LT. GENERAL) சிசில் வைத்தியரட்னா, வைஸ் அட்மிறல் (VICE ADMIRAL) மோகன் சமரசேகரா, எயார் மார்ஷல் (AIR MASHAL) டெறன்ஸ் குணவர்த்தனா ஆகியோர் பலாலிக்கு விரைந்தனர்.

அவர்களது உடனடிக் கவனம் நாகதேவன்துறை பற்றியதாயிருந்தது. பூநகரி இராணுவத் தளத்தை ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பாதுகாத்துக்கொண்டிருக்கும் பொழுது, நாகதேவன் துறை கடற்படைத்தள அதிகாரி லெப்டினன்ட் டி. என் உலுகுதென்னே தனது தளபதிக்கு ஆரம்பத்தில் நாகதேவன் துறையைப் பாதுகாக்க 100 கடற்படையினர் இருந்தனர். இப்பொழுது 60 பேர் மட்டும்தான் எஞ்சியுள்ளனர் எனக் கூறினார். லெப்டினன்ட் உலுகுதென்ன காயப்பட்டிருந்தபோதும் தொலைபேசிமூலம் பேசினார். அது வேலை செய்வது விந்தையாகவுள்ளது. இரவுநேரம் வந்ததும் தளம் வீழ்ச்சியுறும் என்பது யாவருக்கும் தெரிந்ததே.

அதிஷ்டவசமாக, கடற்படையில் உள்ள ஆகப்பெரிய படகு "எஸ். எல். என். எஸ் 'ரணகஜ" (SLNS RANAGHA) காங்

கேசன் துறைமுகத்தில் தரித்துநின்றது. அது செல்வதற்கு ஆயத்த மாக இருந்தது. ஆனால் பல எச்சரிக்கைகளுக்குப் பின்னும் இராணுவம் ஆச்சரியப்படும்படியாக துருப்புக்களை அனுப்புவ தற்குத் தயாராக இருக்கவில்லை. காலை 8 00 மணிக்கு 300 கொமாண்டோ படையினர் காங்கேசன்துறையிலிருந்து ரணசஜா என்ற கப்பலில் பூநகரிக்கு வடமேற்கிலுள்ள கல்முனையை நோக்கிப் புறப்பட்டனர். அதனுடன் விரைந்து தாக்கும் பல டோறாப் படகுகளும் சென்றன.

ஏழு மணித்தியாலங்கள் சென்றபின் மேலதிக படையினர் பிற்பகல் 3 மணிக்குக் கல்முனையை வந்தடைந்தனர். ஆழ மற்ற கடற்கரையினாலும், விடுதலைப்புலிகளின் பயங்கரத் தாக்கு தலினாலும் டோறாப் படகுகளினால் உதவமுடியாது போய் விட்டது.

கடற்படைத் தளபதி, கடற்படை, இராணுவ மூத்ததளபதி களுடன் ஆலோசனை செய்தபின் நாகதேவன்துறைத் தளத்தைக் கைவிட்டனர். தளத்தில் இருந்த அழிக்கக்கூடிய யாவற்றையும் அழித்தபின் 48 கடற்படையினரும் 12 இராணுவச் சிப்பாய் களும் மாலை 6.40 மணியளவில் நீரேரியைச் சென்றடைந்தனர். பத்து நிமிடங்களுக்குப்பின் ஒரு பெரும் வெடி ஓசைகேட்டது. விடுதலைப் புலிகள் தளத்தை தகர்த்து அழித்தனர்.

60 கடற்படையினரும் 12 இராணுவத்தினரும் பல மைல்கள் தூரம் கடல்நீரேரியூடாக நடந்தனர். பின்னர் ஆனையிறவு முகா மிலுள்ளசிறு வள்ளங்கள் அவர்களை ஏற்றிக்கொண்டு வந்தன.

அன்றிரவு நாகதேவன்துறையில் ஏற்பட்ட வெற்றியின் பூரிப் பினால் பல தடவைகள் பூநகரியைத் தாக்கினார்கள். ஆனால் ஜீ எல். ஐ. யும். ஜீ. ஆரினரும் அவர்களை தாக்கிப் பின்வாங்கச் செய்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப்புலிகளின் மேலதிக போராளிகள் வந்து குவிந்தனர்.

இந்த நேரத்தில் கனத்த ஆட்லறி எறிகணைகள் ஆனையிற விலிருந்து ஏவப்பட்டன. 25 பவுண்டர் (POUNDER) பீரங்கித் துப்பாக்கிகளும் 120 மி. மீ. மோட்டார்களும் 10 கி. மீ. தொலை வில் உள்ள பூநரி நீரேரியினை நோக்கித் தாக்கின. 12 ம் திகதி வெள்ளிக்கிழமை, கடற்படை கொமாண்டோக்களையும், துருப் புக்களையும் கல்முனையில் இறக்க முயன்றனர். ஆனால் மறு படியும் தோற்கடிக்கப்பட்டனர். மேலதிக துருப்புக்களை கடற்

கரையில் இறக்குவதைத் தடுப்பதற்கு விடுதலைப்புலிகள் உறுதி பூண்டு இருந்தனர்.

இராணுவத்தினர் தமது பலாலி ஆனையிறவு அல்லது பூநகரிக்கு அருகாமையில்ருந்த தளங்களிலிருந்து துருப்புக்களை அனுப்பவிரும்பவில்லை. அது தமது பாதுகாப்பினைப் பலம் குன்றச் செய்யும் என்பதனால் கிழக்கிலிருந்து துருப்புக்களை விமான மூலம் கொண்டுவரவேண்டியிருந்தது. இது நேரம் எடுப்பதாக இருந்தது. இதற்கிடையில் வெள்ளியன்று புக்காரா விமானம் ஒன்று சேதப்பட்டிருந்தது. அதன் ஓட்டியும் காயமடைந்திருந்தார். எனினும் அதை அவர் பலாலித் தளத்துக்குக் கொண்டு சென்றார்.

இதற்கிடையில் மற்றொரு 400 படையினரைக் கொண்ட பிரிவு தொலைத் தொடர்புச் சாதனம் மூலம் தொடர்பு கொண்டனர். அவர்கள் பூநகரியில் தென்மேற்குக் கரையில் இருந்தனர். அது அவர்களுக்கும் பிரதான தளத்தை அடைவதிலும் பார்க்க பாதுகாப்பாய் இருந்தது.

இதனால் விமானப்படையின் இரு எம் - 18 உலங்குவானூர்திகள் கொமாண்டோக்களை தரையிறக்க முனைந்தது. எனினும் விடுதலைப்புலிகளின் கடும் எதிர்ப்பினால் இம் முயற்சி தடுக்கப்பட்டது. வெள்ளியன்று மேலதிக படையினர் அங்கு வருவார்களென உணர்ந்த விடுதலைப்புலிகள் பூநகரியைக் கைப்பற்றுவதற்குத் தமது முழு முயற்சியையும் பிரயோகித்தனர். அலை போன்று அடுக்கடுக்காகத் தாக்கினர். ஆனால் சி. எஸ். ஐ. யும் ஜீ. ஆரும் உறுதியாக எதிர்த்து நின்றனர்.

விடுதலைப்புலிகள் வியாழனன்று 250 போராளிகளை இழந்தனர். வெள்ளிக்கிழமைத் தாக்குதலில் 300 பேரை இழந்தனர். அநேகமானோர் "சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவு" (CHARLES ANTONY REGIMENT) போராளிகளும், கடற்புலிகளும் ஆவார்கள். பி. ப. 6 மணியளவில் கடற்கரையில் நின்ற துருப்புக்கள் ஒரு தாக்குதலை மேற்கொண்டனர்.

சனியன்று விடிந்ததும், விடுதலைப் புலிகள் பெரும் இழப்புக்களை விரும்பாமலும், மேலதிக படையுடன் போராட விரும்பாததாலும் குண்டுவீச்சுத் தாக்குதலிலிருந்தும் மெதுவாகப் பின்வாங்கினர்.

300 கொமாண்டோக்கள் சனிக்கிழமை காலை 11.05 மணிக்கு கஜாவிலிருந்து கல்முனைக்கரையில் திடீரென இறங்கினர். இத்

தடவை திருகோணமலையிலிருந்து வந்த படகுகளும், டோறாப் படகுகளும் பலத்த தாக்குதலை மேற்கொண்டு படையினருக்கு உதவினர். அவர்கள் சிறிதளவு எதிர்ப்பைச் சந்தித்தனர் அன்று பிற்பகல் மூன்று மணிக்கு ஆறாவது கெமுனு வாட்ச் (6th GEMU-NUWATCH) படையணி அவர்களுக்குப் பின்னால் நின்றது. தரை இறங்கிய துருப்புக்களின் தொகை 900 ஆக உயர்ந்தது. இப்படைக்குப் பிரிகேடியர் சாந்த கொட்டேகொட தளபதியாக



11.11.93 பூநகரி முகாம் தகர்ப்பின்போது விடுதலைப்புலிகளால் கைப் பற்றப்பட்ட பின்னுதைப்பற்ற பீரங்கி (R. C. L.)

இருந்தார். இந்தப்படை தெற்குநோக்கிச் சென்றது. இடைக்கிடை விடுதலைப்புலிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கும், ஜொனி மிதிவெடிக்கும் இலக்காகவேண்டியிருந்தது.

அன்று பிற்பகல் இரண்டாவது தடவை படைகள் தரையில் இறங்கினர். இவர்கள் கரையிலிருந்த 400 துருப்புக்களுடன் இணைவதற்காக எம் 18 உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்டனர். இந்தத் தரையிறக்கப்பட்ட கேணல் நிமால் ஜெயசூரியாவின் தலைமையின் கீழ் 3 ஆம் சி. எல். ஐ. யால் செய்யப்பட்டது.

இந்தப்படை பூநகரி தளத்தில் பாதுகாப்பில் நிற்பவர்களுடன் இணைவதற்காக கிழக்குநோக்கிச் சென்றது. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. திங்கட்கிழமையன்று கேணல் கொட்டே கொடவின் தலைமையில் உள்ள பிரிவினர் பூநகரிப்படையினருடன் தொடர்பை ஏற்படுத்தினர். இறுதியில் போர் முடிவடைந்தது.

ஆனால் பூநகரியில் என்ன நடந்தது? உண்மையில் இராணுவத்தினர் நீரேரியைக் காப்பதற்கு நாகதேவன்துறையிலுள்ள கடற்படையினரின் உதவியில் தங்கியிருந்தனர். இது விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணக் குடாவிலிருந்து மேலதிக போராளிகளைக் கொண்டுவருவதைத் தடுத்திருக்கும். துருப்புக்கள் இலகுவாக ஆனையிறவிலிருந்து பூநகரிக்குச் செல்வதற்கு உதவியிருக்கும்.

நீரேரி ஆழம் குறைந்ததாக இருந்தமையால், விடுதலைப் புலிகளால் நாகதேவன்துறையை இலகுவாகத் தாக்க முடிந்தது. அவர்கள் அங்குள்ள ஐந்து படகுகளையும் கைப்பற்றி நீரேரியில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். இப்பகுதி டோறா மற்றும் கடற்படைப்படகுகள் செல்வதற்கு ஆழம் குறைந்ததாக இருந்தது. இது ஆனையிறவிலிருந்து மேலதிகமான படைகளை தருவிப்பதற்கு தடையாக இருந்தது. ஆகையால் பூநகரிப்பகுதியை ஒரு உறுதிகொண்டதும், நன்றாகத் திட்டமிடப்பட்டதுமான பெரும் தாக்குதலிலிருந்து பாதுகாக்க முடியாதென்பதனை உறுதிப்படுத்தியுள்ளது. விடுதலைப்புலிகள் 1000 தொடக்கம் 6000 வரையிலான போராளிகளைப் பயன்படுத்தியதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1991- ல் பூநகரிப்பகுதி படையினரால் கைப்பற்றப்பட்டது. காலஞ்சென்ற லெப்ரினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ தலைமையிலான நடவடிக்கையிலேயே இது கைப்பற்றப்பட்டது. இதனால்

யாழ்ப்பாணக்குடா தனிமைப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து இருவருடங்களாக பூநகரி முகாம்மீது பல தாக்குதல்கள் நடாத்தப் பட்டன. விடுதலைப்புலிகள் தொடர்ந்து தாக்கி பலவகையில் வெற்றியும் கண்டுள்ளனர். இராணுவ ஆய்வாளர்களின் கருத்துப் படி விடுதலைப்புலிகள் இம்முகாமை மீண்டும் தாக்கி முன்பு போன்ற அழிவை ஏற்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆபிரகாம் லிங்கன் மனத்திடம்

இது ஆபிரகாம் லிங்கனின் இளமைபற்றிய கதை. அவர் ஒரு வறிய குடும்பத்தில் பிறந்தார், ஆனால் அவரிடமுள்ள சுடும் மனத்திடம் அவரை முன்னேறச்செய்து அவரின் சூழலை மேம்படுத்தச்செய்தது. ஒரு நாள்; எதிர்க் கரையிலுள்ள கிரா மத்தில் ஓர் இளைப்பாறிய நீதிபதி வாழ்ந்துவருகின்றார் என்று அவர் கேள்விப்பட்டார். இந்த நீதிபதியிடம் உபயோகமுள்ள நீதி நூல்கள் இருந்தது. லிங்கன் அவற்றைப் பார்ப்பதற்காக நீதிபதியைச் சந்திக்கவிரும்பினார். அவர் ஒரு படகை ஓட்டிக் கொண்டு அக்கரைக்குச் செல்லத்தொடங்கினார். அந்த நீர்ப் பரப்பு மிகவும் குளிராகவும், பனிக்கட்டிகள் கொண்டதாகவும் இருந்தது. அவரின் படகு நடு ஆற்றை அடையமுன் அது ஒரு பனிப்பாறையுடன் மோதி உடைந்தது. லிங்கன் ஒரு துணி வுடைய மனிதர். அவர் தனது துணிவைக் கைவிடவில்லை. அவர் அந்த பனித்தன்மையான நீரினை நீந்திச்சென்று அந்த இளைப் பாறிய நீதிபதியின் வீட்டினை அடைந்தார்.

இந்த வேளையில் நீதிபதிக்கு வீட்டுவேலைகளைச் செய்ய ஒரு பணியாள் இருக்கவில்லை. ஆகையினால் லிங்கன் அவரது வீட்டு வேலைகளைக் கவனிக்கவேண்டியிருந்தது. அவர் காட்டில் இருந்து விறகு கொண்டுவரவேண்டும். கிணற்றிலிருந்து நீர் கொண்டுவர வேண்டும். தனது சேவைகளுக்கு லிங்கன் என்ன பெற்றார்? அவர்; நீதிபதியின் நூலகத்திலுள்ள நூல்களைப் படிப்பதற்கு அனுமதிகேட்டார். நீதிபதிக்கு இது மகிழ்ச்சியைக் கொடுத்தது அவர் அனுமதி அளித்தார். லிங்கன் இப்படிப்பட்ட மனவலிமையும், உறுதியும் பெற்றிருந்தமையால்தான், அவர் தனது நாடாகிய அமெரிக்காவில் ஒரு தேசியவாதியாகவும், நடு நாயகனாகவும், அந்த நாட்டின் அதி உயர்ந்த பதவியையும் வகிககலானார். அவர் அமெரிக்காவின் ஜனாதிபதியானார். ஒரு வனிடம் மனத்திடமும் உறுதியும் இருப்பின் அவனால் எதையும் அடையமுடியுமென்ற முன்னோரின் உரை எவ்வளவு உண்மை வாய்ந்ததாகும்.

# விடுதலைப்புலிகள் பெரும் வெற்றியை ஈட்டியுள்ளனர்

(த ஐலண்ட் — 14.11.93)

சமீந்திரா பெர்டினான்டோ

*ஈழப்போரின் போது விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்ட முகாம்களுள் பூநகரி மற்றும் நாகதேவன்துறையில் அமைந்திருந்த முகாம்களே மிகவும் பெரியவை ஆகும் என பாதுகாப்பைப் பற்றி ஆய்வு செய்பவர்கள் கூறியுள்ளனர். 120 மில்லி மீற்றர் பீரங்கிகள் ஐந்தையும், படையினரை ஏற்றிச் செல்லும் கவசவாகனம் ஒன்றையும், நூற்றுக்கணக்கான சுழற்துப்பாக்கிகளையும், வெடிமருந்தைக் கொண்டிருந்த பெட்டிகளையும், தொடர்புசாதனங்களையும் மற்றும் வேறு பல இராணுவ உபகரணங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளதை ஆரம்பத்தில் பூநகரியில் சிக்குண்டிருந்த படையினருக்கும் வெளியிலிருந்தவர்களுக்கும் இடையே இருந்த தொடர்புகள் தெரிவிக்கின்றன.*

சென்ற வாரம் விடுதலைப்புலிகள் கடல் மார்க்கமாக வந்து நாகதேவன் துறை கடற்படைத்தளத்தையும், பூநகரி இராணுவ முகாமையும் தாக்கி அந்தப் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். இதன்மூலம் அவர்கள் அரசபடைகளைத் தோற்கடித்து பெரும் வெற்றியை ஈட்டியுள்ளனர். ஏழு உயரதிகாரிகள் உட்பட 118 படை வீரர்களின் சாவுக்குக் காரணமாக விருந்ததும், சென்ற மாதம் மேற்கொள்ளப்பட்டதுமான பெரும் இழப்பை ஏற்படுத்திய யாழ்தேவி நடவடிக்கை காரணமாக ஏற்கனவே இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த டி. பி. விஜயதுங்கா அவர்களின் அரசாங்கத்தையும், பாதுகாப்பு கட்டமைப்பையும் கடலிலும், தரையிலும் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த வெற்றிகரமான தாக்குதல் அதிர்ச்சியுறச்செய்துள்ளது.

இராணுவம் மற்றும் கடற்படை நிலையங்கள் மீதான தாக்குதல் வியாழக்கிழமை அதிகாலை வேளையில் ஆரம்பிக்கப்பட்

டது. ''விடுதலைப்புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள எங்கள் படையினர் தயார் நிலையில் இருக்கவில்லை'' என ஒரு மேலாளர் கூறியுள்ளார்.

இருப்பினும் இந்தமாத இறுதியில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் 39 ஆவது பிறந்தநாள் வரும்போது அதைச் சிறப்பிக்கும் முகமாக பெரிய தாக்குதல் ஒன்று இடம்பெறலாம் எனத் தமிழ் மக்களும் இராசதந்திரிகளும் எதிர்பார்த்தனர்.

பூநகரியையும் சங்குப்பிட்டியையும் இராணுவம் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதியில் கடல் மற்றும் தரைத்தாக்குதல் மூலம் கைப்பற்றியிருந்தது. இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள மண்டைதீவுக்கு தெற்காகவுள்ள கௌதாரிமுனையில் கடல் முகப்புத்தளம் ஒன்றைக் கைப்பற்ற முடிந்த சிறிய எண்ணிக்கையான படையினர், அதன் பின் பூநகரிப்பகுதியை நோக்கிச்சென்றார்கள். ''அந்த நடவடிக்கையின்போது மூன்று இராணுவத்தினரை மாத்திரமே நாம் இழந்தோம்'' எனவும் மேலாளர்கள் கூறியிருந்தனர்.

கடற்படையினர் மற்றும் இராணுவத்தின் மீது பயங்கரமான தாக்குதலை மேற்கொண்டதன்மூலம் அந்தப் பகுதியிலுள்ள நிலைகளிலிருந்து அவர்களை வெளியேற நிர்ப்பந்தித்த விடுதலைப் புலிகள் அதை மீண்டும் கைப்பற்றியுள்ளனர். அதே வேளையில் பூநகரிப்பகுதியில் சிக்கியிருந்த படையினரை மீட்பதற்காக மேலதிக துருப்புக்களை தரையிறக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விடுதலைப்புலிகள் முறியடித்ததாக மேலாளர்கள் கூறியுள்ளனர்.

''பூநகரிக்கு மேற்கே கடல் முகப்புத்தளம் ஒன்றைக் கைப்பற்றுவதற்காக கடல் மற்றும் தரைத்தாக்குதலை மேற்கொள்ள இருமுறை முயன்றோம்'' என மேலாளர்கள் கூறினர். விடுதலைப்புலிகள் தாக்க ஆரம்பித்தபோது அவர்களை அழித்தொழிப்பதற்காகச் சிறிய கடல் முகப்புத்தளம் ஒன்றைக் கைப்பற்றுவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

விடுதலைப்புலிகள் பூநகரிமீது தாக்குதல் நடத்தியபோது லெப்ரினன்ட் கேணல் ரி. ரி. ஆர். டி. சில்வா அவர்களின் தலைமையில் இலங்கை இலகு காலாட்படையின் முதலாவது அணியும், கவச, பீரங்கி மற்றும் ஏனைய உதவி வழங்கும் பிரிவுகளின் கட்டுப்பாட்டின் கீழும் இம் முகாம் இருந்தது.

அங்கே சுமார் 1500 இராணுவத்தினர் இருந்தவேளையில் நாகதேவன் துறையில் சுமார் 200 கடற்படை வீரர்கள் இருந்தார்கள்.

## மிகவும் பெரியது

ஈழப்போரின்போது விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்ட முகாம்களுள் பூநகரி மற்றும் நாகதேவன்துறையில் அமைந்திருந்த முகாம்களே மிகவும் பெரியவை ஆகும் என பாதுகாப்பைப் பற்றி ஆய்வு செய்பவர்கள் கூறியுள்ளனர். 120 மில்லி மீற்றர் பீரங்கிகள் ஐந்தையும், படையினரை ஏற்றிச் செல்லும் கவசவாகனம் ஒன்றையும், நூற்றுக்கணக்கான சுழற்துப்பாக்கிகளையும், வெடிமருந்தைக்கொண்டிருந்த பெட்டிகளையும், தொடர்புசாதனத்தையும் மற்றும் வேறு பல இராணுவ உபகரணங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளதை ஆரம்பத்தில் பூநகரியில் சிக்குண்டிருந்த படையினருக்கும் வெளியிலிருந்தவர்களுக்கும் இடையே இருந்த தொடர்புகள் தெரிவிக்கின்றன. அத்துடன் கடற்படையினரின் கண்காணிப்புப் படகுகள் ஐந்து, ராடர் சாதனம், சினத்தயாரிப்பு கவசவாகனம் ஒன்று ஆகியவற்றை அவர்கள் கைப்பற்றியோ அல்லது அழித்தோ விட்டனர் அத்துடன் தங்களால் எடுத்துச் செல்லமுடியாத அனைத்தையும் அழித்தும் விட்டனர்.

''முன்னர் எப்போதும் இப்படிப்பட்ட பயங்கரமான போர் நடைபெறவில்லை'' என ஆய்வாளர்களால் வர்ணிக்கப்பட்ட இந்தப் போர் ஆரம்பமான சில மணித்தியாலங்களுக்குள் 7.2 மில்லியன் ரூபாய் பெறுமதியானதும், செக்கோசிலேவிபாவில் தயாரித்ததுமான ரி-55 ரக பிரதான யுத்த டாங்கிகள் இரண்டை விடுதலைப்புலிகள் ஒன்றில் கைப்பற்றி விட்டனர் அல்லது அழித்துவிட்டனர் என விசயமறிந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

நாகதேவன்துறை மற்றும் பூநகரி முகாம்கள் ஆகியவை வீழ்ச்சியுற்றதனால் ஏற்பட்ட இழப்புகள், அழிவுகள் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த படையினரின் குடும்பங்களுக்கு வழங்கவேண்டிய நஷ்டஈடு, பூநகரிப் பகுதியை மீண்டும் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஆகியவற்றின் மதிப்பு 100 அல்லது 200 மில்லியன் ரூபாய்களுக்கு மேலாக இருக்குமென மேலாளர்கள் கூறியுள்ளனர்.

யாழ். குடாநாட்டிலுள்ள கட்டைக்காடு இராணுவ முகாமை சென்ற ஆண்டு ஒக்டோபர் முதலாந்திகதி தாக்கியதன் மூலமும்,

இவ்வாண்டு யூலை இறுதியில் ஜனகபுரத்தை தாக்கியதன் மூலமும் 70மில்லியன்ரூபாய் பெறுமதியுள்ள ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் விடுதலைப்புலிகளால் கைப்பற்ற முடிந்தது.

8" கிலோ மீற்றர் தூரம் செல்லக்கூடிய 120 மில்லிமீற்றர் பீரங்கிகள் ஐந்தை விடுதலைப்புலிகள் கைப்பறறியுள்ளமை



11.11.93 பூநகரி முகாம் தகர்ப்பில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப் பட்ட ஆர். பி. ஜி. (R. P. G.) எறிகணை செலுத்திகள்.

யானது வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள பாது காப்புத் தளங்களுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியவையாக இருப்பதாக மேலாளர்கள் கூறியுள்ளனர். பலாலியிலுள்ள விமானத்தளம், வவுனியா மற்றும் மண்டைதீவிலுள்ள தளங்களைக் கூட 120 மில்லி மீற்றர் பீரங்கிகளிலிருந்து எதிர் காலத்தில் காப்பாற்ற முடியாது.

இந்தப் பீரங்கிகளைப் பெரிய இலக்குகள் மீது உபயோகிப் பதன்மூலம் பாரிய அழிவை ஏற்படுத்தலாம். இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட வேகமாகத் தாக்குதலை மேற்கொள்ளும் படகு ஒன்றை சில வாரங்களுக்குமுன் பருத்தித்துறைக்கு அப்பால் உள்ள கடலில் விடுதலைப்புலிகள் தகர்த்து அதிலிருந்த சக்தி வாய்ந்த பீரங்கி ஒன்றையும் அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

## இக்கட்டான நிலை

வியாழனன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது காணாமற்போன கடற்படையினரின் படகுகள் ஐந்தையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றிச் சென்றிருப்பார்களேயானால் பாதுகாப்பு நிலை மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும் என்பதை மேலாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். 30 அடி நீளமான கரையோரக் கண்காணிப்புப் படகு ஒன்றை இரண்டு ஆண்டுகளுக்குமுன் மண்டைதீவுக்கு அப்பால் கைப்பற்றிய கடற்புலிகள், இலங்கைக் கடற்படையினரின் உபயோகத்திற்காகக் கட்டப்பட்ட இந்த ஐந்து படகுகளையும் கைப்பற்றி இருப்பார்களாயின், பாதுகாப்புப் படையினர் மீது, குறிப்பாகக் காரைநகரில் அமைந்துள்ள "எல்லாற" கடற்படைத்தளம் உட்பட ஏனைய கடற்படைத்தளங்கள் மீது தாங்கள் ஏற்படுத்திவரும் தாக்கத்தை அதிகரிப்பார்கள். வடக்கில் கடற்படை நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் அணிகளின் தலைமைப்பீடமாக "எல்லாறா" விளங்குகின்றது.

பூநகரியில் சிக்குண்டிருக்கும் படையினரை காப்பாற்ற தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மேலாளர்கள் கூறினர்.

தாக்குதலிலிருந்து தப்பிய 46 கடற்படையினரும், 12 இராணுவ வீரர்களும் மாத்திரமே புதிதாக அமைக்கப்பட்ட ஆனையிறவு கடற்படைத்தளத்தைச் சென்றடைந்ததாக அவர்கள் கூறினர். "வெள்ளிக்கிழமை இரவு வரை உயிர் தப்பியவர்கள் இவர்கள் மாத்திரமே" என மூத்த இராணுவ மேலாளர்கள் கூறியுள்ளனர்.

250 இராணுவ மேலாளர்களும், படையினரும், பெண்புலிகள் உட்பட 150 விடுதலைப்புலிகளும் போர் ஆரம்பித்த முதல் 10 மணித்தியாலங்களுக்குள் கொல்லப்பட்டனர். விடுதலைப்புலிகள் எஞ்சியுள்ள இராணுவத்தினரையும், கடற்படையினரையும் சரணடையக் கட்டாயப்படுத்தி அவர்களை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லக்கூடும் என மேலாளர்கள் கூறினர்.

அந்தப் பகுதிக்கு மேலதிகமான துருப்புகளை அனுப்ப இராணுவ தலைமைப்பீடம் நடவடிக்கையை மேற்கொண்டால் அன்றி அங்கு எஞ்சியுள்ள இராணுவத்தினராலும், கடற்படையினராலும் விடுதலைப்புலிகள் அங்கு முன்னேறுவதை தொடர்ந்தும் தடுக்கமுடியாதென பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

படையினரைத் தரையிறக்க மேற்கொள்ளப்பட்ட முதல் இரண்டு முயற்சிகளும் தோல்வியுற்றன. கடலிலும் தரையிலுமான தாக்குதலை மேற்கொண்டு பூநகரிக்கு மேற்காக கடல் முகப்புத் தளம் ஒன்றைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சியை விடுதலைப்புலிகள் முறியடித்ததனால் பூநகரியில் சிக்குண்ட படையினர் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள வேண்டியவர்களாகவிருந்தனர்.

நேரம் கடந்து செல்கின்றது என்பதை ஏற்றுக் கொண்ட மேலாளர்கள் "அடுத்த 24 மணிநேரத்திற்குள் மேலதிகமான துருப்புகள் யுத்தம் நடைபெறும் பகுதியைச் சென்றடையாவிடில் மேலும் அதிகமான படையினரை இழக்கவேண்டிவரும்" எனக் கூறினர்.

ஈழத்திற்கான யுத்தத்தின்போது படையினர் இதுகாறும் சந்தித்த யுத்தங்களில் பூநகரியில் அனர்த்தத்தை ஏற்படுத்திய யுத்தமே மிகவும் மோசமானது என மேலாளர்கள் கூறியுள்ளனர். சிக்கியுள்ள படையினரைக் காப்பாற்றுவதற்கு கெமுனு பாதுகாப்புப் பிரிவின் ஆறாவது அணியும், நன்கு பயிற்றப்பட்ட விசேட அதிரடிப்படையினரும் தரைத்தாக்குதலை மேற்கொள்வர் என அவர்கள் கூறினர்.

பூநகரியில் எஞ்சியிருந்த படையினரைக் காப்பாற்ற அதிரடிப் படையினர் முயன்று கொண்டிருந்தவேளையில் படையினரை வீழ்ச்சியுறச் செய்த போராளிகளைக் காப்பாற்ற மேலதிகமான போராளிகளை விடுதலைப்புலிகள் அனுப்பிவைத்தனர். காயப்பட்டவர்களை அப்புறப்படுத்தவும், பூநகரிக்கு விநியோகத்தை

மேற்கொள்ளவும் விடுதலைப்புலிகளுக்கு இரண்டு பாதைகள் உண்டெனெ ஆய்வாளர்கள் கூறினர். கிளாலி கடற்பாதையையும், சங்குப்பிட்டி கடப்பு வழியையும் விடுதலைப்புலிகளின் கட்டு பாட்டிற்குள் கொண்டுவர உதவியதன் மூலம், பூநகரிக்கு மேலதிக போராளிகளை அனுப்ப இந்தத் தாக்குதல் அவர்களுக்கு உதவியது.

என்ன விலை கொடுத்தேனும் இந்தப் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விடுதலைப்புலிகள் முயலுவார்கள் என இராணுவ மேலாளர்கள் நம்புகின்றனர். யாழ் குடா நாட்டிற்கும் பிரதான நிலப்பரப்புக்கும் இடையே விநியோகத்தை மேற்கொள்ள அவர்களால் கைப்பற்றப்பட்ட பூநகரி - சங்குப்பிட்டிப்பாதை மிகவும் உதவக்கூடியதாக இருக்கின்றது.

இந்தப் பகுதியை இராணுவம் .991-ஆம் ஆண்டு ஒ ே_ாபர் மாத இறுதியில் கைப்பற்றும்வரை பூநகரிச் சங்குப்பிட்டிப் பாதையை விடுதலைப்புலிகள் உபயோகித்து வந்தனர்.

சச்சரவு ஏற்படுத்தும் யாழ். ஏரிக்கு அண்மையாகவுள்ள நாகதேவன்துறைக் கடற்படைத் தளத்தினதும், பூநகரி இராணுவத்தளத்தினதும் வீழ்ச்சி, குடாநாட்டிற்குள் சுலபமாகச்சென்று வருவதற்கான வசதியை விடுதலைப்புலிகளுக்கு அளித்துள்ளது.

## போர்த்திறன் வாய்ந்த வெற்றி

விடுதலைப்புலிகள் பாதுகாப்புப் படையினரைத் தோற்கடித்து போர்த்திறன் வாய்ந்த வெற்றியை ஈட்டியுள்ளனரென்று மேலாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். பாதுகாப்புப்படையினர் விடுதலைப் புலிகளை இராணுவரீதியாகத் தோற்கடிப்பதை நோக்கமாகக் கொண்டே கடந்த சில ஆண்டுகளாக யாழ்ப்பாணத்திற்குள் உட்புகும் பாதைகள் அனைத்தையும் கைப்பற்றி வந்தனர்.

இருப்பினும் ஒரு நாளைக்குள் இருபிரதான தளங்கள் வீழ்ச்சியுற்றதும், பூநகரியில் சிக்கியிருந்த படையினரை மீட்டெடுப்பதற்குக்கூட மேலதிகமான துருப்புக்களை அங்கு அனுப்பிவைக்கத்தவறியதும், எக்கணமும் அனர்த்தம் ஏற்படுமென்ற அரசியல் மற்றும் பாதுகாப்பு மேலாளர்களின் அச்சத்தை அதிகரிக்கச் செய்துள்ளதென ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

போர் புதிய கட்டம் ஒன்றை அடைந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகள் ஈட்டிய வெற்றி,

102037

அவர்களின் தாக்குதல் வேகம், மற்றும் மேலதிகத் துருப்பினரை இராணுவத் தலைமைப்பீடம் அனுப்பாதிருந்தமை ஆகியன இக்கட்டானநிலை ஒன்றை உருவாக்கியுள்ளதாக அவர்கள் கூறி யுள்ளனர்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்த எண்ணிய அரசாங்கத்



11.11.93 பூநகரி முகாமை தகர்த்தபின்னர் அங்கிருந்த கனரக ஆயுத மொன்றை போராளி ஒருவர் எடுத்துச் செல்வதை படத்தில் காணலாம்.

தின் இராணுவ மற்றும் அரசியல் தந்திரோபாயம், பூநகரியில் ஏற்பட்ட அழிவுகளைத் தொடர்ந்து பாதிக்கப்படக்கூடியதாக விருக்கின்றது.

அந்தப் பகுதியைக் கைப்பற்றி பாதுகாப்பை உறுதிசெய்த பின் இராணுவ மற்றும் கடற்படைத் தளங்களைப் புதிதாக அமைக்கவேண்டும் என மேலாளர்கள் கூறினர். அங்கு புதிய முகாம்கள் இல்லாதுவிடின் பொது மக்களும், விடுதலைப்புலி களும் குடாநாட்டிற்கும், பிரதான நிலப்பரப்பிற்கும் இடையே யுள்ள விநியோகப் பாதையை உபயோகிப்பதை, பாதுகாப்புப் படையினரால் தடுக்கமுடியாதெனவும் அவர்கள் கூறினர்.

அரசினால் குடியேற்றப்பட்டவர்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட ஜனகபுர இராணுவத்தளம் அழிக்கப்பட்ட ஐந்து மாதங்களுக்குள் பூநகரியிலுள்ள தளங்கள் அழிக்கப்பட்டு உள்ளன.

சுமார் 20 மில்லியன் ரூபாவரை பெறுமதியான ஆயுதங்களும், வெடிமருந்துகளும் வேறுபல இராணுவப் பொருட்களும் அந்தத் தாக்குதலின்போது எடுத்துச்செல்லப்பட்டன. வடபகுதிக்கான இரண்டாவது இராணுவப்பிரிவின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி யிலேயே இவ்விருதாக்குதல்களும் நடைபெற்றுள்ளன.

உயரதிகாரிகள் இதுபற்றி விசாரணை மேற்கொள்வதுடன், பின்னடைவு ஏற்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை யும் மேற்கொள்ளவேண்டும். அரசியல்ரீதியிலும், இராணுவரீதி யிலும் மேற்கொண்ட தவறான கணிப்பீடுகளே ஈழப்போரில் பல இடர்களைச் சந்திப்பதற்குக் காரணமாக இருந்ததென ஆய் வாளர்கள் கூறியுள்ளனர்.

கொக்காவில், மாங்குளம் ஆகியவற்றுடன் தற்பொழுது பூநகரியையும் நாகதேவன்துறையையும் இழந்துவிட்டோம். இராணுவம் தனது படையினரையும் போர்த்தளபாடங்களையும் மேலும் இழக்கமுடியாது.

விடுதலைப்புலிகள் யுத்தத்தில் கைதேர்ந்தவர்கள் என்பதை யும், விரைவாகத் தாக்குதலை மேற்கொண்டு பாரிய பாது காப்புப் பிரச்சினையை உருவாக்க வல்லவர்கள் என்பதையும் அதிகாரத்திலுள்ளவர்கள் முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

முக்கியமான செய்திகள்

அரசாங்கத்திற்கும் அதன் பாதுகாப்புப் படையினருக்கும் எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்ள பூநகரியில் தாங்கள் பெற்ற வெற்றியை விடுதலைப்புலிகள் பயன்படுத்த ஆரம்பித்துள்ளதாக நன்கறிந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கையின் விபரங்களும், அவர்கள் அதில் ஈட்டிய வெற்றியும், ஆசிய மற்றும் மேற்குலக நாடுகளில் முக்கிய செய்தியாக வெளிவந்துள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளையில், பாதுகாப்பு உயர்மட்டத் தலைவர்களுடன் ஜனாதிபதி டி.பி விஜேதுங்க அவர்கள் கலந்துரையாடியுள்ளார். சாக்குப்போக்குக் கூறுவதைத் தான் விரும்பவில்லை எனவும், சிக்குண்டிருக்கும் படையினரைக் காப்பாற்றவும், அப்பகுதியை மீண்டும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதையே தான் விரும்புவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளை இராணுவரீதியாகத் தோற்கடிப்பதை நோக்கமாகக்கொண்டு இராணுவத்தின் கட்டளையிடும் மற்றும் கட்டுப்படுத்தும் கட்டமைப்பில் சில முக்கியமான மாற்றங்களை ஜனாதிபதி விஜேதுங்க அவர்கள் ஏற்படுத்திய இரண்டு மாதங்களுக்குப்பின் பூநகரித்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அரசாங்கம் எதிர்பார்த்த பயனைப் பெற்றுக் கொடுக்கக் கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் தவறியதால் அதைக் கலைத்த சனாதிபதி அவர்கள் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் ஹமில்ரன் வனசிங்கா அவர்களின் தலைமையில் விசேட பாதுகாப்பு இணைப்புக்குழு ஒன்றை உருவாக்கி யுத்தத்தைக் கையாளும் அதிகாரத்தை அதனிடம் ஒப்படைத்திருந்தார் என ஆய்வாளர்கள் கூறினர்.

இராணுவத்தினரை மீட்டெடுக்கும் பணியைத் தடுத்து, எஞ்சியுள்ள படையினரை விடுதலைப்புலிகள் சரணடையச் செய்வார்களே ஆயின் அவர்களைத் தோற்கடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு தந்திரோபாயமும் தோல்வியுறும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

# பூநகரி:- பிரபாவின் போர்த்திறச் சிந்தனை!

(த ஐலண்ட் — 14.11.93)

தாரகி



திரு. பிரபாகரன் அவர்களுடைய மிக ஆழமான சிந்தனையின் வெளிப்பாடு பூநகரியில் மிகத் தெளிவாகப் பிரதிபலித்தது. அவரின் போர்த்திறன் மிக்க சிந்தனையின் நேர்த்தியான வெளிப்பாட்டை நாம் கார்ல்வொன் கலோஸ்விற்ஸ் அவர்களின் வார்த்தைகளில் பின்வருமாறு கூறலாம். ''குறிப்பிட்ட மேலாதிக்கம் பெறுவது என்பது மேலான போரிடும் ஆற்றல் கொண்ட படைகளை குறித்த கேந்திர நிலைக்கு நுட்பமாக ஒன்று சேர்த்தலைக் குறிக்கும். இதற்காக அக்கேந்திர நிலையின் தன்மைபற்றி பூரண அறிவோடிருத்தல், தொடக்கத்திலிருந்தே மிகச் சரியான வழிகாட்டல்களை வழங்கல், எல்லாவற்றிலே முக்கியமானதை அடைவதற்காக தியாகம் செய்தல் என்பனவே அவசியமானவை. அதாவது படைகளின் போரிடும் ஆற்றலை ஒரு நிலையில் ஒருமுகப்படுத்துவதைப் பேணி அக்குறிப்பிட்ட நிலையை வெற்றிகொள்வதேயாகும்''

பிரதான நிலப்பகுதிக்கும் குடாநாட்டிற்குமிடையே பாதுகாப்பான பாதையொன்று திறக்கப்படும் என விடுதலைப் புலிகள் யாழ்குடா மக்களுக்கு முன்னர் வாக்குறுதி அளித்திருந்ததால் பூநகரி மீதான தாக்குதல் சில காலமாகவே எதிர்பார்க்கப்பட்டதொன்றாகவே இருந்தது. மாவீரர் வாரம் அண்மித்தபோது அதனைக் குறிக்கும் முகமாக பூநகரித் தளத்தினைத் தாக்கியழிப்பதற்கு புலிகள் முடிவு செய்ததாகத் தெரிகின்றது.

தமது இயக்கத்தின், முதல் மாவீரனான எஸ். சங்கர் எனப்படும் சத்தியநாதன் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலொன்றில் காயப்பட்டு தமிழ்நாட்டில் உயிர் துறந்த தினமான நவம்பர் 27 ஐ ஒட்டிய வாரத்தையே அவர்கள் மாவீரர் வாரமாக கொண்டாடுகிறார்கள். அதுமட்டுமன்றி நவம்பர் 26 ம் திகதி திரு. பிரபாகரன் அவர்களுடைய பிறந்தினமுமாகும். எனவே அவர்கள்இவ்வாரத்தில் வடபகுதிமக்களைவீதிகள்தோறும் அலங்கரித்து பந்தல்கள் அமைத்து மாவீரர் வாரத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். இவை அனைத்தும் அரசாங்கத்தின் புலனாய்வுத்துறையினருக்குத் தெரிந்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கிழக்கில் இராணுவத்தை தாக்கக்கூடிய பல வாய்ப்புக்களை இழப்பதையும் பொருட்படுத்தாது விடுதலைப் புலிகள் வடக்கில் தமது பலத்தை அதிகரித்து வருவதையும், கிழக்கில் நன்கு திட்டமிட்டு முறைப்படி தமது போராளிகள் தொகையைக் குறைத்து வசதிபடைத்தோரிடம் வரிகள் பெறுவதற்கு போதுமான அளவிற்கே தமது செயற்பாடுகளை அவர்கள் அங்கு கொண்டிருப்பதையும் பல தடவைகளில் நாம் சுட்டிக் காட்டியிருந்தோம்.

ஆனால் இராணுவத்தை கிழக்கின் பின்புற நிலப்பகுதிகளில் எதிர்கொள்ள முடியாத புலிகளின் அடிப்படை பலவீனத்தின் வெளிப்பாடாக இராணுவ உயர் தலைமைப்பீடம் இதனைக் கருதியதாகத் தெரிகின்றது.

ஆனால் கிழக்கில் விடுதலைப்புலிகள் கெரில்லாத் தாக்குதலை இராணுவத்தின் மீது மேற்கொண்டு அவர்களை தொல்லைப்படுத்த, அல்லது சிதறடிக்க முயல்வதற்குப் பதிலாக வடக்கில் தமது இராணுவ வளங்களை ஒன்றுசேர்க்க வேண்டியமைக்கு பல முக்கிய காரணங்கள் இருப்பது இரண்டு வாரங்கட்கு முன் இப்பத்திரிகையில் விரிவாக விவாதிக்கப்பட்டது, விளக்கப்பட்டது. பிரதான முனை ஒன்றில் இராணுவத்தை வெற்றி கொள்ளக்

கூடிய அளவிற்கு தனது இராணுவ வளங்களை வடக்கிலேயே புலி களால் திரட்டமுடியும் என்பது இவற்றுள் முக்கிய காரணமாகும்.

ஆனால் அரசியல், இராசதந்திர வட்டாரங்களோ கிழக் கினை அமைதிப்படுத்தி எதிர்வரும் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடாத்துவது பற்றிய கவனத்தில் தெளிவற்ற முறையில் ஈடுபட்டதையே எம்மால் அவதானிக்க முடிகின்றது.

புலிகளோ 1991ம் அண்டு யூலை, ஆகஸ்ட் மாதங்களில் ஆனையிறவுத் தாக்குதலின்போது தாங்கள் பெற்ற பட்டறிவை அடிப்படையாக வைத்தே பூநகரித் தாக்குதலை மேற்கொண் டனர். இவற்றை ஆராய்ந்தால் பூநகரியில் விளைந்த பெரு நாசத்தை, அதன் தன்மையை புரிந்து கொள்ள முடியும்.

ஆனையிறவு இராணுவ முகாமை கைப்பற்ற முடியாமல் போனதற்கான காரணங்களை நுணுக்கமாகத் திறனாய்வு செய்த புலிகள் கற்றுக்கொண்ட முதல் பாடம் இதுதான். ஒரு குறிப் பிட்ட இலக்கினை தாம் முற்றாக வெற்றி கொள்ளும் வரை எந்தவிதத்திலும் ஒருமுகப்படுத்தப்பட்ட தமது படைகளை பரவ லாக்கவோ அல்லது அதற்காக நிர்ணயம் செய்யப்பட்ட இடத்தை அல்லது நேரத்தை மாற்றவோ கூடாது என்பதே அது. இவ் விதியை ஆனையிறவில் கடைப்பிடிக்கத் தவறியமையாலேயே புலிகள் தோல்வியடைய நேரிட்டது. இதனையே இராணுவ ஆய் வாளர்கள் ஆன குளோஸ்விற்சும், ஜொமினியும் ஒரு வெற்றிகர மான இராணுவ திட்டத்தின் பிரதான அம்சமாக குறிப்பிடு கின்றனர்.

விடுதலைப் புலிகளின் பீரங்கிப்படைப் பிரிவொன்றின் பொறுப்பாளனாக இருந்த கப்டன் மலரவன் 1990-ம் ஆண்டு நவம்பரில் மாங்குளம் முகாம் தாக்கியழிக்கப்பட்ட விதம், அதற் கான தயாரிப்பு ஆகியவைகுறித்து மிகவிரிவாகவும் உணர்வு பூர்வமாகவும் எழுதிய வரலாற்றுக் குறிப்பு வடிவிலமைந்த நூலில் இவ்விடயம் தெளிவாக்கப்பட்டுள்ளது. அப்போதைய வன்னித் தளபதியான பால்ராஜ் மாங்குளமுகாமின் வெளிப்புறப் பதுங்கு குழிகளை வெடிகுண்டுகள்மூலம் தாக்கி கண்ணிவெடி விதைக்கப்பட்ட பகுதியூடாகச் சென்று அவற்றை முனைப்பாகத் தாக்கியழித்தபோது இராணுவ பலத்தை எவ்வாறு சிதறவிடாது ஒருமுனைப்படுத்தி உயர் தாக்குதற்திறனை தக்கவைத்தார் என்பதுபற்றியும் மலரவன் குறிப்பிட்டுள்ளார். ஏதேனும் வேறு அவசர நெருக்கடி காரணமாக இத் தாக்குதற்திறன் சிதறடிக்

கப்பட்டிருந்தால் முழுத்திட்டமுமே தோல்வியைத் தழுவியிருக்கு மென மலரவனே விளக்குகிறார்.

ஆனையிறவின் தென்பகுதி பாதுகாப்பு அரண்களை நிர்மூல மாக்கும் தனது பணியை தளபதி பால்ராஜ் செவ்வனே குறிப்பிட்ட நேரத்திற்குமுன்னரே நிறைவேற்றியிருந்தபோதும் வடக்குப்பகுதி காவலரண்களை அழிக்கப் பணிக்கப்பட்ட குழுவினரால் அதை வேகமாக நிறைவேற்ற முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட இலக்கின்மீது ஒரு முகப்படுத்தி முனைப்பான தாக்குதல் மேற்கொள்ளவேண்டிய நேரம், இடம் தொடர்பான விதிகளை தலைமைப்பீடம் புறக் கணித்தமையாலேயே இவர்கள் தமது பணியைச் செய்யமுடியாது போய்விட்டது. முதலாவது தவறு ஆனையிறவு இராணுவத்தின் மையத்திலிருந்த பீரங்கிகளைத் தம்வசப்படுத்த விரும்பி துருப்புக் களை சரண் அடையச்செய்ய நிர்ப்பந்திக்கும் முகமாக தாக்கு தலின் வேகத்தை ஒரே சீராகத் தொடராமையாகும். இரண் டாவது தவறு வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய இராணு வத்தின் நகர்வைத்தடுக்க தமது போராளிகளில் பெரும்பகுதியை திசை திருப்பிவிட்டமையாகும்.

எனவே இப்போது ஒருவிடயம் மிகத் தெளிவாகவுள்ளது. ஆனையிறவுச் சமரின்மூலம் கற்றுக்கொண்ட புலிகளின் தலை மைப்பீடம், (இதை அவர்கள் வெளியீடுகளே நிரூபிக்கின்றன) இராணுவ வளங்களை ஒருமுகப்படுத்திய தாக்குதல் தொடர் பான இராணுவ போர்த்திறன் விதிகளை பூரணமாகப் புரிந்து கொண்டார்கள் என்பதே அதுவாகும். எனவே அவர்களது முழுமை யான போர்த்திட்டங்கள் இதன் அடிப்படையிலேயே வரையப் படும் என்பதில் சந்தேகமேயில்லை. எனவே கிழக்கில் விடுதலைப் புலிகள் பலவீனமுற்றுவிட்டதாகக் கருதியதின் அடிப்படையில் இரண்டாவது ஈழப்போர்பற்றி எல்லோரும் தங்கள் மனம்போன போக்கில் கருத்துத் தெரிவித்துக்கொண்டிருந்த அதேவேளையில் திரு. பிரபாகரன் அவர்களோ தனது இராணுவ வளங்களை ஒரு முகப்படுத்திய தாக்குதல்மூலம் பூநகரியைத் தாக்கியழிப்பதுபற்றி திட்டமிட்டுக்கொண்டிருந்தார். இம்முறை ஒன்று திரட்டப்படும் தனது படைகளின் கவனத்தை எவ்வித நெருக்கடிநிலையிலும் தந்திரோபாய அடிப்படையிலோ அல்லது புதிதாக எழப்போகும் தேவைகள் நிமித்தமோ திசைதிருப்ப அவர் தயாராக இல்லை. அதற்கேற்பவே மிக நுணுக்கமாகத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

மேலெழுந்தவாரியாக நோக்குகையில் இந்த விதி இலகுவான தாகத் தென்பட்டாலும், நேரடிச் சண்டையின்போது இதைக்

கடைப்பிடிப்பது மிகக் கடினமான காரியம் என்பதை காலம் காலமாக வந்த இராணுவத் தளபதிகள் உணர்ந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் ஆனையிறவுச் சமரிலிருந்து கற்ற இரண்டாவது பாடத்தின் விளைவாக வான் தாக்குதலிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பூநகரித் தாக்குதலை மேற்கொள்ள மாரி காலத்தை தேர்ந்தெடுத்தனர். ஏனென்றால் ஆனையிறவுச் சமரின்போது பரந்த வெளிப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதல் காரணமாக அவர்கட்கு பெரும் உயிரிழப்பு ஏற்பட்டது. எனவே வான்படை தமது முழுப்பலத்தையும் பிரயோகிப்பதை காலநிலை தடுப்பதற்கேற்ற வகையில் இம்முறை அவர்கள் காலத்தை தெரிவுசெய்தார்கள். குறிப்பாக, பகல்வேளைகளில் கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள பகுதிகளைக்கடந்து இராணுவ அரண்களை அழிக்கப்போகும் போராளிப் பிரிவுகட்கு இதன்மூலம் இழப்புக்களைக் குறைக்க அவர்கள் முயன்றனர். மலரவனும் தனது குறிப்பில் இம்மாதிரியான தாக்கியழித்தலே மிக முக்கியமானது என்றும் அதற்கு கடுமையான வான்படைத் தாக்குதல் பெரும் தடையாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதிரியான பருவகாலம் போராளிகளுக்கும் அவர்களது தாக்குதல் முயற்சிகட்கும் சிரமங்களை ஏற்படுத்தியபோதிலும் வான்படையினரின் உதவி மட்டுப்படுத்தப்படுவதால் இராணுவத்தினருக்கே கூடியதீங்கு ஏற்படுகின்றது. மாங்குள முகாமின் மையப்பகுதியை புலிகள் தாக்கமுன் முகாமைக் கைவிட்டு வெளியேற அதன் பொறுப்பதிகாரி எடுத்த முடிவு வான்படை உதவி கிடைக்காமற் போகும் என்கிற உளவியல் ரீதியான அச்சம் காரணமாகும்.

மழைக்காலத்தில் கடல் மூலம் மேலதிக துருப்புக்களைக் கொண்டுவரும் முயற்சியும் பெருத்த தடைகளுக்குள்ளாகின்றது. வெற்றிலைக்கேணியில் இராணுவம் கடல் மூலம் இலகுவாக தரையிறக்க முடிந்தமைக்கு யூலை, ஆகஸ்ட் மாதங்களில் கடல் கொந்தளிப்பாக இல்லாததே முக்கியகாரணமாகும்.

தாம் தாக்கப்போகும் இராணுவ இலக்கின் கரையோர பின்புற நிலப்பகுதியின் புவியியல் பற்றி பூரண ஆய்வு செய்வதை தங்கள் போர்யுத்திக்கான திட்டத்தில் சேர்த்துக்கொண்டதே விடுதலைப்புலிகள் ஆனையிறவுச்சமரில் கற்றுக்கொண்ட மூன்றாவது படிப்பினையாகும். அவர்களது ஜனகபுர (மண்கிண்டி மலை) தாக்குதல் தொடர்பான மீளாய்வில் இவ்வம்சத்தை

மிகத்தெளிவாக காணக்கூடியதாகவிருந்தது. இப்புவியியல் பற்றி முழுக்கவனமும் பிரதானமாக இராணுவம் மேலதிக துருப்புக்களை தரையிறக்க பயன்படுத்தக்கூடிய சகல வழிகளையும் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டதாகும். பூநகரிக்கு மேற்கிலோ கடல்; கிழக்கிலோ யாழ் கடனீரேரி; தென்கிழக்கு நிலப்பகுதியோ வயல் வெளிகளும் இடைவிட்ட பற்றைக்காடுகளும் கொண்ட பகுதி. ஆனால் பூநகரியின் தென்பகுதி திறந்த பரந்த வெளியல்ல. பூந



பூநகரியில் புலிகளால் கைப்பற்றப்பட்ட இறிலங்கா இராணுவத்தினரின் கவச வாகனம் ஒன்று.

கரிச் சந்தியிலிருந்து முழங்காவிலுக்கு ஊடாக மன்னார் செல்லும் வீதி பலமைல் தூரம் காடுகட்கு ஊடாகவே செல்கிறது. பலவிடங்களில் அது கடற்கரையோரம் வரை விரிவடைகின்றது. இலங்கை இராணுவம் ஒபபரேசன் வலம்புரி மூலம் சங்குப்பிட்டி பூநகரிப் பாதையைத் தடைசெய்த போது அது இலகுவாக இருந்ததற்கு காரணம மண்டைதீவை நோக்கி யாழ் கடனீரேரியில் நீண்டிருந்த தலைபோலக க. ணபபட்ட நிலக்கூம்பைப் பயன்படுத்தி தனது பிரதான தாக்குதலை அது மேற்கொண்டதனாலேயாகும். இம் மண்ணித்தலை நிலக்கூம்பு பகுதி இடைக்கிடையே மணல் திட்டுக்கலையும், பனைமரங்களையும், சிறுபததைகளையும் கொண்டுள்ளது.

எனவே நிச்சயமாக பூநகரித் தாக்குதலின் போது புலிகள் இப்பகுதயை தமது முழுககட்டுப்பாட்டில கொண்டுவருவதற்கே முன்னுரிமை கொடுததிருபபார்கள். ஏனென்றால் இந்நிலக்கூம்புப் பகுதி அமைநதுளள கலமுனைக கரையோரத்தைத பாதுகாக்க அனுப்பபபட்ட புலிகளின படைப்பிரிவனர் வியாழன் இரவும், வெள்ளியும் தரையிறஙக இராணுவம் மேற்கொண்ட முயற்சிகளை வெறறிகரமாக முறியடிததிலிருந்து இது தெளிவாகிறது. மண்ணித்தலைப்பகுதிக்கு மேல் அமைந்திருந்த நாகதேவன்துறை கடறபடைததளததை வெற்றி கொணடதன் மூலம் பூநகரித் தாககுதலின முதறகட்டததின பிரதான இலக்கை புலிகள் அடைநதனர். ஏனெனறால பூநகரிததளததிற்கு உயிர்நாடியாக இருககும இந்நிலககூமபுப் பகுதயை முறறுமுழுதாக தமது கட்டுபபாட்டில கொணடுவர இககடறபடைத்தள அழிப்பு மிக அவசியமானதாகும்.

ஆனால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட வெற்றிலைக்கேணியிலிருநது ஆனையிறவைநோககிய சமர் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். கடறகரையிலிருந்து ஆரம்பமான 'பலவேகய' போனற சமர்கட்கு அப்போது விடுதலைப் புலிகள் தயாராக இருக்கவில்லை. ஆனால பூநகரியிலோ புலிகள் முதலிலேயே இராணுவததின பிரதான உயிர்நாடியான இவ்விநியோகப் பாதையில புகுந்து தமமை நிலைபபடுத்திவிட்டனர். ஏனென்றால பூநகரித தளததில சிக்கியிருந்து சாவையோ அல்லது சரண் அடைவதையோ தவிர வேறெதனையும் செய்ய முடியாதிருந்த இரணடு படடாலியன்களைக் கொண்ட இராணுவத்தினருக்கு உதவ முன்வரும் இராணுவம் மண்ணித்தலைப் பகுதிக்கூடாக மிகச் சுலபமாக பூநகரிககு நுழைய முடியும் என்பதை புலிகள் நன்கறிந்திருந்தனர். எனவேதான் பிரதான முகாமை மையமாக

PUBLIC LIBRARY
JAFFNA.

வைத்துத்தாக்கும் அதே சமயத்தில் இவ் ஈர நிலக்கூம்பு மணற் பகுதியில் தடுப்பரண்களை அமைக்க பாரிய முயற்சியை அவர்கள் மேற்கொண்டிருப்பர்.

பூநகரித் தளம் தாக்கப்படுமென்று தெரிந்திருந்தபோதிலும் அதுகுறித்து இராணுவம் பெரிதாக அக்கறைப்படாது அசட்டையாக இருந்தமையானது புலிகள் நாகதேவன்துறையைக் கைப் பற்றும் அதே சமயத்தில் இந்நிலக் கூம்புப்பகுதியை தமது கட்டுப் பாட்டில் கொண்டுவருவர் அல்லது அவர்களால் கொண்டுவர முடியும் என இராணுவம் கனவிலும் நினைத்துப்பார்க்கவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. ஏனென்றால் இத்தகையதொரு தாக்குல் நடாத்தப்படமுன்னரே மிகக் குறுகிய காலத்திற்குள் மண்டைதீவுத் தளத்திலிருந்து உதவி கிட்டும் வரை பூநகரித் தளத்தால் இவ்வுயிர் நாடிப்பகுதியைக் காப்பாற்ற முடியும் என இராணுவம் திட்டவட்டமாக நம்பியிருந்தது.

இதுவே பூநகரி தொடர்பாகவும், யாழ்கடனீரேரி தொடர் பாகவும் இராணுவம் கடைப்பிடித்த போர்த்தந்திரோபாயத் திலிருந்த பாரிய தவறு என நான் கருதுகின்றேன். அவர்களின் கிழக்குத் தொடர்பான அரசியல் ஈடுபாடு, அவர்களை திரு. பிரபாகரன் அவர்கள் அரசியல் ரீதியாக முக்கியம் வாய்ந்த கிழக்கில் தனது அமைப்பின் செல்வாக்கு குறைவதையும் பொருட் படுத்தாது தனது பூரண கவனத்தை எங்கே செலுத்துகின்றார் என்பதை அறியமுடியாது தடுத்துவிட்டதாகவே நான் கருது கிறேன்.

திரு. பிரபாகரன் அவர்களுடைய மிக ஆழமான சிந்தனையின் வெளிப்பாடு பூநகரியில் மிகத் தெளிவாகப் பிரதிபலித்தது. அவ ரின் போர்த்திறன் மிக்க சிந்தனையின் நேர்த்தியான வெளிப் பாட்டை நாம் கார்ல்பொன் கலோஸ்விற்ஸ் அவர்களின் வார்த் தைகளில் பின்வருமாறு கூறலாம் "குறிப்பிட்ட மேலாதிக்கம் பெறுவது என்பது மேலான போரிடும் ஆற்றல் கொண்ட படை களை குறித்த கேந்திர நிலைக்கு நுட்பமாக ஒன்று சேர்த் தலைக்குறிக்கும். இதற்காக அக்கேந்திர நிலையின் தன்மைபற்றி பூரண அறிவோடிருத்தல், தொடக்கத்திலிருந்தே மிகச்சரியான வழிகாட்டல்களை வழங்கல், ஈற்றிலே முக்கியமானதை அடை வதற்காக முக்கியமற்றவைகளை தியாகம் செய்தல் என்பனவே அவசியமானவை. அதாவது படைகளின் போரிடும் ஆற்றலை ஒரு நிலையில் ஒருமுகப்படுத்துவதை பேணி அக்குறிப்பிட்ட நிலையை வெற்றிகொள்ளலேயாகும்."




-இராணுவ முகாம்கள். ×××× - இராணுவ வேலிகள். - - - - பிரதான வீதி. ........ படகு சேவை நடைபெறும் பாதை

# சிங்கள இராணுவச் சிப்பாய்களின் பூநகரி யுத்த அனுபவங்கள்

*பூநகரி இராணுவ முகாமும், நாகதேவன்துறை கடற்படைத்தளமும் விடுதலைப்புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட போது காயமடைந்து உயிர் தப்பிய சிங்கள இராணுவச் சிப்பாய்கள் கூறும் அனுபவங்கள்.*

சிலுமின என்ற
சிங்களப் பத்திரிகையிலிருந்து...
21.11.93

கப்டன் பிறீமால்:-

கடும்மழை, இருள் இவற்றின் மத்தியில் நான்கு பக்கங்களிலிருந்தும் துப்பாக்கிக்குண்டுகள் எம்மை நோக்கி வந்தன. இது வழமையைவிட கடுமையானதாக இருந்தது. ஆயுதத்தை எடுத்துக்கொண்டு தாக்குதல் நடாத்தப்பட்ட திசையை நோக்கி எதிர்த் தாக்குதல் செய்தோம். புலிகள் எங்கிருந்து தாக்குகிறார்கள் என்ற அனுமானமின்றித் தாக்கினோம் கடும் இருளிலும் கட்டுப்பாடின்றித் தாக்கினோம். எங்கள் முன்னாலேயே எமது ஏனைய வீரர்கள் பலர் கண்மூடிக்கொண்டனர் இதனைக் கண்டவுடன் பதில்த்தாக்குதல் நடத்தும் முன்யோசனையோடு செயற்பட்டோம். எங்கள் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு சண்டையிட்டோம். புலிகள் எங்கள் மீது எறிகுண்டுகளை வீசினர். அதுமாத்திரமின்றி ஆர். பி. ஜியும் அடித்தனர் ... எங்களிடம் ரவைகள் குறைந்து போக எல்லோரும் காயப்பட்டோம்.

இரண்டாம் நாள் வந்தது. எங்களுக்கு உணவு இல்லை. எஞ்சியிருந்தது மூன்று மூடை அரிசி மட்டுமே. மூன்று மூடைகளையும் ஆறு நாட்கள் சமாளிக்கவேண்டியிருந்தது. ஆறுநாட்களுக்குமாகப் பங்கிட்டு ஒரு நாளுக்குரிய அரிசியை சமைத்தபோது ஒரு ஆளுக்கு இரண்டு வாய் அளவுக்கு மேல் இருக்கவில்லை. இரவு

ஒரு மணிக்குப் புலிகள் தாக்கினர். நான் சுட்டுக்கொண்டு முன்சென்ற போது எனது முதுகில் குண்டுபட்டது. எனது நண்பர்கள் இருவர் என்னைத்தூக்கிக்கொண்டு சென்று ஒதுக்கமான இடத்தில் ஒழித்திருக்கச் செய்தனர். நான் அந்தநாள்முழுதும் நினைவிழந்து இருந்தேன்.



போராட்டக் களத்திலே வீரச்செயல் புரிந்த போராளி பூங்குன்றன் (மயூரன்) என்பவருக்கு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் பரிசு வழங்கிக் கௌரவிக்கிறார்.

## போர்த்தளபாடப் பொறுப்பதிகாரி கோப்ரல் சமணதாச ஜெயசிங்க:-

நாம் முகாமில் இருந்தபோது புலிகள் தாக்கிக்கொண்டு வந்தனர். யோசிக்கக்கூட நேரம் இருக்கவில்லை. காயமடைந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்த ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி தன்னைக் காப்பாற்றும்படி எனக்கு சைகை காட்டினார். நான் தவழ்ந்து கொண்டு அவரருகே சென்றேன் தலைமயிருடனும் தசைத்துண்டுகளுடனும் கிடந்த தலைக்கவசம் ஒன்றை எடுத்து தண்ணீரில் சழுவி எனது தலையில் போட்டேன். பின் அவரை நிலம் நெடுக இழுத்துக்கொண்டு செல்லும்போது எனக்கும் குண்டுபட்டது, அந்தக் கடற்படை அதிகாரியும் இறந்தார் பின்பு கோப்ரல் இளையபெருமா என்னை பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுசென்றார். நாம் மூன்று நாட்களாக உணவும் நீருமின்றி இருந்தோம். காயப்பட்ட அனைவருமே அப்படித்தான் இருந்தோம்.

## பீ. எம் எப் ரூபசிங்க:-

புலிகள் தாக்கியபோது நாங்கள் கடற்கரை பிரதான தளத்தில் இருந்தோம். நாம் நேருக்கு நேராக போரிட நேர்ந்தது. என்னுடன் 30 கடற்படையினர் இருந்தனர். எங்களுடன் இராணுவ தரைப்படை வீரர்களும் இருந்தனர். எனது முதுகில் குண்டு பட்டது. இதற்குச் சற்று முன்னர் தரைப்படைக் கோப்ரல் ஒருவர் வெடிபட்டு விழுந்தார்.

## கடற்படை வீரர் எம். ரணசிங்கா:-

11-ம் திகதி இரவு ஒரு மணியளவில் புலிகள் தாக்கத் தொடங்கினர். தமிழில் சத்தமிட்டபடி அவர்கள் முகாமிற்குள் நுழைந்தனர். எனது அருகிலிருந்த கோப்ரல் ஒருவருக்கு குண்டு துளைத்தது. மற்றவர்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பது எனக்கு நினைவில் இல்லை சுட்டுக்கொண்டு முன்னேறும்போது எனது முதுகில் இரண்டு குண்டுகள் பட்டன. எனது நண்பர்கள் என்னைத் தூக்கிச்சென்று கடற்கரையில் இருந்த பற்றைக்குள் ஒழித்திருக்கச் செய்தனர். "நாம் எம்மைக் காப்பாற்ற நேர்ந்தால் உன்னைக்காப்பாற்ற வருவோம் அதுவரையும் ஒளிந்திரு" என்று கூறினர். நண்பர்கள் சென்றபின்பு நினைவிழந்து விட்டேன். பின்னர் நினைவு திரும்பியதும் கடல் நீரைக் குடித்தேன். நான் இறந்துவிடுவேன் என எண்ணினேன். பூநகரி முகாமை மீண்டும் பிடித்தபின்னர் எனது நண்பர்கள் என்னைக் காப்பாற்றினர்.

முதலாவது தரைப்படை அணியைச்சேர்ந்த உப்பில்குமார:-

11-ம் திகதி இரவு நாம் அமைதியாக இருந்தோம். நான் மோட்டார் படைப்பிரிவில் கடமையாற்றினேன். அன்று மாத்திரமே தேனீர் குடித்தோம். இரவு ஒரு மணியளவில் வெடிச்சத்தம் கேட்டதால் எமக்குப் பொறுப்பாக இருந்த ஓய்வுபெற்ற மேஜர்



போராட்டக் களத்திலே வீரச்செயல் புரிந்த போராளி சுதாகரன் என்பவருக்கு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் பரிசு வழங்கிக் கௌரவிக்கின்றார்.

வியப்படைந்தார். நாங்கள் மோட்டார் அணிக்குக்கிட்டச் சென்றோம். வெடிச்சத்தங்கள் கிட்டக்கிட்டக் கேட்டன. அப்போது புலிகள் தாக்குவதை அறிந்துகொண்டோம். அப்போது செய்தி ஒன்று வந்தது. புலிகள் "டாங்கி" ஒன்றைப் பிடித்துவிட்டார்கள் எனவும் அவ்விடத்தை நோக்கி மோட்டார் அடிக்கும்படியும் அச்செய்தியில் கூறப்பட்டது. நாம் டாங்கிக்குக் கிட்ட மோட்டார் அடித்தோம். அப்போது எமக்குக் கிட்டவந்த கப்டன் கருணாரத்தின "தேவையின்றி மோட்டார் அடிக்கவேண்டாம்" எனக் கூறினார். நாம் பயப்படவில்லை விடியும்வரை மோட்டார் அடித்தோம். அகனிடையில் புலிகள் முகாமைச்சுற்றித் தாக்கினர். காலை ஆறுமணி ஆனபோது மோட்டார் முடிந்துவிட்டது. மோட்டாரைக் கழற்றி சேற்றுக்குள் போடும்படி மேஜர் சொன்னார். நான் மோட்டாரைக் கழற்றி சேற்றுக்குள்போட்டேன். நான் T-56ரக துப்பாகி ஒன்றை எடுத்துக்கொண்டு முன்னே சென்றபோது இராணுவ உடையணிந்த புலிகள் முன்னுக்கு வந்தனர். நான் அவர்களை நோக்கிச் சுட்டேன் இருவர் விழுந்தனர். அவர்கள் கைக்குண்டை வீசினர். இதனால் எனக்குக் காயம் ஏற்பட்டது. எனது நண்பர்கள் என்னைத் தூக்கிச்சென்று பதுங்கு குழிக்குள் கிடத்தினர். எனது நெற்றிப்புருவங்கள் நடுங்கின. இரண்டு நாட்கள் பதுங்கு குழிக்குள்ளேயே இருந்தேன் மூன்றாம் நாள் பதுங்குகுழிக்குள்ளும் மோட்டார் ஒன்று விழுந்தது இதனால் காலிலும் காயம் ஏற்பட்டது. போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் எமது கேணல் ரஞ்சித்சில்வா எம்மைப் பார்க்கவந்தார். நாம் ஐந்து நாட்களாக உணவின்றி இருந்தோம். இராணுவத்தினர் முகாமை மீண்டும் பிடித்தபின்பு என்னை விமானமூலம் கொழும்பிற்குக் கொண்டுசென்றனர்.

லங்கா தீப.
25.11.93

கடற்படைவீரர் யு. ஜீ நவரணவின் அனுபவங்கள் :-

❀ நான் பூநகரிப் பிரதான முகாமுக்கு ஆறு மைல் அளவு தொலைவில் உள்ள கல்முனைப்பக்கம் சேவையில் இருந்தேன். நூறு மீற்றர் இடைவெளி அளவு தூரத்தில் எமது ஆட்கள் ஆறு ஏழு பேராக இருந்தோம். பத்தாம் திகதி இரவில் இருந்து புலிகள் எம்மைத் தாக்கத் தொடங்கினர்

விடிந்ததும் நிலமை மோசமடைந்தது. இதனால் நாங்கள் ஒன்றுசேர்ந்து (தரைப்படை 10 பேர் கடற்படை 15 பேர்) பிரதான தளத்தின் திசைக்கு வந்தோம். ''மாநிழல்'' என்னும் முகாமிற்கு வந்தபோது அங்கு எமது 150 வீரர்கள் இருந்தனர். அங்கும் புலிகள் தாக்கியதனால் எம்மில் 8 பேர் இறந்தனர். 15 பேர் காயப்பட்டனர்.



போராட்டக் களத்திலே வீரச்செயல் புரிந்த போராளி வீரப்பன் (குயா) என்பவருக்கு தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் பரிசு வழங்கிக் கௌரவிக்கிறார்.

❀ இறந்தவர்களின் உடல்களையும், காயப்பட்டவர்களையும் உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றிக்கொண்டு பூநகரி பிரதான முகாம் நோக்கி நகர்ந்தோம். அப்போது எம்மிடம் இரண்டு மணித்தியாலம் போரிடக்கூடியளவு வெடிமருந்துகள்கூட இல்லை. தரைப்படையில் 80 பேரும், கடற்படையில் 60 பேருமாகச் சென்று கொண்டிருந்தோம்.

❀ நாங்கள் நகர்ந்து கொண்டிருக்கும்போது புலிகள் எம்மைத் தாக்கினர். எம்மில் பலர் வெடிபட்டு விழுந்தனர் நாம் தவழ்ந்துகொண்டு ஒரு தென்னந்தோட்டத்துக்கு வந்தோம். எங்களில் 40 பேரளவில்தான் பிரதான முகாமுக்குப் போனோம் சிலர் ஆனையிறவுப் பகுதிக்குப் போயிருந்தனர் சிலர் வரவேயில்லை.

❀ பிற்பகல் 4 மணியளவில் முகாமுக்குச் சென்றபோது 300 பேரளவில் காயமடைந்திருந்தனர். மேலும் 300 பேர் மாத்திரம் இருந்தனர். பாசறையில் காயமடைந்து இருந்தவர்களை அனுப்ப வழி எதுவும் இருக்கவில்லை.

❀ எங்களில் இறந்துபோன 49 பேர்களின் சடலங்களை ஒரே குழியில் ஒரே நாளில் புதைத்தோம். மறுநாள் 20 பேரை ஒரே குழியில் புதைத்தோம். அடுத்தநாள் ஐந்து ஆறு குழிகளில் போட்டுப் புதைத்தோம்.

❀ நான்கு நாட்களின் பின்பு வந்து உழவு இயந்திரத்தைப் பார்த்தோம் அது புலிகளினால் தீவைக்கப்பட்டிருந்தது. காயப்பட்டிருந்த சிலரை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர். சிலரை சுட்டுவிட்டுச் சென்றனர். என மனவேதனையுடன் கூறினார் அந்த கடற்படை வீரர் நவரட்ண.

# கேணல் கிட்டு அவர்கள் உட்பட பத்து வேங்கைகளின் ஓராண்டு (16.01.1994) நினைவாக




''வீசும் காற்றிலும் விரைந்தெழும் அலையிலும்
தேசம் காத்திட துணிவுடன் வந்தோர்கள்
வேசம் கொண்டவர் வெளிநிலை செய்கையால்
நாசம் கண்டனர் நாயகராகினர்.''

உப்புக்கடலை உரமாக மாற்றிட்டு
உறுதியைக் காட்டிய கேணல் கிட்டு
வெப்பமாக்கிய நீரினை குதறி
வேளையில் துணிந்த லெப். கேணல் குட்டிசிறி
எப்போதும் சாவினை வென்றிட நின்று
எரிந்திட்ட சுவாலையான மேஜர் வேலன்
அப்பாவித் தமிழன் அழிப்பினைக் காக்க
அணைந்திடா தீயான கப்டன் நாயகன்
துப்பாக்கி விடுத்து தூதாக வந்தோருடன்
துணையாக துயின்ற கப்டன் குணசீலன்
தப்பேதும் வந்தாலும் தன்னுயிர் கொடுக்க நின்று
தானும் ஒருவனாகிய கப்டன் றொசான்
சிப்பாய்கள் வந்தால் சிதறடிக்க எண்ணி
சிவந்திட்ட தணலான கப்டன் ஜீவா
இப்பணி காக்க இயன்றவரை துணிந்து
இத்தரை மறந்த லெப்டினன் தூயவன்
குப்பியைக் கழுத்தில் குறியுடன் கட்டி
குருதியைக் கருக்கிய லெப்டினன் அமுதன்
செப்பிய தலைவரின் செந்தமிழ் வார்த்தையால்
செந்தணலாக்கிய லெப்டினன் நல்லவன்
சென்றிட்ட உங்களின் செந்தணல் நினைவுகளை
அன்றிட்ட பணியாய் அகமதிலே நிறைத்து
கொல்கின்ற பகைவனின் குடியிடம் அழித்து
வெல்கின்ற வேங்கைகளை வேளைதனில் கொள்வோம்.

# வரலாறாகி வாழுகின்றான்

தாயக மண்ணின் விடுதலைக்காய்
 தளராமற்பல பணிகள் செய்தான்!
காவலிருந்தான்; கண்விழித்தான்
 களங்களில் மோதினான் கருவிகொண்டு!
பாசம்வைத்த தமிழ்மண்ணை
 பறித்திடவந்தோர் கதைமுடித்தான்!
தேசம் பலவும் திரிந்தலைந்து
 திசைகள்தோறும் முழக்கமிட்டான்!
வாசம்வீசும் தென்றல் அவன் - பகை
 வந்தால் எதிரே புயலாவான்!
காதல்கொண்ட தமிழ்நிலத்தை
 காணும் ஆசையில் வருகையிலே
பேய்கள் செய்த சதிவலையில்
 பின்னாமல் பெருந்தீயானான்!
வாழும் தமிழர்தம் மனங்களிலே -
 வரலாறாகி வாழுகின்றான்!

# இந்தியா புரிந்த கொலையும் ஐரோப்பாவின் மௌனமும்

*தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினரும், மூத்த தளபதியுமாகிய கேணல் கிட்டு அவர்கள் உட்பட 10 வேங்கைகள் இந்திய வல்லாதிக்கத்தின் சதியினால் வங்கக் கடலிலே வீரகாவியமாகி ஓராண்டு (16.01.94) நிறைவடைகிறது. கடந்த ஆண்டு (20.01 93) பத்து வேங்கைகளின் நடுகல் திரை நீக்கம் செய்யும் வைபவத்தின் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஆற்றிய உரையை இங்கு தருகிறோம்.*

தளபதி கிட்டு எதற்காக தமிழீழம் வந்தார்?

அவர் வரும்பொழுது ஒரு சமாதானத்திட்டத்தைக் கொண்டு வந்தாரா? அந்த சமாதானத்திட்டம் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது? இதனுடைய பின்னணி என்ன? ஐரோப்பிய நாடுகள் இதில் ஈடுபட்டுள்ளனவா? எந்தளவிற்கு இந்த சமாதானத் திட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் பங்குவகித்தன? இந்தியாவிற்கும் ஏற்கனவே இது பற்றித் தெரியுமா? இந்தியாவின் பங்கு என்ன? என்ற சில முக்கிய விடயங்கள் பற்றி இதுவரைக்கும் உங்களுக்குத் தெரியாத விடயங்கள் பற்றி இங்கு எடுத்து விளக்க விரும்புகிறேன்.

உங்களுக்குத் தெரியும் நாங்கள் தளபதி கிட்டுவை மேற்குலகத்திற்கு அனுப்பியதன்காரணம், மேற்குலக நாடுகளுடன் தொடர்பு கொண்டு அவற்றின் ஆதரவைபபெற்று எமது பிரச்சினைக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெறவேண்டும். அதற்காக எமது மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் மேற்கு ஐரோப்பாவில் செயற்படவேண்டும். அவர் பல தொடர்புகளை எடுக்க வேண்டும் என்ற நோக்குடன்தான் தலைவர் பிரபாகரன் அவர்கள் தளபதி கிட்டு அவர்களை மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தார்.

அவரை இங்கிலாந்திற்கு அனுப்பியதில் எங்களுக்கும் முக்கிய ஒரு பங்குண்டு. நாங்கள் கொழும்பில் பேச்சுவார்த்தையை

நடாத்திக் கொண்டிருந்தபொழுதுதான் கிட்டுவை நாங்கள் தங்கி யிருந்த விடுதிக்குக் கொண்டுவந்து, அங்கு அவரை தங்கவைத்து, பிரித்தானிய தூதர் கிட்டுவை நேரில் வந்து சந்தித்து அவர் அளித்த உறுதி மொழிகளின் பேரில்தான் நாம் கிட்டுவை இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தோம். கிட்டு யார்? அவரின் அந்தஸ்து என்ன? அவர் ஒரு விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர். அவர் வெளிநாடுகளில் என்ன பங்கு வகிப்பதற்குச் செல்கின்றார்? என்பது எல்லாம் இங்கிலாந்திற் கும் மற்றும் சில நாடுகளுக்கும் தெரியும். ஏனென்றால் கொழும்பில் இருந்து கிட்டு லண்டனுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னதாக பல தூதர்களை கொழும்பு ஹோட்டலில் வைத்து சந்தித்து தமது நோக்கத்தை விளங்கப்படுத்தினார். பிரித்தானியத் தூதர் தானே நேரடியாக கிட்டுவிடம் கொண்டு வந்து கடவுச் சீட்டைக் கொடுத்து அவரை விமானத்தில் பத்திரமாக அங்கு செல்வதற்கான வசதிகளை செய்துகொடுத்தார். ஏன் இதை நான் சொல்கிறேன் என்றால் இந்த சமாதானத் திட்டத்தில் பிரிட்டனுக்கு முக்கிய பங்குண்டு.

உங்களுக்குத் தெரியும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஐம் பது நாடுகளில் கிளை அமைப்புகள் இருக்கின்றன. லண்டன் சென்ற கிட்டு இந்த கிளை அமைப்புக்களை எல்லாம் ஒருங் கமைத்து ஒன்றுபட செயல்பட்டு வைத்து லண்டனில் எங்களது சர்வதேச தலைமையகத்தை அமைத்தார். நீண்டகாலமாக செய விழந்து போய்க்கிடந்த பல அமைப்புக்களை செயற்படச் செய் தார். வெளிநாடுகளில் அவர் நடாத்திய பிரசாரம், அவர் சந் தித்த இராஜதந்திரிகள், புரட்சித் தலைவர்கள் எமது போராட் டத்தை சர்வதேச அரங்கில் முன்னெடுத்துச்செல்ல அவர் செய்த காரியங்கள் ஏராளம். அவர் மேற்கு நாடுகளில் இருந்து தமிழீழ மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்ற விடயத்திலேயோ சமாதனத்தை உருவாக்கவேண்டும் என்ற விடயத்திலேயோ சில உருப்படியான காரியங்களைச் செய்து கொண்டிருந்தார். உங்களுக்குத் தெரியும், ஒரு சில மாதங்களுக்கு முன்னர் "குவேக்கஸ்" சமாதானக் குழுவொன்று மேற்குலகத்தில் இருந்து இங்கு வந்தது. இவர்கள் இங்குவரும்பொழுது கிட்டு வையும், திலகரையும் சந்தித்துவிட்டு கொழும்பில் உள்ள முக் கிய அமைச்சர்களையும் சந்தித்து விட்டுத்தான் இங்குவந்தார்கள். இங்கு வந்து இது சம்பந்தமாக சில யோசனைகளை எங்களிடம் தெரிவித்தார்கள்.

ஆனால் எந்த அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவது? எங்கு பேச்சுக்களை நடத்துவது? யாருடன் பேச்சுக்களை நடத்துவது? என்ற பிரச்சினை அந்தநேரத்திலிருந்தது. நாங்கள் இங்கேயிருந்து முன்புபோல கொழும்பிற்குப்போய் பேச்சுக்களை நடத்த முடியாது. எப்படிப் போவது? சிங்கள இராணுவத்தை நம்பி கொழும்பிற்குப் போய் பேச்சுக்களை நடாத்தமுடியாது. எனவே வெளிநாட்டுத் தலைநகரம் ஒன்றில்வைத்து பேச்சுக்களை நடாத்துவதற்குத் திட்டம் தீட்டப்பட்டது. இதில் கிட்டுவும் திலகரும் பங்கெடுக்கவேண்டியது அவசியமாயிருந்தது.

இங்கிருந்து தலைவர் பிரபாகரனின் பிரதிநிதிகளாக ஒரு சிலர் வெளிநாட்டிற்குப் போகலாம், வெளிநாட்டு தலைநகர



தளபதி கேணல் கிட்டு அவர்கள்

மொன்றில் வைத்து இந்தப் பேச்சுக்களை நடத்தலாமென்று "குவேக்கஸ்" சமாதானக்குழு எம்மிடம் தெரிவித்தது. ஆனால் அப்பொழுது ஒரு பிரச்சினை எழுந்தது. எதைப்பற்றிப் பேசுவது? வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைத்து தமிழர் தாயகத்தை ஏற்றுக்கொள்ளாத சிங்கள அரசிடம் எந்த அடிப்படையில் பேசுவது? சமஷ்டியைப்பற்றியா பேசுவது? இதில், சமஷ்டி என்று சொன்னது வடக்கு கிழக்கு ஒன்றாக இணைந்து தமிழர் தாயகம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையில் ஒரு சமஷ்டி யோசனை வந்தால் அதைப்பற்றிப் பேசலாம். ஆனால் சிங்களவர்கள் எதையுமே உருப்படியாக தருவதற்குத் தயாராக இல்லை. அப்பொழுது நாங்கள் ஒரு யோசனையை இந்த குவேக்கஸ் சமாதானக் குழுவிடம் கூறினோம்.

ஒரு இடைக்கால தீர்வொன்றை ஏற்படுத்துவோம். முதலில் யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவருவோம். தமிழீழத்தில் ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவோம். எமது மக்கள் இந்த கடந்த மூன்று ஆண்டு போரினால் மிகவும் நொந்துபோயிருக்கிறார்கள். தாங்கொணா பளுக்களைச் சுமந்து நிற்கின்றார்கள். இந்த மக்களுக்கு ஒரு நிம்மதிவேண்டும். அந்த மக்களுக்கு ஒரு சமாதான சூழ்நிலை வேண்டும். ஆகவே முதலில் இந்த சமஷ்டி இணைப்பு அவற்றைப்பற்றி பேசுவதை விட்டுவிட்டு முதலில் ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவோம். மக்கள் மத்தியில் ஒரு நல்லெண்ண நம்பிக்கையை பிறப்பிப்பதற்கு சிறிலங்கா அரசு ஏதாவது உருப்படியாகச் செய்யவேண்டும். இதற்கும் ஒரு திட்டம் கொடுத்தோம். முதலில் இரண்டு தரப்பும் யுத்தநிறுத்தப் பிரகடனம் செய்வோம். சிங்கள அரச படைகள் சில இடங்களில் இருந்து தனது படைகளை வாபஸ் பெறவேண்டும். குறிப்பாக எங்களது குடியிருப்புக்களை ஆக்கிரமித்திருக்கும் பகுதிகள், எங்களது போக்குவரத்துப் பாதையை தடுத்துநிற்கும் பகுதிகள், எமது குடாநாட்டை முற்றுகையிடும் நோக்கில் இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகள் ஆகியவற்றிலிருந்து சிங்களப்படை வாபஸ் பெறவேண்டும். அதற்குப்பின் ஒரு இடைக்கால நிர்வாக ஒழுங்கிற்கு ஏற்பாடு செய்வோம். இந்த இடைக்கால நிர்வாக ஒழுங்கு புலிகளின் நிர்வாகத்தின்கீழ் இருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட காலம்வரை ஒரு ஆண்டோ இரண்டாண்டோ இந்த இடைக்கால நிர்வாக ஒழுங்கு இருக்கவேண்டும். இந்தக் காலகட்டத்தில் தமிழீழ மக்களுக்கு நிவாரணம் புனருத்தாரணம், மற்றைய சகல வசதிகளையும் சிறிலங்கா அரசு செய்துகொடுத்து தமிழீழ மக்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும். நம்பிக்கை

யைப் பெறவேண்டும். துன்பதுயரத்திலிருந்து மக்களுக்கு ஒரு வழியைக் காட்டவேண்டுமென்று கூறினோம்.

இப்படியான ஒரு சமாதான ஒழுங்கைக் கொண்டு வாருங்கள் நாங்கள் ஒத்துழைக்கிறோம். போர் நிறுத்தத்திற்கு நாங்கள் தயார். இந்தத் திட்டத்தின் விபரம் பற்றி வெளிநாட்டு தலை நகரமொன்றில் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். இவ்



இந்திய வல்லாதிக்கத்தின் சதியால் கடலிலே வீரகாவியமான தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது மாவீரர்களுக்கு (20.01.93) திருவிலில் மரி யாதை செலுத்தும் நிகழ்வில் திரண்டிருந்த மக்களின் ஒரு பகுதி.

வாறாக எமது யோசனையைகுவேக்கஸ் சமாதானக் குழுவிற்குச் சொன்னோம். இந்த யோசனை பற்றி குவேக்கஸ் குழு சிங்கள அரசுடன் பேசியது. பின்னர் சில ஐரோப்பிய நாடுகளுடன் இத் திட்டம் பற்றி பேசியது. அவர்கள் சொன்னார்கள் புலிகளின் நிலைப்பாடு சரி. இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க முடியாது. உடனடியாக அரசியல் தீர்வு வராது. ஆகவே இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதையடுத்து சிபார்சு செய்யப்பட்ட ஒரு வடிவத்தில் ஒரு இடைக்கால ஒழுங்கைச் செய்யலாம் என குவேக்கஸ் குழு ஐரோப்பிய நாடுகளுடன் பேசியது. இதற்குப் பின் இந்த சமாதானக் குழு இங்கிலாந்து சென்று கிட்டு, திலகருடன் தொடர்புகொண்டது. இந்த யோசனைகள் குறித்துப் பேசவேண்டும். எப்படிப் பேசுவது? எங்கு பேசுவது? இதுபற்றி விபரமான விடயங்கள் கிட்டுவிற்கும், திலகருக்கும் தெரியும்.

இதனிடையில் ஒரு சிறிய பிரச்சினை. இங்கிருந்து நாங்கள் யாராவது இங்கிலாந்திற்குப் போவதாக இருந்தால் கப்பல் மூலம் செல்ல ஒரு மாதத்திற்கும் மேலாகலாம் விமானம் மூலம் செல்வதானால் கொழும்பிற்குச் செல்லவேண்டும், அது இந்தச் சூழ்நிலையில் நடைமுறை சாத்தியமற்ற ஒரு விடயம். இத்தருணத்தில் குவேக்கஸ் சமாதானக்குழு எமக்கு அறிவித்திருந்தது இங்கிருந்து வருபவர்கள் இந்தியாவிற்கு வந்தால் இந்தியாவிலிருந்து லண்டனுக்கு வரலாம் என்று ஆனால் நாங்கள் இங்கிருந்து வெளிக்கிடுவதற்குமுன்பாக இந்த சமாதானத்திட்டத்தின் விபரங்கள்; இலங்கை அரசின் நிலைப்பாடு; மேற்கத்தேய ஐரோப்பிய நாடுகள் கொண்டுள்ள நிலைப்பாடு; இங்கிலாந்தில் இப் பேச்சுக்கள் நடத்துவதற்கான சூழல் எப்படி இருக்கிறது என்பது பற்றி அங்கிருந்து எங்களுக்கு சில விபரங்கள் தேவையாக இருந்தது. தலைவர் பிரபாகரனுக்குச் சைகை வார்த்தைகள் மூலம் இப்படியான விடயங்களைக் கொடுக்க வாய்ப்பில்லை. ஆகவே தான் கிட்டுவரும்போது இந்த விபரங்களைக் கொண்டு வந்தார். இது இந்தியாவிற்கு நன்கு தெரியும். ஏனென்றால் இந்த சமாதானக் குழு ஒரு வாரம் வரை இந்தியாவில் தங்கியிருந்தது. புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைப் பார்த்துப் பேசியிருந்தது பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளோடும் பேசியிருந்தது, புலிகளின் போக்குவரத்திற்கு இந்திய உத்தரவாதம் அளிக்குமா என அவர்கள் கேட்டிருந்தனர். அப்போது புலிகளின் போக்குவரத்திற்குஉத்தரவாதம் அளிப்பதாக இந்தியா தெரிவித்திருந்தது. இதற்கான ஆவணங்கள் எம்மிடம் உண்டு. அதாவது எம்மை வெளிநாட்டிற்கு கொண்டு செல்வதற்கும் இந்தியாவின்

உதவியுடன் கொண்டு செல்வதற்கும்- போக்குவரத்திற்கு வசதி செய்வதற்கும் இந்தியா இணங்கியதாக இவர்கள் சொன்னார்கள். ஆனால் என்ன நடந்தது? ஏன் இப்படி இந்தியா ஒரு வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு கிட்டுவின் கப்பலை இடைமறித்தது? இந்தியாவிற்குத் தெரியும் தளபதி கிட்டு ஏன் வருகிறார்? எதற்காக வருகிறார்? இந்த சமாதானத் திட்டம் எத்தகையது? என்பது பற்றியெல்லாம் தெரியும். இதன், உண்மை நிலை என்னவென்றால் ஐரோப்பிய தலையீட்டை இந்தியா விரும்பவில்லை. அதனால் இந்தியா இந்த விடயம் மிக இரகசியமாகவே இருக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தது. மிகவும் இரகசியமாக இந்தப்பேச்சு நடக்கவேண்டும். இங்கிருந்து தான் போக்குவரத்துக்கள் மிக இரகசியமாக இருக்க வேண்டும் என்று இந்தியா கூறியது. ஆனால் நாம் அதை விரும்பவில்லை. இந்தியாவை நம்பி இரகசியப்பேச்சு என்று சொல்லி இங்கிருந்து டில்லிக்கு எப்படிப்போவது? இவர்கள் எம்மைக்கைது செய்து வைத்திருக்கலாம்? கொலை செய்யலாம்? கேட்பதற்கு யாரு



1986 - ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டிருந்த சிங்கள இராணுவத்தினர் இருவரைப் பற்றி பேச்சு நடத்துவதற்கு கொழும்பில் இருந்து வந்த கேணல் ஆனந்த வீரசேகரா, யாழ் கோட்டை முகாம் பொறுப்பதிகாரி கப்டன் கொத்தலாவலையுடன் தளபதி கேணல் கிட்டு அவர்கள்.

மில்லை. ஆகவேதான் தலைவர் பிரபாகரன் என்ன பேச்சு என்று சொன்னாலும் அது பகிரங்கமானதாக இருக்கவேண்டும். அதிகார பூர்வமானதாக இருக்கவேண்டும், ஒரு வெளிநாட்டுத் தலைநகரத்தில் நடக்கவேண்டும். அந்த வெளிநாடு அதற்கு மத்தியஸ்துவம் வகிக்கவேண்டும் என்பன போன்ற சில கோரிக்கைகளை அவர் விடுத்திருந்தார்,

சிறிலங்காவும் இந்தப் பேச்சுக்களை இரகசியமாக நடத்த விரும்பியது. ஏனென்றால், இராணுவத்தினுள் பிரச்சினை வருமாம். மூன்று வருடமாக இராணுவம் புலிகளை எதிர்த்துப் போராடியது. நாலாயிரம் இராணுவத்தினர் இறந்துள்ளனர். 10,000 இராணுவத்தினர் காயமடைந்து ஊனமடைந்துள்ளனர். இன்னும் ஒரு பத்தாயிரம்பேர் இராணுவத்தை விட்டு ஓடியுள்ளனர். இப்படியாக இராணுவ அமைப்பே நிலைகுலைந்துபோயுள்ளது. ஆகவே மூன்று வருடமாக புலிகளை எதிர்த்துப் போராடிவிட்டு, புலிகளை எதிரிகளாகக் காட்டிவிட்டு, பின்பு விடுதலைப்புலிகளுடன் கைகோர்த்து சமாதானம் நடாத்துவது என்றால் இராணுவத்தைப் பகைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே இராணுவத்திற்குத் தெரியாமல் உலகிற்குத் தெரியாமல் இரகசியமாகப் பேசுவோம் என்று சிறிலங்கா சொல்லியது. இந்தியாவும் இரகசியம்; பிரிட்டனும் இரகசியம்; இப்படியே எல்லோரும் இரகசியமாகப் பேசுவோம் என்பதால் நாங்கள் சந்தேகப்பட்டோம். பேசமுடியாது என்றோம். கிட்டு இங்குவந்து சகல விபரத்தையும் எமக்குத் தந்தால் இதுபற்றி நாங்கள் கூடிய ஆழமாக இந்த விடயத்தைப் பார்த்திருக்கலாம். இப்படியான சில தகவல்களுடன் தான் கிட்டு இங்கு வந்துகொண்டிருந்தார். அவர் எங்கிருந்து வந்தார்? எந்த விமான தளத்தில் இறங்கினார்? எந்தத் தென்னாசிய நாட்டின் தலைநகரில் இறங்கினார்? எங்கு படகெடுத்தார்? எப்படி வந்தார் என்பதெல்லாம் இந்திய புலனாய்வுத்துறைக்கு நன்கு தெரியும். ஆனாலும் கப்பலைத் தடுத்து நிறுத்தினார்கள் என்றால் இந்த சமாதான முயற்சியில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபடுவதை இந்தியா விரும்பவில்லை என்பதைத் தவிர வேறென்ன அர்த்தம். இதைக் குழப்பவேண்டுமென்பதைத் தவிர வேறென்ன நோக்கம் இருக்கும்?

தமிழீழ தேசியப் போராட்டம் இந்தியாவினது ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஒரு பெரிய அச்சுறுத்தலாக இந்தியா கருதுகிறது. பாகிஸ்தானின் அணுகுண்டை விட பிரபாகரனின் மனஉறுதிக்கு இந்தியா அஞ்சுகிறது. இங்கே ஒரு புரட்சிகர ஆயுதப் போராட்டம் வெடித்து தமிழீழம் உருவானால்

102037

அங்குள்ள தேசிய இனங்கள் சுதந்திரப் போராட்டத்தை தீவிரப் படுத்தி நாடு உடையுமோ என்று இந்தியா பயம் கொள்கின் றது. இந்தியாவில் நடைபெறும் தேசிய விடுதலைப் போராட் டங்களைவிட தமிழீழத்தில் நடைபெறும் விடுதலைப் போராட் டத்திற்கு இந்தியா அஞ்சுகின்றது. ஏனெனில் இங்கு இருக்கின்ற சில பண்புகள் – எமது மக்களிடம் இருக்கும் விடுதலை உணர்வு – விடுதலை எழுச்சி – போராளிகள் மத்தியிலுள்ள உறுதிப்பாடு தியாக உணர்வு – அர்ப்பணிப்பு இந்திய உபகண்டத்தில் வேறெங் குமே இல்லை. அப்படியானதொரு போராட்ட சக்தி - அப்படி யான போராட்டம் வெற்றிகண்டு அது இந்திய உபகண்டத்தில் பரவினால் இந்திய சாம்ராஜ்யம் இடிந்துவிடும் என்று இந்தியா அஞ்சுகின்றது. ஆகவே இந்தப் போராட்டத்தை வெற்றிகாண விடக்கூடாது என்றும், விடுதலைப்புலிகளை நசுக்கவேண்டும் என் றும் இந்தியா விரும்புகின்றது. விடுதலைப்புலிகளின் தலைமையை ஒழித்துக்கட்ட வேண்டும். ஒரு இயக்கத்தை அழிக்க வேண்டு மென்றால் உறுதி மிக்க தலைமைப்பீடத்தை உடைத்து எறிய வேண்டும். அதுதான் பிரபாகரனை எப்படியாவது அழிக்க வேண்டும். பிரபாகரனின் முக்கிய தளபதிகளை அழிக்கவேண்டும் என்று இந்தியா கங்கணம்கட்டி நிற்கின்றது. மேலும் தனது ஆதிக்க வல்லாதிக்க வியூகத்திற்கு அப்பால் ஐரோப்பிய நாடு களின் தலையீடு இப்பிராந்தியத்தினுள் ஏற்பட்டுவிடக்கூடாது. ஐரோப்பிய நாடுகள் இங்கு தலையிட்டால் தனது செல்வாக்கும், ஆதிக்கமும் குறைந்து விடும் எனவும் இந்தியா அஞ்சுகிறது. எனவே இதைத் தடுக்கவேண்டும். இடை நிறுத்தவேண்டும். இந் நிலையில்தான் கிட்டு ஏன் வருகின்றார்? எப்படி வருகின்றார்? எதற்காக வருகின்றார்? என்பதெல்லாம் ஏற்கனவே தெரிந்தும் இந்தியக்கரையிலிருந்து நாநூற்றுஐம்பது மைல்களுக்கு அப்பால் நிக்கோபார் தீவுகளுக்கு அப்பால் வைத்து எங்களது கப்பலை இந்தியா இடைமறித்தது. இடைமறிக்கப்பட்டதும் நாம் இந்த விடயத்தை உடனடியாக சர்வதேச உலகுக்கும் அறிவித்தோம். இரண்டுநாள் கப்பல் பயணம் நடந்தது. இந்த இரண்டு நாளும் அந்தக் கப்பலில் நடைபெற்ற விடயங்கள் எங்களது சர்வதேச செயலகம் மூலம் உலகநாடுகளுக்கு அறிவிக்கப்பட்டது. உலக மனித உரிமை ஸ்தாபனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. உடனடி யாக இந்தியாவின் இந்தத் தலையீட்டை நிறுத்துங்கள், தளபதி கிட்டுவைக் காப்பாற்றுங்கள் என்று எத்தனையோ நாடுகளிடம் மன்றாட்டமாகக் கேட்டோம்.

ஆனால் இந்தியாவிற்கு அழுத்தம் போடுவதன்மூலம் இந்தி யாவை ராஜதந்திரரீதியாகப் பகைத்துக்கொள்ள பிரிட்டன்

போன்ற நாடுகள் விரும்பவில்லை. பெரிய அளவில் பிரிட்டன் போன்ற நாடுகள் தலையிட்டு இந்தியாமீது அழுத்தம் போட்டிருக்குமானால் தளபதி கிட்டு காப்பாற்றப் பட்டிருப்பார். ஆனால் இந்த மேற்கு நாடுகள் அப்படிப்பட்ட முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை.

இந்தியக் கடற்படையின் இந்த நடவடிக்கை குறித்து இந்திய அரசு மட்டத்தில் - வெளியுறவு அமைச்சு மட்டத்தில் - பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் - பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. என்ன செய்வது என்பது தெரியாமல் இந்தியா இரண்டு நாளாக மௌனமாக இருந்தது. இதற்குள் இந்தியக் கடற்படை எமது தளபதிகளை கப்பலைவிட்டிறங்குமாறு ஆயுத முனையில் அச்சுறுத்தியது. வேறு வழியில்லை. இரண்டு பெரிய நாசகாரக் கப்பல்களை அருகில் வைத்துக்கொண்டு பீரங்கிகளை நீட்டிக்கொண்டு சரணடையுங்கள் என்று கேட்டது. இந்திய அரசிடம் சரணடைந்தால் என்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். ஏற்கனவே எமது போராளிகள் பலர் கண் இல்லாதவர்கள் முழு உடலும் இயங்காதவர்கள், வலது குறைந்த அங்கவீனர்கள், இவர்களை எல்லாம் சிறைபிற் போட்டுச் சித்திர வதை புரியும் இந்திய அரசு கிட்டுவைக் கைப்பற்றியிருந்தால்- அவர் அசிங்கப்படுத்தப்பட்டிருப்பார். கொடூரமான சித்திர வதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பார். ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சம்பந்தப் படுத்தப்பட்டிருப்பார். வேறு பல வழிகளில் அவர் மிக மிருகத்தனமாக நடத்தப்பட்டிருப்பார். இந்நிலையில் இந்தியாவின் பயமுறுத்தலுக்கு - அச்சுறுத்தலுக்கு அடிபணியக்கூடாது என்பதால் அவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

ஆனால் இதற்குப் பின்னணியில் பல ராஜதந்திரத் தலையீடுகள் உண்டு. எமக்குக் கவலை என்னவெனில் இந்தத் தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்த சில நாடுகள் முக்கியமாக பிரிட்டன் போன்ற நாடுகள் - குவேக்கஸ் சமாதானக் குழுவை இங்கு அனுப்பிய நாடுகள் இதில் மௌனம் சாதித்தமையாகும். அதாவது கிட்டு பற்றிய உண்மையான விடயத்தை தெரிந்துகொண்டும் அவை இந்தியாவைப் பகைக்க விரும்பாமல் மௌனம் சாதித்துள்ளன. இந்தியாவும் தனது தேசிய வல்லாதிக்க நலன்குறித்து எமது தளபதிகளை அழித்துவிட்டு நிற்கின்றது - இதன் ஒட்டு மொத்த விளைவுகள் என்ன? இனியென்ன நடக்கும். உங்களுக்கு ஒன்று தெரியவேண்டும். வெளிநாடுகள் எங்கும் ஒரு பெரிய ஆவேச அலையொன்று பரவுகிறது. எங்கள் மக்கள் மத்தி

யில் வெளிநாடுகளில் இருக்கும் அமைப்புகள்மத்தியில் - இந்த நெருக்கடியை இந்தியாவின் இத்துரோகச் செயலை அம்பலமாக்கும் நோக்கத்தோடு கண்டனப் பேரணிகள் - ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

தமிழ் நாட்டில் இந்தப்பிரச்சினைபற்றிய உண்மையான தகவல் ஏதும் மக்களுக்குப் போகவில்லை. ஏதோ புலிக் கப்பல் ஒன்று தங்களது கடல் எல்லைக்கு வந்து குழம்பிப்போய் நின்றது அவர்களை பிடிக்கப்போனோம் அதற்கு முன்பாக அவர்களே தமது கப்பலுக்குத் தீ வைத்துக்கொளுத்திவிட்டார்கள் என்பதுபோன்ற ஒரு பொய்ச்செய்தியை - புனைகதையைப் பரப்பியுள்ளார்கள். ஆனால் லண்டனிலிருந்தும், பாரிசிலிருந்தும் தொலைபேசிமூலம் சில தமிழகத் தலைவர்களுக்கு விடயத்தை சொல்லியிருந்தோம். கிட்டுவின் சமாதானப் பயணத்தை இந்தியா தடுக்க விடக்கூடாது என்ற நெடுமாறன்போன்ற தமிழகத் தலைவர்களிடம் கேட்டிருந்தோம். ஆனால் இத்தலைவர்கள் இப்போது சிறையில் வைக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

இந்நிலையில் எங்களுக்கு நியாயம் வழங்க எவருமே இல்லையா? இந்த உலக சமுதாயம் இதைப் பார்த்து நிற்கிறதா? என்று நீங்கள் கேட்பீர்கள். ஒன்றை மட்டும் நான் உங்களுக்குச் சொல்லலாம். அதாவது இப்படி எங்களைப்போல எத்தனையோ ஒடுக்கப்பட்ட மக்களினம் மிகவும் மிருகத்தனமாக நசுக்கப்பட்ட மக்களினம் நீதி கேட்டுப் போராடும் மக்களினம் இவர்களை எல்லாம் காப்பாற்றுவது என்ன? இவர்களுக்கு நீதி வழங்கிக் கொடுப்பது என்ன? இது இந்தப் போராட்டங்களின் தார்மீக அடிப்படையே அன்றி வேறில்லை. நாங்கள் தர்மத்தின் அடிப்படையில் தார்மீகத்தின் அடிப்படையில் சத்தியத்தின் அடிப்படையில் ஒரு போரை நடத்துகின்றோம். இந்த சத்தியம்தான் வரலாற்றுச் சக்தி இந்த சத்தியம்தான் மனிதவரலாற்றை நகர்த்தும் அற்புதமான சக்தி இந்த ஆன்மீக அடிப்படையில் - தார்மீக அடிப்படையில் நடத்திச் செல்லப்படும் எமது போராட்டம் இறுதியில் வெற்றிபெறும். எத்தனை சக்திகள் இடைமறித்தலும் இறுதி வெற்றி எமக்கே.

# ஒரு 'ஜனநாயகவாதி'யின் சர்வாதிகாரம்!

(ஜுனியர் போஸ்ட் — 12.11.93)

இரா. ஜவஹர்

*லெனின் 50 – வது பிறந்த நாளையொட்டி செஞ்சேனையின் ஒரு பிரிவினர் அவருக்கு ஒரு அன்பளிப்புக் கொண்டு வந்திருந்தார்கள். என்ன அன்பளிப்பு? ஒரு ரயில் வண்டி நிறையத் தானியங்கள்! துருக்கிஸ்தான் போர் முனையிலிருந்து இந்த ரயிலை அவர்களே மொஸ்கோவுக்குக் கொண்டு வந்திருந்தார்கள்.*

லெனின் உடலைப் புதைத்துவிடப் போகிறார்கலாம்! ரஷ்ய சனாதிபதி யெல்ட்சின் அறிவித்திருக்கிறார்!
எந்த லெனின்?

ரஷ்யாவில் ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியையும், அதை அடுத்து வந்த கெரன்ஸ்கி ஆட்சியையும் ஒரு யுகப்புரட்சியின் மூலம் தூக்கியெறிந்து, உலகின் முதல் சோஷலிச அரசை உருவாக்கிய லெனின்!

வறுமை, வேலையின்மை, விலைவாசி உயர்வு, விபச்சாரம், பெண் அடிமைத்தனம், கலாச்சாரச் சீரழிவு .. போன்ற கொடுமைகள் அனைத்திற்கும் உலக வரலாற்றிலேயே முதன்முறையாக முற்றுப்புள்ளி வைத்தது. அனைத்து மக்களுக்கும் வளமான வாழ்வை அளித்து, உலகின் மாபெரும் வல்லரசாக ரஷ்யா உயர வழிவகுத்த லெனின்!

இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் உட்பட அனைத்து காலனி நாடுகளின் சுதந்திரப் போராட்டத்தையும் ஆதரித்து ஊக்குவித்த லெனின்!

உலகத்தொழிலாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவராக, வழிகாட்டியாக விளங்கிய லெனின்!

அந்த லெனின் உடலை - எழுபது ஆண்டுகாலமாக ரஷ்ய மக்கள் போற்றிப் பாதுகாத்து வந்த லெனினின் உடலை - இப்போது புதைத்து விடப்போகிறாராம் யெல்ட்சின்!

இந்த யெல்ட்சின்தான் 'சனநாயக காவலர்' என்று கூறி அமெரிக்க சனாதிபதி கிளின்டன் 'சபாஷ்' போட்டுக்கொண்டிருக்கிறார்! மாற்றுக் கருத்துக்கொண்டவர் என்பதற்காக லெனினின் உடலைப் புதைத்து நினைவுச் சின்னங்களை அழிக்கும் யெல்ட்சின் சனநாயகவாதி! ஆனால், மாற்றுக் கருத்துக் கொண்டவர்களானாலும், மக்களுக்காகப் பாடுபட்ட தலைவர்களுக்கு நினைவுச்சின்னம் அமைத்துப் பெருமைப்படுத்திய லெனின் சர்வாதிகாரி!

ஆமாம்! புரட்சிக்குப்பின் லெனின் பிரதமரானவுடனே, மக்களுக்காகப் பாடுபட்ட 19 தலைவர்களுக்கு நினைவுச்சின்னம் அமைக்க ஏற்பாடு செய்தார்! இந்தப் பட்டியலில் ரஷ்யத் தலைவர்கள் மட்டுமல்ல; பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து, ஜேர்மனி உட்பட பல்வேறு நாட்டுத் தலைவர்களும் இடம் பெற்றார்கள்! லெனின் முழுமையாக ஏற்றுக்கொண்ட தத்துவம் மார்க்ஷிசம். இந்தத் தத்துவத்தை உருவாக்கியவர்கள் கார்ல்மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ். இருவரும் ஜேர்மனியில் பிறந்து உலகத் தலைவர்களாக மலர்ந்தவர்கள். இவர்களின் பெயர்கள் பட்டியலில் முதல் இடத்தைப் பெற்றதில் ஆச்சரியமில்லைதான்.

ஆனால், லெனின் தனது வாழ்நாள் முழுவதும் விமர்சனம் செய்துவந்த கற்பனா சோஷலிசத்தின் பிரதமர்களான தாமஸ் மூர், வின்ஸ்டன்லி, கேம்பனெல்லா, மெலியர், செய்ன்ட் - சைமன், ஃபூரியர் ஆகியோருக்கும் அராஜகவாதத்தத்துவத்தின் (ஆதிக்கத்துக்கு எதிராகக் கலகம் செய்யக்கூறும் தத்துவம் - ANARCHISM) தந்தையான பக்குனினுக்கும்கூட, அவர்கள் மக்கள் நலனுக்காகப் பாடுபட்ட உன்னதத் தலைவர்கள் என்ற காரணத்துக்காக நினைவுச் சின்னம் எழுப்ப ஏற்பாடு செய்தார் லெனின்!

ரஷ்யப் புரட்சியின் முதலாவது ஆண்டு விழாவின்போது 1918-ல் - இந்த நினைவுச்சின்னம் மொஸ்கோவிலும், பிறகு மற்ற நகரங்களிலும் எழுப்பப்பட்டன. இப்படி மாற்றாருக்கும் நினைவுச் சின்னம் வைத்திருந்த லெனின், தனது பிறந்தநாளைக்கூட விழாவாகக் கொண்டாட அனுமதித்ததில்லை. ஒரே ஒரு விதிவிலக்கைத் தவிர! அவரது 50-வதுபிறந்தநாள் மட்டும் மொஸ்கோ நகரில் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகக் கூட்டத்தில் இருந்த அரங்கத்தில் 1920 ஏப்ரல் 10-ல் ஒரு பொதுநிகழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டது!

சக தோழர்கள் அளவுக்குமீறி வற்புறுத்திய காரணத்தால் லெனின் தனது ஆட்சேபனையை வாபஸ் பெற்றுக்கொண்டாலும், அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள திட்டவட்டமாக மறுத்து விட்டார்! ''என்னைப் புகழ்ந்து பலர் பேசுவதை நானே உட்

கார்ந்து கேட்கும் தண்டனையை எனக்குத் தராதீர்கள்!" என்று அவர் கூறிவிட்டார்! அன்றைய தினம் அவர் ஓய்வு எடுத்துக் கொள்ளவும் இல்லை. வழக்கம்போலவே அரசு அலுவல்களில் மும்முரமாக ஈடுபட்டார். அன்று நடந்த ஒரு சுவையான சம்பவம்.

லெனின் 50-வது பிறந்த நாளையொட்டி செஞ்சேனையின் ஒரு பிரிவினர் அவருக்கு ஒரு அன்பளிப்புக் கொண்டுவந்திருந் தார்கள். என்ன அன்பளிப்பு? ஒரு ரயில்வண்டி நிறையத் தானி யங்கள்! துருக்கிஸ்தான் போர்முனையிலிருந்து இந்த ரயிலை அவர்களே மொஸ்கோவுக்குக் கொண்டுவந்து இருந்தார்கள். ஆனால் "இந்தத் தானியம் வறட்சிப் பகுதிகளில் உள்ள தொழி லாளர்களுக்குத் தேவை" என்று கூறி அரசின் உணவு விநியோகத் துறையின் மொஸ்கோ அதிகாரிகள் இந்தத் தானியத்தைக் கட் டாயக் கொள்முதல் செய்துவிட்டார்கள்! செஞ்சேனைப் பிரி வினர் லெனினை நேரில் சந்தித்துப் புகார் செய்தார்கள். உடனே லெனின் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பேசினார். "தானியம் தேவையென்றால் நீங்களே விவசாயிகளிடம் சென்று கொள்முதல் செய்யவேண்டும். மாறாக, இராணுவத்தினர் விவ சாயிகளிடமிருந்து கொள்முதல் செய்துகொண்டு வாங்கிவரும் தானியத்தை நீங்கள் கட்டாயக் கொள்முதல் செய்வது தவறு. இந்தத் தானியத்தை அவர்கள் எனக்கு அன்பளிப்பாகக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நகரங்களிலுள்ள தொழிலாளர் வீட்டுக் குழந்தைகளுக்கு நான் விநியோகிக்கப்போகிறேன். எனவே, உடனே இந்தத் தானியத்தை திருப்பிக் கொடுத்து விடுங்கள்" என்று பிரதமர் லெனின் கூறினார். ஆனால், அதி காரிகள் அசரவில்லை! "தொழிலாளர் வீட்டுக் குழந்தைகளுக் குத் தானியம் எவ்வளவு முக்கியமோ, அதைவிட அதிகளவுக்கு வறட்சிப் பகுதியிலுள்ள தொழிலாளர்களுக்கும் தானியம் முக் கியம். எனவே, தானியத்தைத் திருப்பித் தர முடியாது!" என்று அச்சமின்றிக் கூறினார்கள் அதிகாரிகள்! உடனே அந்த அதிகாரி கள் அனைவரையும் "தண்ணி இல்லாத காட்டுக்கு" மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்கவில்லை பிரதமர் லெனின்! இரு தரப்பு வாதத்திலும் உள்ள நியாயத்தை உணர்ந்து சமரசம் செய்துகொண்டார் அவர்! தானியத்தின் பாதி நகரக் குழந்தை களுக்கு; மீதி வறட்சிப்பகுதித் தொழிலாளர்களுக்கு!

இந்தப் பிரச்சினைக்கு இப்படித் தீர்வு கண்டபோது அன்று மாலை 6.00 மணி. அடுத்து தொழிலாளர் கவுன்சில் கூட்டம். அதையடுத்து, இராணுவக் கவுன்சில் கூட்டம் பின்னர், அமைச் சரவைக் கூட்டம்! இதற்கிடையில், பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறும், அவரைச் சந்திக்கத் தொழிலாளர்கள் ஆர்வத்துடன் திரண்டிருப்பதாகவும், அவர்களை ஏமாற்றக் கூடாதென்றும் லெனினிடம் ஆள் மாறி ஆள் வற்புறுத்திக் கொண்டேயிருந்தார்கள்! தொடர்ந்து அவர் மறுத்துக்கொண்டே யிருந்தார்! கடைசியில், "பேச்சாளர்கள் எல்லாம் பேசி முடித்து

விட்டார்கள். இறுதியாக, இசை நிகழ்ச்சி தொடங்கவிருக்கிறது. இப்போதாவது நீங்கள் அங்கு வந்து தொழிலாளர்களைச் சந்திக்கவேண்டும்'' என்று லெனினிடம் கடைசி வற்புறுத்தல்! அதற்குப் பணிந்து, நிகழ்சிக்குச் சென்றார் லெனின்! லெனினைக் கண்ட தொழிலாளர்கள் ஆரவாரம் செய்து லெனின் பேசவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

லெனின் பேசினார்.

''தோழர்களே! இரண்டு விடயங்களுக்காக உங்களுக்கு நான் நன்றி கூறவிரும்புகின்றேன். எனக்கு வாழ்த்துக்கூறியதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக, இந்தப் பாராட்டுப் பேச்சுகளை நான் கேட்கும் கட்டாயத்திலிருந்து என்னை விடுவித்ததற்காக மிக அதிகமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்!'' என்று கூறினார்லெனின்!

தொடர்ந்து பேசிய லெனின், மாற்றுக் கருத்துக் கொண்ட காட்ஸ்கி என்ற தலைவரின் தீர்க்கதரிசனத்தைப் பாராட்டி நீண்ட நேரம் பேசினார். கடைசியில், ''முதற்கட்ட வெற்றிகளை மட்டுமே நாம் இதுவரை பெற்றிருக்கின்றோம். சோஷலிசப் புரட்சியின் அரசியல், பொருளாதார இலட்சியங்கள் அனைத்தையும் நாம் செயல்படுத்தி விட்டோம் என்று மிகையாக மதிப்பிட்டு விடக்கூடாது. தலைக்கனம் கொண்டு விடக்கூடாது. அப்படி நாம் கர்வம் கொண்டால் அது மிகவும் முட்டாள்தனமானது. கேவலமானது, கேலிக்குரியது! இத்தகைய அபாயத்தை நாம் எப்போதும் கவனத்தில் கொண்டு அடக்கத்துடன் தீவிரமாகப் பாடுபட வேண்டும்'' என்று கூறி முடித்தார் லெனின். அவ்வளவுதான்! மனிதர் தன்னைப் பற்றி ஒரு வார்த்தை – ஒரு வார்த்தை என்றால் ஒரு வார்த்தை – பேசவில்லை! அவர் சிறைப் பறவையாக வாழ்ந்தது, நாடு கடத்தப்பட்டது. தலைமறைவாக வாழ்ந்தது. சாரின் விளிம்பை அடிக்கடி சந்தித்தது, புதிய சூழ்நிலைக்கேற்ற புதிய தத்துவ, அரசியல், பொருளாதார, கலாச்சாரக் கொள்கைகளை உருவாக்கிய புரட்சிக்குத் தலைமை தாங்கியது, பிரதமர் ஆனபிறகும் தனக்கென்று சொந்தமாக ஒரு குடிசைகூட இல்லாமல் வாழ்ந்தது. நாட்டின் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் அரை ரொட்டியுடன் வாழ்ந்த காலத்தில் பிரதமரான தானும் அதே அரை ரொட்டியுடன் வாழ்ந்தது .. என்று சொல்லி நியாயமாகப் பெருமைப்பட்டுக் கொள்ள கோடி விஷயங்கள் இருந்தபோதும் அதுபற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை அவர்!

அந்த மாமனிதர் லெனின் உடலை இப்போது புதைத்து விடப் போகிறார்களாம்! இது யெல்ட்சினுக்கு லாபமாக இருக்கலாம். நட்டம் மனித சமுதாயத்திற்குத்தான்!

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# நகரமயமாக்கல் - மனித இனத்திற்கு அருட்கொடையா அல்லது அழிவா?

(த ஐலண்ட் — 7.9.93)

*நாங்கள் வாழும் இந்த உலகம் நீர், நிலம், காற்று நெருப்பு மற்றும் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் வஸ்த்துக் களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த சமபங்காக சுழலுகின்ற சூழலால் உண்டாகும் இஸ்தரத்தன்மை உயிரினங் களுக்கு மிகவும் முக்கியமானது. இப்படியான சூழல் அமையா விடின் உயிரினங்களுக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி விடும். இயற்கையாகப் பெறக்கூடிய சுற்றோட்ட வஸ்த்துக் களைப் பெற்றுக்கொள்ள நகரங்கள் உதவுவதில்லை. ஆகை யால் இந்தப் பூமியில் உள்ள உயிரினங்களுக்கு பெரிய தாக்கத்தை விளைவித்துவரும் இது, ஒரு அச்சுறுத்தலாகவும் அமைந்துவிடும்.*

கெஸ்பவா நகரம் உங்களை வரவேற்கின்றது. 200 மீற் றர் தொலைவிலிருந்து மோட்டார்கார்களில் வருபவர் ஒருவர் தெருக்களிலும், வீதிமருங்கிலும், வீடுகளிலிருந்து அப்புறப்படுத் தப்பட்ட குப்பைக்குவியல்களை மாடுகளும், நாய்களும் இங்கு மங்குமாகக் கிளறி பரப்பப்பட்டிருப்பதைக் காணலாம். (இதனை ஒரு புதினமாக 'த ஐலண்ட்' பத்திரிகை அண்மையில் வெளி யிட்டது.)

கெஸ்பவாவுக்குள் நுழையும்போது அங்கே பெரிய குப்பைக் குவியலைக் காணலாம். கொழும்புக்கு உள்ளேயும், வெளியே யும், உள்ள வீதிகளில் இந்தமாதிரியான குப்பைக் குவியல்களை விதம் விதமான அமைப்பில் பார்க்கலாம். இந்தக் குப்பைக் குவி யல்களை அகற்றும் பிரச்சினை கொழும்பு நகரங்களிலும் அத னைச்சூழ்ந்துள்ள நகரங்களிலும் திகைப்பூட்டும் கேள்விகளை எழுப்பியுள்ளது. குப்பைக் குவியல்களை அப்புறப்படுத்தும் வேலை ஒரு பிரச்சினையாக இப்பொழுதும் கொழும்பின் பெரும் பகுதி களில் வளர்ந்துகொண்டிருக்கிறது.

கொழும்பு கட்டிடங்களால் மட்டும் உயர்ந்ததல்ல. பல பக்கங்களாலும் பரவி நிற்கின்றது. ஏராளமான மாடிக் கட்டிடங்கள் வதிவிடமாகவும், மற்றைய தேவைகளுக்குமாகத் தோற்றியுள்ளன. பிரியந்தலை, கடவத்தை, மாபோபே, பாணந்துறை ஆகியன இப்பொழுது நகரமயமாக்கப்பட்டுள்ளன. இந்த இடங்களில் நிலப்பரப்பு வாங்குவது கஸ்டமாகும். அத்துடன் அங்குள்ள நிலங்கள் அதிக விலையுள்ளதாகவும் இருக்கிறது. இதேபோல மற்றும் கண்டி, காலி, இரத்தினபுரி, மாத்தறை, குருநாகல் ஆகிய நகரங்களிலும் வளர்ச்சியடைந்துள்ளன.

2000 வருடத்தில் உலக சனத்தொகையில் 47 வீதத்தினர் நகரப்புறங்களில் வாழ்வார்கள் என நம்பப்படுகிறது. இதில் அநேகமானோர் அபிவிருத்தியடைந்த நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கும். முன்னைய 1940 இல் ஒரு வீத நகரமக்களின் சனத்தொகை 1980 ம் ஆண்டில் 10% நகர மக்களின் சனத்தொகையுடன் ஒப்பிடும்பொழுது எவ்வளவு பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பதைப் புரியலாம். அத்துடன், உலகத்தின் மற்றைய நகரத்தின் வளர்ச்சி எவ்வளவு கூடியுள்ளது என்பதை வியப்படையவும் வைக்கும்.

நகர வாழ்க்கை மிகவும் செயற்கையானது. எல்லா வகையான அத்தியாவசியமான பொருட்கள், நீர், உணவு, கட்டிடப் பொருட்கள் வெளிஇடங்களிலிருந்துதான் கொண்டுவரவேண்டும். நகரமயமாக்குவதால் இயற்கை வளங்கள், காடுகள், காட்டிலுள்ள வதிவிடங்கள் படிப்படியாக அழித்துவிடப்படும். நகரங்கள் பலமான கட்டிடங்களைக் கொண்டிருக்கும். இந்த நகரங்களில் வசிப்பவர்கள் அதனை அண்டியுள்ள இடங்களிலிருந்து பெறுமதியான பொருட்களை தொடர்ந்து பெற்றுக்கொள்வார்கள்.

நாங்கள் வாழும் இந்த உலகம் நீர், நிலம், காற்று, நெருப்பு மற்றும் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் வஸ்துக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த சமபங்காக சுழலுகின்ற சூழலால் உண்டாகும் இஸ்தரத்தன்மை உயிரினங்களுக்கு மிகவும் முக்கியமானது. இப்படியான சூழல் அமையாவிடின் உயிரினங்களுக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்திவிடும். இயற்கையாகப் பெறக்கூடிய சுற்றோட்ட வஸ்த்துக்களைப் பெற்றுக்கொள்ள நகரங்கள் உதவுவதில்லை. ஆகையால் இந்தப்பூமியில் உள்ள உயிரினங்களுக்கு பெரிய தாக்கத்தை விளைவித்துவரும். இது ஒரு அச்சுறுத்தலாகவும் அமைந்துவிடும்.

உயிரினங்கள் பலவிதமான உடலமைப்புக்களைக் கொண்டுள்ளன. இந்த உயிரணுக்களால்தான் உடம்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. உடலுறுப்புக்கள் சேர்ந்து தசைகளாகின்றன. தசைகள் சேர்ந்து உடப்பாகின்றது. உயிரணுக்களால் மனிதன் உண்டாக்கப்படுகின்றான். மனிதர்கள் ஒரு சனத்தொகையாகின்றனர் சனத்தொகையினர் ஒரு சமூகமாகத் தோன்றுகின்றனர். உயிரினங்

கள் எல்லாம் கூட்டாகச்சேர்ந்து உயிரியல் கோளம் என இந்தப் பூமியில் வாழ்கின்றன.

உயர்ந்த நிலையிள்ள உயிரணுக்கள் எதிராகத் தாக்கப்படு வதுபோல தாழ்ந்தநிலையில் உளள உறுப்புக்களும் தாக்கப்பட்டு சில வேளையில் மரணமடையலாம் என உயிரின வாழ்க்கைச் சூழல் ஆராய்ச்சியாளர்கள் கருதினார்கள். உதாரணமாக ஒரு மனிதனின் உடலுறுப்பு இயங்கத் தவறினால் அவனுடைய தசை களும், உடலுறுப்புகளுக்கும் தாக்கப்பட்டுவிடும். ஒரு சமூகம் நோயினால் கடுமையாகத் தாக்கப்பட்டால் சனத்தொகையி னரின், தனிப்பட்டவர்களின் தசைநார்கள், உடலுறுப்புக்கள் வெகு வாகப் பாதிக்கப்பட்டுவிடும். இப்பொழுது நீர், நிலம், காற்று ஆகிய மண்டலங்களால் உயிரினங்கள் மாசுபடுத்தப்படுமானால், சூழவுள்ள பொருட்கருவிகளும், உயிர்களும் சமபங்கு வெகுவாகத் தாக்சமடைந்துவிடும். நகர இடங்களில்உள்ள பொருள்களை யும் கடுமையாகத் தாக்கிவிடும் என சுட்டிக்காட்டப்படுகின்றது. இன்னும் அநேகமாக நகர இடங்களில் தான் சூழல் மாசுபடு வதால் நகரமயமாக்கப்படுவது மனித இனத்திற்கு ஒருகொடையா அல்லது அழிவா என கேள்வி எழுகின்றது.

மற்றொரு குறிப்பிடத்தக்க விஷயம் ஒருமனிதனின் உடலு றுப்பில தடுக்கமுடியாத தசைவளர்ச்சி ஒன்று உண்டானால், மற்ற முக்கிய உறுப்புக்களின் அமைப்பைப் பூண்டோடு அழித்துவிடும். இதனால் மனிதன் நோய்வாய்ப்பட்டு இறந்துவிடுகிறான். உதா ரணம் (புற்றுநோய்) குறிக்கப்பட்ட தனிநபர்கள் கூட்டாக இருந் தாலும் அவர்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தாவிடின் மற்றைய உயிரணுக்களைத்தாக்கிவிடும். மனிதவர்க்கம் மற்ற உயிரினங்க ளில் செயலினால் வளர்ச்சியடைவதை நகரமக்கள் வெகுவாக ஊக்குவிப்பர். இப்படிச் செய்வதால் உயர்ந்த அமைப்புக்களை அதாவது கட்டு முறை அமைப்புக்களை தாக்கப்பட்டு மனிதத் தன்மையும் முற்றாக ஒழித்துக்கட்டப்பட்டுவிடும் மனிதவர்க்கத் தினரால் கேட்கப்படவேண்டிய கேள்வி நகரங்கள் விரிவடைதல் வேண்டுமா? இது மனித வர்க்கத்தினரை விரிவடையச் செய் யுமா? கி. மு. 332 ம் ஆண்டின் அரிஸ்ரோட்டில் என்பவர் நகரங்களின் வளர்ச்சியாலும் விருத்தியாலும் ஏற்பட்ட கெடுதி களைக் கண்டிருந்தார். அவர் கூறினார் அநேகமக்கள் நினைக்கி றார்கள் அரசு சந்தோசப்படவேண்டுமானால் நகரங்கள் பெரிய தாக இருத்தல்வேண்டும்என்றும். அப்படி அவர்கள்கருதினால் பெரி யது எது சிறியது எது என்னும் எண்ணம் அவர்களுக்கு இல்லை.

யோன் இன்ருவாட் மில் (JOHN STUANT MILL) (1857) கூறினார் கைதொழில் வளர்ச்சி சமுகத்திற்கு என்ன நோக் கத்தை கொடுத்துள்ளது? இந்தக் கைத்தொழில் விருத்தியடையா விடின் மனித சமுதாயம் என்ன நிலையை எதிர்பார்க்கவேண்டி யிருக்கும்,

நகரமயமாக்கல் கைத்தொழில்களை உருவாக்கியது. இந்தக் கைத்தொழில் விருத்தியால் தற்கால பொருளாதாரத்தில் பணம் சேகரித்தல், உற்பத்திகளைப் பெருக்குதல் பொருட்களைக் கொண்டுவருதல் முதலியனவும் நிகழ்கின்றன.

பொருளாதாரத்தின் இயல்பு நகரத்தில் வாழும் மக்களிலும், பொருட்களிலும் தங்கியுள்ளது. பொருளியலின் தன்மை அநேகமாக செல்வந்தர்களில் அக்கறைகாட்டும். ஆகையால் இயற்கையான சிறிய பொருட்களுக்கும் பொருளியல் உதவவேண்டும் என கருதப்படவேண்டும். அண்மையில் றயோடி யானிறோயில (RIO - DE JANEIRO) என்னுமிடத்தில் நடைபெற்ற உலக நாடுகள் கூட்டத்தில் சூழலைப்பற்றி விவாதித்திருந்தார்கள்.

நகரமயமாக்குதலுக்கு உடனடியாக மறுமொழி பகிர்தல் ஒரு பிரச்சினையாகும். ஏனெனில் பலவிதமான முரண்பாடான மறுமொழிகள் வரக்கூடும். மனிதனுடைய சமூக புரட்சி மாற்றங்களால் உண்டாகும் பயன்களை மனத்திற் கொண்டுவருதல் வேண்டும். விவசாயப் புரட்சியினால் வேட்டையாடுபவன் கமக்காரனாக மாறினான். கைத்தொழிற் புரட்சியினால் கமக்காரன் கைத்தொழில் -அதிபர் ஆனான். மனிதன் இந்தப் பூமியில் வாழ வேண்டுமானால் சூழற்புரட்சி உண்டாகவேண்டும். இந்தப் புரட்சியின் அறிகுறிகள் தென்படுகின்றது.

நகரமக்கள் இப்பொழுது நகரங்களை விட்டு கிராமப்புறங்களுக்கு நாடிச்செல்கின்றனர். பிரதானமாக இந்த நிலை அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்படுகின்றது. அநேக மக்கள் நரக வாழ்க்கையினை விட்டு கிராம வாழ்க்கையைத் தேடி கிராமங்களுக்கு செல்லுகின்றனர். அநேகமக்கள் நல்லசூழலை உண்டாக்கும் காரணமாக பல முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அவையாவன கூட்டமாக மரம்நடுதல், காட்டு இயற்கை வளங்களை அழிக்காமலும் இயற்கைச் சூழலை உண்டாக்குதலும், சூழலை மாசுபடுத்தாமல், சட்டத்தைக்கொண்டு தடுப்பதற்கு கட்டாயப்படுத்துதல் என்பனவாகும். நகரமக்கள் சுற்றாடல் பொருள்களை கொண்டுவருவதற்கு கவனம் செலுத்துகிறார்கள். மக்கள் சாதாரண வாழ்க்கை முறையினை கையாளுவதற்கு குறைவாக இறைச்சி சாப்பிட்டு, பொதுவாகனங்களில் பயணம் செய்து நடந்துகொள்கிறார்கள்.

அநேக நகரங்களில்.இப்படியான சூழல்புரட்சி ஒன்று வெற்றியளிக்குமாயின் சுற்றாடலில் பெறுமதியான முறையொன்றைக் கைக்கொள்ளலாம். அநேகமான பெறுமதியான முறைகள் மனித இனத்துடன் தொடர்ந்திருந்தது. ஒரு விரிந்த சுற்றாடல் கல்வி முறைப்பள்ளிக்கூடங்களில் பள்ளிப் பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டும்.

# கணனிகள் எப்படி உரையாடுகின்றன!

(28.08.93)

ஒரு கணக்குப் பொறியின் திறமை அநேகமாக அதனுடைய ஞாபக சக்தியைப் பொறுத்தே உள்ளது. ஒரு கணக்குப் பொறியை அதன் ஞாபகசக்திக்கு மேற்பட்ட பாரிய வேலையைச் செய்ய ஏவுவது சாத்தியமானதல்ல...

உலகிலுள்ள சிறு தொகையிலான கணக்கிடும் பொறிகள் ஒரு நாளில் நியமிக்கப்பட்ட மூலாதார வேலைகள் மாத்திரம் அதாவது கணக்குப் பொறித்தல், தகவல் சேமித்தல் ஆகிய வேலைகளைச் செய்கின்றன என்பதை வெகு சிலரே உத்தேசிக்க முடியும். இரு தலைமுறைகளாகவிருந்த கணக்குப்பொறிகள் ஒரு இடத்தில் நிறுவமுடியாத பெரியளவிலானதும், அதிக விலையுடையதுமாக இருந்தன. தகவல் சேகரித்தலையும் கணக்குப் பொறித்தல் வேலைகள் அல்லாத தேவையான வேலைகளைச் செய்யமுடியாதவைசாகவும் இருந்தன. சரீரத்தால் செய்து முடிக்க பல வருடங்கள் செல்லும் வேலைகளை இவை செய்து முடித்தன. தங்களுடன் வேலைசெய்யும் கணக்குப் பொறியுடன் நட்பு தேவைபட்டிருந்தது. (உதாரணமாகத் தகவலைப் பெறவோ) அவை ஒன்றுக்கொன்று தனித்து வேலை செய்தன. ஆகையால் "தனித்திரு" என்ற பெயரைப் பெற்றன. இன்று ஒரு கணக்குப் பொறி தனித்திருக்க விரும்பினால் அது முடியாத காரியம் ஆகும். ஒரு நாகரீக சமுதாயத்திலிருக்கும் ஒரு மனிதனைட்போலவே ஒவ்வொரு கணக்குப்பொறியும் பல கூட்டுக் கணக்குப் பொறிகளுக்குள் ஒரு பொறியாக அமையவேண்டும். ஒரு கணக்குப்பொறியை பல பொறிகளோடு இருக்கும் தொடர்பை ஒரு தனித்தொடர்பை அகற்றுவதன் மூலம் தொர்டர்பை சுலபமாக விடுக்கமுடியும். இந்தத் தொடர்புமுனை ஒரு கணக்குப் பொறியின் பயனை அதிகரிக்கச் செய்யவல்லது இப்படியே இது தனியே இருக்கமுடியும். ஆனால் சமூகத்திலிருந்து ஒரு மனிதன் தனியே இருப்பதுபோல அந்தப் பொறியால் வெளியுலகிற்கு அதிக பயன் கிடைக்காது.

கணக்குப் பொறிகள் ஏன் கூட்டாக வேலைசெய்யவேண்டும் என்றால் ஒரு தனிக் கணக்குப்பொறி அதற்கு இட்டவேலையை மற்றப்பொறிகளின் உதவியின்றிச் செய்யமுடியாது. ஒரு கணக்குப் பொறியின் திறமை அநேகமாக அதனுடைய ஞாபகசக்தியைப் பொறுத்தே உள்ளது. ஒரு கணக்குப்பொறியை அதன் ஞாபக சக்திக்கு மேற்பட்ட பாரிய வேலையைச் செய்ய ஏவுவது சாத்திய மானதல்ல. அவ்விதமான வேளையில் அது ஒரு மேலாளர் அல்லது ஒரு திறமைசாலியுடன் தொடர்புகொள்ள வேண்டும். இது நாட்டுப்புறத்திலுள்ள ஒரு பொது மருத்துவர் அறிவுரை கோரி ஒரு வைத்திய நிபுணரை அணுகுவது போலாகும். உதாரணமாக நாங்கள் ஒரு வங்கித் தலைமைக் காரியாலயத்தில் சக்திவாய்ந்த பெரிய கணக்குப் பொறியை வைத்திருக்கிறோம் என்று கொள்வோம். இந்த வங்கியின் தொலைவிலுள்ள கிளை ஒன்றில் ஒரு மிகச் சிறிய கணக்குப் பொறி ஒன்று அதனுடைய உள்ளீட்டு வெளியீட்டு அலகுகளோடு இருக்கின்றது. அநேகமான விண்ணப்பங்களின் பின் அந்தக்கிளை வங்கி தன்னிடத்திலுள்ள கணக்குப்பொறி போதுமானது எனக்கருதியது. சில தருணங்களில் அதைவிட அதிக சக்திவாய்ந்த பெரிய கணக்குப் பொறியின் சேவை தேவைப்படும். அப்படியான வேளைகளில் அதனுடைய அட்டவணையையும், புள்ளி விபரங்களையும் தன்னுடைய சிறிய கணக்குப் பொறியின் உள்ளீட்டுப் பகுதியில் நிரப்பி அதை ஒரு தொடர்புச்செய்தி இணைப்பைக் கொண்டு பிரதான கணக்குப் பொறிக்கு அனுப்பவேண்டும். பிரதான கணக்குப்பொறி அந்த அட்டவணையை வகைப்படுத்தி அதன்முடிவுகளை சிறிய கணக்குப் பொறிக்குத் தொடர்புச்செய்தி இணைப்பின் மூலம் அனுப்பி வைக்கும் அந்த முடிவுகளை சிறிய கணக்குப்பொறி தன்னுடைய அச்சிடும் பகுதியை பிரயோகித்து வெளியிடும் 10 கி. மீ விட்டத்தினுள் இருக்கும் கணக்குப் பொறிகளை ஒன்றாக இணைக்கும் பொழுது வேறொரு விதமான தொடர்புமுறை தேவைப்படும். உதாரணமாக ஒரு நிறுவனத்தில் சொற்களை வகைப்படுத்துவதற்கும், கோர்வைப்படுத்துவதற்கும் கணக்குப் பொறி இருக்கும் பொருட் களஞ்சியப்பகுதியில் பொருட்களைக் கட்டுப்படுத்த ஒரு சிறிய பொறியும் கணக்குப் பகுதியில் சம்பளப்பட்டியல் தயாரிக்கவும், வரவு செலவுத்திட்டங்கள் தயாரிக்கவும் முக்கிய வேலைகளுக்கு ஒரு கணக்குப் பெறியையும் வைத்திருக்கும். இந்தக் கணக்குப் பொறிகளுக்குள் கடிதக் கோர்வைகளைப் பரிமாறவும் ஒரு துணை நலப்பொறியின் வேலைச் சுமையைக் குறைத்து மற்றப் பொறிகளுக்கு பங்கிடவும், பகுதிகளுக்கிடையே செய்திகள் பரிமாறவும் பொறிகளுக்கிடையே தொடர்புமுறை தேவைப்

படும். கணக்குப்பொறிகளுக்குள்ளே தொடர்புமுறையை "குறுகிய வட்டத் தொடர்புமுறை" (LOCAL AREA NETWORK) அல்லது நடைமுறை குறி எழுத்துக்களால் (LAN) என்று அழைக்கப்படும். இயந்திரத் தொழிற்சாலைகளில் இயந்திரங்களையும், உற்பத்தி முறைகளையும் கட்டுப்படுத்தவும் தனித்தனி பொறிகளைப் பயன்படுத்தலாம். இந்தக்கணக்குப் பொறிகளைப் பெரிய பொறிகளுடன் தொடர்புமுறையில் இணைத்தால் மேலாண்மை வேலைகளையும் செய்யும். பல தேசங்களில் கணக்குப்பொறி தொடர்புமுறைக்கு எந்தவொரு சர்வதேச விமான சேவையின் கணக்குப் பொறிமுறை பாரிய கணக்குப்பொறிமுறைக்கு ஒரு உதாரணமாகும். இக்கணக்குப் பொறிமுறை விமானப் பயணிகளின் இருக்கைமுன் ஒதுக்கீட்டுக்கும் முக்கியமாகப் பயன்படும். அப்படியான இணைப்புக் கணக்குப்பொறிமுறை அவசியமானது. ஏனென்றால் ஒரு பயணி தன்னுடைய பயணத்தின் போது வெவ்வேறு விமானங்களில் மாறிப் பயணத்தைத் தொடரலாம். அப்போது அவருடைய இருக்கை வசதிகளை முன்னேற்பாடு செய்யவேண்டிவரும். சிலவேளை பலவிதமான சேவைகளும் தங்களுடைய வேறுபட்ட பொறிமுறைகளை ஒன்றுக்கொன்று தொடுத்து விடலாம். இப்படியான முறையால் அடிப்படை இருக்கை ஒதுக்கீட்டு விபரங்கள் பொறிமுறைச் தொடர்புள்ள ஒவ்வொரு கூட்டுறவு விமான சேவைக்கும் பயன்படும்.

இந்தக் கணக்குப்பொறிகள் தொடர் ஒன்றுக்கொன்று உரையாடுவது விநோதமானது. அதற்கு அவை பயன்படுத்தும் அலைவரிசைதான் காரணமாகும். மனிதர் பயன்படுத்தும் இந்தத் தொடர்பு அலைவரிசை சாதாரண தொலைபேசிக் கம்பிகள் அல்லது கட்டுப்படுத்தப்படாத மின்காந்த மிக உயர்ந்த அடுக்கு நிகழ்வுடைய அலைக்குச் சமமான (300 MHZ) நுன் அலை (100 GHZ) அலகில் அலை வழிகாட்டியையும் மின்ம இயக்குவிக்கும் கருவியோடு பாவிப்பது இன்னுமொரு வசதியான முறையாகும். எவ்வாறாயினும் ஒரு கணக்குப் பொறி பூகோளத்தின் இன்னுமொரு பக்கத்திலுள்ள தன்னுடைய நண்பனோடு உரையாட விரும்பினால் அது தனக்கு உதவியாகத் தொலைத் தொடர்பு செயற்கைக் கோளின் உதவியை நாடவேண்டும்.

ஒரு தொலைத்தொடர்பு செயற்கைக் கோளானது ஆகாயத்திலுள்ள இன்றியமையாத நுண்ணலை மறுபடி ஒலிபரப்பும் நிலையமாகும். பூமியிலுள்ள ஒலிபரப்பீட்டுக் கருவியைக்கொண்டு நுண் அலை சமிக்கைகளை அளவான அடுக்கு நிகழ்வெல்லை கதிர்மூலம் பூமிக்கு அனுப்பமுடியும். அந்தச் சமிக்கைகளை

மென்மையான சமிக்கைகள்மூலம் தொடர்பு செயற்கைக்கோள் ஏற்றுக்கொள்ளும் காரணம் வானில் நிலையாகவுள்ள தொலைத் தொடர்பு செயற்கைக்கோள் ஓடுபாதை 3500 கி. மீ. தொலைவிலுள்ளது. பின்பு இந்தச் சமிக்கைகளைக்கூட்டி பூமிக்கு மறுபடியும் அனுப்பி மற்றும் அங்கேயுள்ள கணக்குப் பொறிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும் அந்தச் செயற்கைக் கோளிலுள்ள பிரதான அனுகூலம் என்னவென்றால் அது பூமியிலுள்ள பரந்த இடங்களுக்கும் செல்லக்கூடியது. இப்படியாக அங்குமிங்கும் தெரிவுசெய்யப்பட்ட கணக்குப் பொறிகளுக்கிடையில் ஒலிபரப்பவும் ஏற்கவும் முடியும். ஆனாலும் மனிதரும் கணக்குப்பொறியும் தொடர்புகொள்ளும் வழியில் வித்தியாசம் உண்டு. கணக்குப் பொறிகள் தங்களுடைய மொழியில் செய்திகளை அனுப்புவதே ஒரு பெரிய வித்தியாசமாகும். ஒன்று இரண்டு என்ற இரண்டு எழுத்துக்களால் உருவான இந்த மொழியை "பைனரி" (BINARY) என்று அழைப்பார்கள். புள்ளிகள் கோடுகளாலும் எல்லா எழுத்துக்களையும் "மோரீஸ்" (MORSE) கோவை (CODE) ன் மூலம் விளங்குவதுபோல இந்த ஒன்றையும் பூச்சியத்தையும் முறைப்படுத்தி ஒரு செய்தியையோ, ஒரு பேச்சுக் குரலையோ ஒரு படத்தையோ "பாக்ஸ்" (FAX) முறையில் அனுப்புதல் போன்ற ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு அனுப்பும் எண்ணலை பரப்பீடுமுறை எண்ணலை என்று அழைக்கலாம். எண்ணலை முறைக்கும் அதன் எதிர்முறையான ஒத்த செயலையுடைய அலை அனலோக் அலை (ANALOGIWE) எனப்படும். எண்ணலைக்கும் வித்தியாசம் விளங்கும். தொலைபேசி அலை அனலோக் அலைக்குச் சமமானது. அது தொடர்ந்தும் பலவகையான சைகைகளை அனுப்பிக் கொண்டிருக்கும். ஒருவர் தொலைபேசி மூலம் உரையாடும்போது ஒலி சமிக்கைகள் அந்த இடத்திலேயே மின்னலைகளாக மாற்றப்பட்டு அந்த அலை மூலம் பெருகிச் செலுத்தப்படும். அனலோக் அலையின் மட்டம் முதல் பெறப்பட்ட ஒலி அலையின் பூச்சியத்திலிருந்து அதிகளவு சராசரிக்கு இடையில்மாற்றமடையக்கூடும். மறுபக்கம் ஒரு எண்ணலை பூச்சியத்திலிருந்து எண்களில் மின்கூற்று அலகினால் தரப்பட்ட அலையையே பரப்பும் உதாரனமாக ஒரு சக ஐந்து மின்னலகு அதிர்வு ஒன்றும் சய ஐந்து சக பூச்சியத்திற்குச் சமானமாகும்.

கவனத்தைக் கவரக்கூடிய உண்மை என்ன என்றால் கணக்குப் பொறிகளை இந்தத் தொடர்பு முறையில் எம்மிலும்விட திறமையாகச் செயற்படக்கூடியவை. ஒரு மனிதன் இன்னொருவருடன் உரையாட விரும்பி அந்தத் தொலைபேசியை இன்னுமொருவர் பயன்படுத்தியிருப்பின் அந்த உரையாடல் முடியும் வரையும் அவருக்குத் தேவையான சேவையைப் பெறவோ மாற்று வழியோ இடையாது அவர் நடந்துகொண்டிருக்கும் உரையாடல் முற்றுப்பெறும் வரைக்கும் பொறுத்திருக்க வேண்டும்.

# இருட்டில் ஒரு குருட்டு யுத்தம்

(இந்தியா டுடே நவம்பர் — 1993)

ஜாஃபர் ஆகாவுடன் ஹரீந்தர் பவேஜா

> காஷ்மீரில் பிரச்சினையை உருவாக்கும்படி பாகிஸ்தானை அமெரிக்கா தூண்டிவிடுகிறது என்று குற்றம் சாட்டியதன் மூலம் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டார். இந்த அறிக்கையை பிறகு அரசு அவசர அவசரமாக மறுத்தது.

"காஷ்மீர் மீண்டும் பூமியின் சொர்க்கமாகத் திகழும்" என்று சமீபத்தில் நரசிம்மராவ் கூறினார். இதைவிடப் பரிதாபமான, கொடூரமான வேடிக்கை வேறு இருக்க முடியாது. ஹஸ்ரத்பல் நெருக்கடியை அவரது அரசு கையாளும் விதம் காஷ்மீர் பிரச்சினையை மேலும் மோசமாக்கியிருக்கிறது.

முற்றுகை பற்றிய செய்தி தாங்கிய முதல் அறிக்கை, அக்டோபர் 15-ம் திகதி மாலை அவருக்கு வந்தது. அப்போது அவர் உத்தரப்பிரதேசத்திற்கான தேர்தல் டிக்கெட் ஒதுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார். அவ்வப்போது காஷ்மீர் ஆளுநர்கள் அனுப்பும் மிகையான அறிக்கைகளில் ஒன்று என்று அதை அவர் அலட்சியப்படுத்தினார்.

என். எஸ். ஜி. கமாண்டோக்களை அனுப்பி ஒரு குண்டுகூட வெடிக்காமல் தீவிரவாதிகளைப் புனிதத்தலத்திலிருந்து அப்புறப் படுத்தும் வழியை அவர் தேர்ந்தெடுத்திருக்கமுடியும். இதன் மூலம் தீவிரவாதிகளுக்கு மரண அடி கொடுத்திருக்கமுடியும். மாறாக அவர் தயக்கம் காட்டினார். முடிவெடுக்கும் பொறுப்பை காஷ்மீர் ஆளுநர் கே. வி. கிருஷ்ணாராவிடம் விட்டார். கிருஷ்ணா ராவ் பிரதமரைத்தவிர வேறு யாரிடமும் பேசுவது தன் கௌரவத்திற்கு இழுக்கு என்று கருதுபவர் என்பது ஸ்ரீநகர் மற்றும் தில்லி அதிகாரிகளுக்குநன்றாகத் தெரிந்தசங்கதி. அடுத்தநாள் உள்துறை

செயலர் என். என். வோரா அவரை தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயன்றபோது ஆளுநர் பேசமுன்வரவில்லை. ஸ்ரீநகர் ராஜ்பவனுக்கும், தில்லி பிரதமர் அலுவலகத்திற்கும், உள்துறை அமைச்சகத்திற்கும் ஒழுங்காகத் தொடர்பு ஏற்படுவதற்குள் காலம் கடந்துவிட்டது. தீவிரவாதிகளின் வியூகம் தீர்மானமாகிவிட்டது.

முக்கியமான இந்திப்பகுதிகளில் நடக்கவிருக்கும் தேர்தல் விடயமாக இ, காங்கிரஸ் தலைவர் மும்முரமாக இருந்ததால்தான் முற்றுகை செய்தியை கேள்விப்பட்டபோது அவர் அதை அலட்சியப்படுத்தினார் என்பதை பிரதமர் அலுவலக வட்டாரங்கள் உறுதி செய்கின்றன. மேலும் காஷ்மீர் விவகாரங்களுக்குப் பொறுப்பான உள்துறை இணையமைச்சர் ராஜேஷ் பைலட் அப்போது போடோலாண்ட் பிரச்சினைக்காக அசாம் சென்றிருந்தார். பத்திரிகைமூலம்தான் அவருக்கு முற்றுகை செய்தி தெரிந்தது ரகசியமான ஒரு துரித நடவடிக்கை மூலம் அன்றிரவே அப் பிரச்சினையைத் தீர்த்துவிடவேண்டும் என்று அவர் விரும்பினார் இது விடயத்தில் பைலட்டுக்கும் கிருஷ்ணாராவுக்கும் இடையே ஒரு யுத்தமே நடைபெற்றது. இந்த மனிதரைப்போய் கவர்னராக்க சிபார்சு செய்தோமே என்று பைலட் நொந்து கொள்ளுமளவிற்குச் சண்டை பெரிதாயிற்று.

முற்றுகையே துவக்கியிருக்கக்கூடாது என்று பைலட் கருதுவதால் ஹஸ்ரத்பல் விவகாரத்திலிருந்து அவர் ஒதுங்கியிருப்பதாக உள்துறை அமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன. அவரது பரம வைரியான உள்துறை அமைச்சர் எஸ் பி. சவாண் காஷ்மீரில் பிரச்சினையை உருவாக்கும்படி பாகிஸ்தானை அமெரிக்கா தூண்டிவிடுகின்றது என்று குற்றம் சாட்டியதன் மூலம் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டார். இந்த அறிக்கையை பிறகு அரசு அவசர அவசரமாக மறுத்தது.

இந்தக் குழப்பம் எதுவும் புதிதல்ல. கடந்த சில ஆண்டுகளாகவே காஷ்மீர் விஷயத்தில் அரசு இப்படித்தான் மழுப்பி வருகிறது. தீவிரவாதிகளுடனும் காஷ்மீர் தலைவர்களுடனும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும்படி ஆரம்பத்தில் ராவ், பைலட்டிடம் சொல்லியிருந்தார். காஷ்மீர் குறிதது நீண்ட கால கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும் என்பது திட்டம். ஆனால் இதனால் பைலட்டிற்கும் சவாணுக்கும் இடையே ஈகோ மோதல் உருவாயிற்று. சவாண் பைலட்டின் முயற்சிகளை முறியடித்தார்.

விளைவு: காஷ்மீரில் அரசுக்கு இருந்த ஒரே அரசியல் தொடர்பும் அற்றுப்போய்விட்டது.

மக்களிடமும் தீவிரவாதிகளிடமும் பைலட் தொடர்பை வளர்த்துக்கொண்டார். பேச்சுவார்த்தை துவக்க முயன்றார். சவாணுடனான வேற்றுமைகள் பைலட்டின் முயற்சிகளை நீர்த்துப் போக வைத்தன. என்றாலும் அவருடைய முயற்சிகளுக்குப் பலன் இருந்தது. ஸ்ரீநகரில் காவல்துறை கிளர்ச்சி நடந்தபோது பைலட் அதை வெற்றிகரமாக சமாளித்தார். அவர் இல்லாததால் இப்போது தீவிரவாதிகளுக்கு ரொம்ப வசதியாகப் போய்விட்டது.

எதிர்க்கட்சிகள் ஆளுக்கு ஒரு பக்கமாக நெருக்கியதால் அரசு கிடுக்கிப்பிடியில் சிக்கியது. 370 - வது பிரிவை நீக்குவது உள்ளிட்ட பல கடும் நடவடிக்கைகள் எடுக்கும்படி பா. ஜ. க. நெருக்க, நடுவந்தர மற்றும் இடதுசாரிக்கட்சிகள் அரசியல் ரீதியில் தீர்வுகாணும்படி நிர்பந்தித்தன.

அக்டோபர் 20-ம் தேதியன்று ராவை சந்தித்த சி. பி. ஐ. (எம்) பொதுச் செயலர் ஹர்கிஷன் சிங்சுர்ஜித், அவசரப்பட்டு எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். அதன் பிறகுதான் சவாண் எதிர்க்கட்சிகளுடன் தொடர்பு கொண்டு தேசிய ஒருமைப்பாட்டு மன்றத்தைக் கூட்டினார்.

கூட்டம் நடப்பதற்கு முன்பே பிஜ்பெஹராவில் துப்பாக்கிச் சூடு நடந்துவிட்டது. அது பற்றிய தகவல்கள் தெரிந்தும் அரசு அதை கூட்டத்தில் சொல்லவில்லை. அரசு "உண்மைகளை மறைக்கிறது" என்று பா. ஜ. க. தலைவர் அத்வானி குறைகூற வழிவகுத்தது. இப்படிப்பட்ட தவறையும் மீறி கூட்டத்தில் ஒத்த கருத்து உருவாயிற்று. எவ்விலை கொடுத்தும் புனிதத்தலத்தைக் காக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஹஸ்ரத்பல் நெருக்கடியால் தேர்தல் முடிவுகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என்பதாலும் இதைக் கையாள்வதில் குழப்பம் அதிகரிக்கிறது. இந்த நெருக்கடியைத் தீர்க்கத் தவறினால் அது பா. ஜ. க. விற்கு அனுகூலமாகிவிடுமென்று இ. காங்கிரஸ் அஞ்சுகிறது. "காஷ்மீர் பிரச்சினை இந்து - முஸ்லீம் உறவு குறித்த பிரச்சினையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது" என்று அத்வானி ஏற்கனவே கூறிவிட்டார்.

இன்னும் ஒரு மாதத்திற்கு அரசு தேர்தலைப்பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கும். ஆகவே முற்றுகையால் விளை

102037

யும் பாதிப்பை மட்டுப்படுத்துவது முடியாத காரியமாகிவிடும். முன்பைவிட அதிக உறுதிகொண்ட தீவிரவாதிகளையும் அவர்களை ஆதரிக்கும் கும்பலையும் இனி எதிர்கொண்டாக வேண்டும். புதிய முறைகளைக் கையாளவேண்டும்.

மே மாதத்தில் பைலட் ஏற்படுத்திய ஒருங்கிணைந்த அதிகாரம் குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். அப்போது எம். ஏ. ஜாகி, ஆளுநரின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். இராணுவம், பி. எஸ். பி. உள்ளூர் காவல்துறை ஆகிய அனைத்தும் இவரோடு இணைந்து பணியாற்றவேண்டும் என்பது ஏற்பாடு. ஆனால் இப்போது ஜாகி - இராணுவம் - நிர்வாகம் ஆகியவற்றிடையே உறவு சீர்குலைந்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, காஷ்மீர் குறித்து தெளிவான திட்டம் வகுத்தே ஆகவேண்டும். அந்தந்த நேரத்து நெருக்கடிக்கேற்ப எதையாவது செய்வது என்பதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. முதலில் சவான் - பைலட் லடாயை ராவ் தீர்த்தாக வேண்டும். ராவுக்கும் இது புரிந்திருப்பதாகத் தெரிகிறது. அக்டோபர் 27-ம் திகதி பிரதமர் தலைமையில் நடைபெற்ற உயர் மட்டக் குழுக் கூட்டத்தில் சவானுடன் பைலட்டும் கலந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் பைலட்டிற்கு முழு சுதந்திரம் அளிக்காமல் இப்பிரச்சினையைத் தீர்ப்பது சுலபமல்ல.

கிருஷ்ணா ராவும், ஜாகியும் மாற்றப்படுவார்கள் என்று சவுத் பிளாக் வட்டாரத்தில் பேச்சு அடிபடுகிறது. இதெல்லாம் நடைபெறும் நேரத்தில் பிரச்சினை மேலும் சிக்கலாகும். அரசு தொடர்ந்து இதுபோலவே சொதப்பிக் கொண்டிருந்தால் காஷ்மீரில் எந்தத் தீர்வும் எடுபடாது என்ற நிலை விரைவிலேயே உருவாகிவிடும்.

## ராஜதந்திரம் நம்பகத்தன்மை குறைந்தது

இந்தியாவை நெடுநாட்களாக குலை நடுங்கவைத்த ஒரு பீதி நிஜமாகிவிட்டது. ஹஸ்ரத்பல் முற்றுகையால் காஷ்மீர் விவகாரம் சர்வதேச பிரச்சினையாகி, பாகிஸ்தானுக்கு சாதகமான சூழ்நிலையும் உருவாக்கிவிட்டது போல் தோற்றமளித்தது. வோஷிங்டனிலும், நியூயோர்க்கிலும், பிரசல்ஸிலும், இஸ்லாமாபாத்திலும் எழுந்த கூர்மையான கண்டனங்களுக்கு எதிராக இந்தியா கொடுத்த விளக்கங்கள் எடுபடாமற் போயிற்று. அமெரிக்காவின் பார்வையில் துரிதமாக ஒரு மாறுதல் ஏற்பட்டுப்

போனது, ஸ்டேட்டிபார்ட்மென்டிலிருந்து வந்த அறிக்கைகள் தெரிவித்தன. காஷ்மீர் முழுவதுமே சர்ச்சைக்குட்பட்ட இடம் என்று அமெரிக்கா கருதுவதாகத் தோன்றியது. "அங்கோலா விலிருந்து காஷ்மீர் வரையிலும் இன, மத குழுக்களிடையே ரத்தம் தோய்ந்த உள்நாட்டு யுத்தம்" நடப்பதாக அதிபர் கிளின்டன் விடுத்த அறிக்கை இந்த எண்ணத்தை உறுதி செய்தது.

அப்பட்டமான தீவிரவாதி என்று இந்திய அரசால் கருதப் படும் அப்துல்கானி லோனுடன் அமெரிக்கா கடந்த 18 மாதங் களாகத் தொடர்பு வைத்துள்ளது என்பதையும் அமெரிக்க அரசு துணைச் செயலர் ராபின் ராஃபேல் ஒப்புக்கொண்டார். இதைக் கேட்டதும் இந்திய தூதரக அதிகாரிகள் ஆடிப்போய் விட்டார்கள். "காஷ்மீர் பற்றிய அமெரிக்காவின் கொள்கையை வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்" என்று இந்திய அதிகாரி ஒருவர் வேண்டினார்.

"காஷ்மீர், இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின் போது தீர்மானிக்கப்படாமல் இருந்த பகுதி" என்று அமெரிக்காவில் பாகிஸ்தானின் நிரந்தர பிரதிநிதியாக இருக்கும் ஜம்ஷெட் கே. ஏ. மார்க்கர் நாடாளுமன்றத்தில் கூறியபோது இந்தியா விற்கு மேலும் சங்கடம் ஏற்பட்டது.

## ஜூலியஸ் ஸீஸர்:- காரணம் நீக்கப்படவேண்டும்

புகழ்பெற்ற ரோமாபுரிச் சக்ரவர்த்தி ஜூலியஸ் ஸீசர் ஒரு முறை தனது விரோதி ஒருவர் எழுதிய கடிதக்கட்டைக் கண் டார். ஸீசர் இவற்றை வாசிக்காமலே தீயிலிட்டார்.

இவரது நண்பரொருவர் இவரிடம் கூறினார். "இக்கடிதங் களை வாசியாமல் நீங்கள் தீயிட்டது சரியல்ல. இதை எழுதிய வர் தங்களது எதிரி என்பதை உறுதிப்படுத்துவதற்கு இது நல்ல தொரு சான்று" என்றார்.

ஸீசர் தனது நண்பருக்கு நன்றிசெலுத்திவிட்டுப் பின்வரு மாறு உறுதியுடன் கூறினார். "நான் எப்பொழுதும் கோபம் கொள்ளாமல் இருக்க முயற்சிக்கின்றேன். எனது எண்ணப்படி, கோபத்திற்குக் காரணமாக உள்ளதை நீக்கவேண்டும். ஏனெனில் அப்பொழுது தான் நீர் முற்றாகக் கோபங்கொள்ள மாட்டீர் என்று.

# உதிரி உறுப்புக்கள்: விரைந்து பரவும் நோய்

(யுனெஸ்கோ கூரியர் — அக்டோபர் 1993)

பொர்னார்ட் தியோ

*பெர்னார்ட் தியோ, சிங்கப்பூரைச் சேர்ந்தவர்; மெல் போனிலுள்ள (ஆஸ்திரேலியா) யாரா இறைமையியல் ஒன்றியத்தில் அறிவியல் இறைமையியலும், உயிரியல் அறவியலும் கற்பிக்கிறார்.*

தற்போதைய மருத்துவத்தின் விந்தை யாதெனில், மனித உடலில் அல்லது சரியில்லாத உடல் அமைப்புகளை செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட அமைப்புகளைக்கொண்டு செயல் புரிய வைப்பதே; இதயத்தைத் தொடர்ந்து இயங்கவைக்க உதவும் கருவி, காது கேளாதோர் கேட்க உதவும் பொறி அமைவு, கலவைப் பிரிப்பு எந்திரம் ஆகியவை இதனுள் அடங்கும். உடல் உறுப்புகளினை மாற்றம் செய்வது அறிவார்ந்த வழிமுறைகளின் முன்னேற்றமுமாகும். அவதிப்படும் நோயாளிகளுக்கு நம்பிக்கை தரும் ஒரே மருந்து உடல் உறுப்பு மாற்று சிகிச்சையேயாகும்.

மனிதர்களின் உடல்நலப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது, மனித இனத்தின் சிறந்த அம்சமாகும். நாம் சரியானமுறையில், இதனை அணுகாவிட்டால் மனித இனங்களுக்குள்ளே பிரிவு ஏற்படும். நல்லதொரு மனப்பாங்கு மறைய ஆரம்பிக்கும். மனிதத் தன்மையில்லாத ஒரு மோசமான சூழ்நிலை ஏற்படும்.

உடல் உறுப்பு மாற்றம் சரியானமுறையில் கொள்கைக்கும் கோட்பாட்டிற்கும் உகந்த சூழ்நிலையில் நடக்கும்போது அதன் மூலம் குணமான மனிதன், மனித இனத்தின் ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகின்றான். நாடு தழுவிய அல்லது உலகம் தழுவிய ஒற்றுமையும், கருத்துப் பரிமாற்றமும் இல்லையென்றால்

வெற்றிகரமாக உடல் உறுப்பு மாற்றுச் சிகிச்சையைச் செய்யவே முடியாது. சான்றாக தடுப்புச் சக்தியூட்டிகளின் வளர்ச்சியும் பரவலும் உடல் உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்கு முக்கிய காரணியாகும். இது உலக அளவில் நோய்வாய்ப்பட்டோர்களின் அவல நிலையைமாற்றி நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க உதவுகிறது.

மற்ற உடல் நலப்பராமரிப்பில் இருந்து. உடல் உறுப்பு மாற்றுச் சிகிச்சையானது முற்றிலும் மாறுபட்டது. இதற்கு சமுதாயத்தின் பங்கு பெரிதும் தேவைப்படுகிறது. ஓர் அரசானது சட்டரீதியில் உடலுறுப்பு மாற்றுத் திட்டங்களுக்கான கோட்பாடுகளை வகுக்கவேண்டும். பொதுமக்களின் ஆதரவு ஒரு சிறிது குறைந்தாலும் இத்தகைய திட்டமானது செயலற்றதாகிவிடும்.

தேவையான உடல் உறுப்புகளை மக்களிடமிருந்து நன்கொடை பெறுவதற்காக உரித்தான திட்டங்களை, அநேக நாடுகள் திட்டியுள்ளன. இன, மொழி, சமூகநிலை, மதநம்பிக்கை ஆகியவை உடல் உறுப்புகளை நன்கொடையாகத் தரும் சிந்தனையை அழித்திடக்கூடாது. ஒரு மனிதனின் பெருமையை இது சீர்குலைக்குமென்று பொதுமக்கள் கருதினால், இவ்வெண்ணத்திற்கு ஆதரவு ஏதும் இல்லாமல் அனைத்துச் செயல்களுமே செயலற்றதாகிவிடும்.

இதே சமயத்தில் எல்லாவிதமான உடல் பாகங்களையும் நன்கொடையாகப் பெற்று வாழ உதவும் உடல் உறுப்பு மாற்றுச் செயலில் ஒரு விதமான அபாயமும் ஏற்படவாய்ப்புண்டு. தேவை ஒன்றையே முன்வைத்து மனிதர்களை மனிதர் ஏமாற்றும் செயலுக்கு வழிகாட்டிட இது பெரிதும் உதவிடும்.

மனித உடல் உறுப்பு மாற்றுச் சிகிச்சையில் வியாபார நோக்கம் விரைந்து பரவும்போது மனித இனத்தின் பெருமைக்கு பேரிடியாக அமைகிறது. ஏதோ பொருள்களைக் கடையில் வாங்குவதுபோல, மனித உறுப்புக்களை விற்கவும், வாங்கவும் ஏற்பட்டுள்ள சூழ்நிலையானது மிகவும் மோசமானதொன்றாகும். இதனால் வீண்பித்தலாட்டங்களும், ஊழலும் இதற்காக நிறுவப்பட்ட கழகங்களில் ஏற்படும்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



மனித உடல் உறுப்புகளை வியாபாரம் செய்யும்போது மனி இனத்திற்குள்ளே பிளவை ஏற்படுத்தும். இதை வாங்குவதற் விற்பதற்குமுரிய ஒப்பந்த முறையில் மனிதத்தொடர்பைச் சி குலைக்கும். இதனால் ஏழை மக்கள் ஏமாற்றப்பட்டு, செல்வ தர்கள் பணத்தின்மூலம் யாரிடமிருந்தும் எதையும் பெறலா என்றநிலை ஏற்பட்டு விடுகிறது. உலக நல்லெண்ண சிந்தனை இது முற்றிலும் மாற்றுகிறது. பணக்கார நாடுகளிலிருக்கும் செ வந்த நோயாளிகள் ஏழைநாடுகளிலிருக்கும் ஏழைகளிடமிருந் உடல் உறுப்புக்களைப் பெறுவதற்காகப் பணத்தை மூலதனமாக் கின்றனர். சில சமயங்களில் உடல் உறுப்பு மாற்றத்திற்கா ஏழைநாடுகளிலிருப்போரை செல்வந்த நாடுகளுக்கு அழைத்து சென்று வியாபாரம் செய்யும் மோசமான சூழ்நிலை உருவா வருகிறது. இத்தகைய பழக்கமானது பணக்கார நாடுகளிலிரு கும் பிரச்சினையை ஏழை நாடுகளுக்கு இறக்குமதி செய்வதுட ஏழைமக்களை ஏதோ ஒரு வணிகப் பொருளாக கருதும் தா மையான மனப்போக்கும் ஏற்படுகிறது. இத்தகைய பிரச்சின களை தீர்ப்பதக்கு உலக அளவில் ஒற்றுமைச் சிந்தனை வேண்டு

இத்தகைய சூழ்நிலையைக் கட்டுப்படுத்த, ஒவ்வொரு அ சும் சட்டங்களைக்கொண்டு வரவேண்டும். ஏழைநாடுகளிலிருந் உடல் உறுப்புக்களை வாங்குவதற்கு நாடுவிட்டு நாடு செல் வர்களை உடனடியாக கண்டிக்கவேண்டும்.

இவையனைத்திற்கும் மேலாக, சரியாகக் கூடிய மனிதனா வன் தீவிரமான அண்மைப்பார்வையிலே அவனது கண்ணோ டத்தைச் செலுத்துவான். தனது உடலைப் பாதுகாப்பதற்கா எதையும் செய்யக்கூடிய சித்தனையும், பணத்தைக்குறித்தே மனித வாழ்வின் உயர்வைப் பற்றிய எண்ணமில்லாத மன போக்கும், மனிதனானவன் என்றாவது ஒருநாள் இறக்கத்தா வேண்டும் என்ற உண்மை நிலையிலிருந்து மாறுபட்டும் மனி வாழ்வின் நிரந்தரமான உண்மைப் பொருளை உணர்வதற் உயிரோடு இருப்பதுதான் ஒரேவழி என்று எண்ணுவதும் இ தகைய கண்ணோட்டத்தை வலுவாக்கும்.

32910c

போது மனி
ங்குவதற்கு
டர்பைச்
டு, செல்வ
ம் பெறலா
சிந்தனை
ிருக்கும் செ
களிடமிருந்
முலதனமாக
்றத்திற்கா
அழைத்து
லை உருவா
நாடுகளிலிரு
செய்வதுட
கருதும் தா
பிரச்சி
ன வேண்டு

வொரு அ
டுகளிலிருந்
நாடு செல்

மனிதனா
கண்ணோ
ாப்பதற்கா
தக்குறித்தே
ல்லாத மன
இறக்கத்தா
ட்டும் மனி
உணர்வதற்
றுவதும் இ

# தேர்ந்த கட்டுரைகள்

## புலிகளின் வீரம்
## புதிய சரித்திரம் எழுதும்

புறநானூற்றில்தான் தமிழர் தம் வீரங்களைப் பற்றி கேள்விப்பட்டு அதிசயித்திருக்கிறோம். அதை நடைமுறையில் உலகிற்குச் செய்து காட்டிய, சமீபகாலத் தமிழனின் வீரமறவர் போராட்டத்தில் புதிய சரித்திரம் எழுதிய புலிகள் இயக்கம் ன்ற விதத்தில் நான் பெருமைப்படுகிறேன்.

— கேண..ப கிட்டு



நகரியில் சிறீலங்கா இராணுவ முகாம் தாக்குதலின்போது தமிழீழ
டுதலைப்புலி வீரர்களினால் கைப்பற்றப்பட்ட இராணுவ வண்டி
ளில ஒன்றான T – 55 ரக "டாங்கி"யுடன் விடுதலைப்புலி வீரர்கள்.